Registered as a News Paper

# ஈழநாதம்

Eelanatham வெள்ளி நாதம்

விலை: 12.00



**C.B.I** புகையிரத நிலையம் முன்பாக
வவுனியா
2005 A\L மாணவர்களுக்கான
கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்
காலம் : 05.01.2003 (ஞாயிற்றுக்கிழமை)
9.00 A.M
நிர்வாகி
திரு.எஸ்.தவபாலன்
(பௌதிகவியல் ஆசிரியர்)
(2664)

நாதம் -13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | கார்த்திகை 12 | 27-12-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 312



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 27.12.2002

## கருத்தில் கொள்ளவேண்டிய கருத்து

'சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பலன் பாதிக்கப்பட்டோரைச் சரியானமுறையில் சென்றடைய வேண்டியது அவசியமாகும். இல்லையேல் இப்பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதில் எந்த வகையான பயனுமில்லை' என்று அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பொருளாதார ஆலோசகரும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சர்வதேசப் பொறுப்பாளருமான ஜோய் மகேஸ்வரன் கூறியிருப்பது சமாதான பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள அனைத்துத்தரப்பினராலும் மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

சமாதானம் - அமைதி என்பது பாதிக்கப்பட்ட மக்களின் புனர் வாழ்வு, புனரமைப்பு, ஆகியவற்றுடன் தொடர்பு கொண்ட ஒன்றேயாகும்.

மக்களின் அரசியல் உரிமைகள், வாழ்வியல் உரிமைகள் ஆகியவைகளே சமாதானப் பேச்சுவார்த் தைகளின் இறுதி இலக்காக இருந்தாலும், அதற்கு இடையில் அவர்கள் தமது இயல்பு வாழ்க்கையை மீளவும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை உரிய முறையில் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகும்.

மக்களின் இயல்பு வாழ்க்கையின் போது அவர்களுக்கு கிடைக்கும் திருப்தியும், மகிழ்ச்சியுமே சமாதானம் குறித்த மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு நம்பிக்கையும் வலுவும் தரும் மூல காரணிகளாகும்.

இதனைச் சரியாகப் புரிந்து கொள்வதன் மூலமே புனர்வாழ்வு நடவடிக்கைகளின் போது மக்களின் தேவைகளை சரியாக இனங்கண்டு, அவர்களின் பாதிப்புக்களைச் சரியாக மதிப்பீடு செய்து கொண்டு அவர்களுக்கான உதவிகள் உரியவகையில் கிடைப்பதற்கு வழி செய்யமுடியும்.

இன்று சர்வதேச சமூகம் சமாதன நடவடிக்கைகளுக்கும் பெருமனதுடன் பரந்த அளவில் தமது ஆதரவை வழங்க முன்வந்துள்ள வேளையில், போரினால் பாதிப்புற்ற வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி மண்ணினதும், மக்களினதும் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்கென பெருமளவில் நிதியையும் ஏனைய உதவிகளையும் வழங்குவதற்குத் தயாராக உள்ளதாக அன்றாடம் கிடைக்கும் செய்திகள் மூலமும், நடக்கும் நிகழ்வுகள் மூலமும் அறியக்கூடியதாக உள்ளது. இது ஒரு மகிழ்ச்சிகரமான, நம்பிக்கைதரும் விடயமாகும்.

கடந்த இரு தசாப்தகால யுத்தம் ஏற்படுத்திய தாக்கங்கள், இழப் புக்கள், அழிவுகள், அனைத்தும் உரியவ்வகையில் சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு காலத்தின் தேவைகளுக்கேற்ப அவை மீள்கணிப்பீடு செய்யப்பட்டு, கிடைக்கப்பெறும் உதவிகள் சரியானவகையில் பயன்படுத்தப்படவேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

பொதுவாக உலகெங்கும் இத்தகைய உதவிகள் போரினாலோ, வேறு அனர்த்தங்களினாலோ பாதிக்கப்பட்ட மக்களை உரியமுறையில் சென்றடைவதில்லை. என்பதும், வழங்கப் படுவதாக உறுதியளிக்கப்படும் நிதியுதவிகளும் உரிய வகையில் சரியாக வழங்கப்படுவதில்லையென்பதும் பரவலாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளாகும்.

உண்மையும் அதுவேதான். மனிதாபிமான நோக்குடன் சர்வதேசத்தினால் வழங்கப்படும் உதவிகள், பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படுவதாக பிரசாரப்படுத்தப்பட்டாலும், உண்மையில் அவ்வாறு முழுமையாக எதுவும் செய்யப்படுவதில்லை.

மாறாக அவ்வுதவிகள் வேறு நோக்கங்களுக்கு திசைதிருப்பப்பட்டு விடுகின்றன. இது ஒன்றும் ரகசியமான விடயமல்ல.

இந்த உதவிகள் வழங்கப்படும் முறைகளிலும், விநியோகிக்கப்படும் நடைமுறைகளிலும் எல்லாநாடுகளிலும் எவ்வளவோ ஊழல்கள், மோசடிகள் அரசியல்வாதிகளாலும், நிர்வாகிகளாலும், நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்படுவதாக வரும் செய்திகள் மிகைப்படுத்தல்களல்ல.

இதனால் தான் உலகெங்கும் அகதிகள் மற்றும் பாதிக்கப்பட்டோரின் நிலைமைகள் அப்படியே இருக்கின்றன... வழங்கப்படும் உதவிகள் எங்கே போகின்றன என்பது விடைகாணமுடியாத புதிருமல்ல...
பரிதாபத்திற்குரியவர்கள், பாதிக்கப்பட்ட மக்களாகவே தொடர்ந்து இருக்கின்றார்கள். இதுவே மிகப் பெரிய துயரம்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் பாதிக்கப பட்டவர்களுக்கு உரியமுறையில் சென்றடையும் வழியினை தடுப்பதும் ஒரு மனித உரிமை மீறல் நடவடிக்கையேயாகும்.

எமது பகுதிகளில் எமது மக்களுக்கு அந்த நிலை ஏற்படக் கூடாது என்பதே முக்கியமானதாகும். இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் விழிப்பாக இருப்பதுடன் திரு. மகேஸ்வரன் கூறிய விடயத்தை மனதில் கொண்டு செயற்படவும் வேண்டும்.

இது ஒரு வரலாற்றுக் கடமையுமாகும்.

தூரனின் பார்வை

## பிணக்கப்பாடுகளுடன் ஒரு இணக்கப்பாடு...
## சமகால அரசியல் நிலைமையில் ஒரு அவசியமே

**சமாதான** பேச்சுவார்த்தை முயற்சிகளிலும் ஏனைய அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளிலும் ஐக்கிய தேசிய முன்னணியும், பொதுசன ஐக்கிய முன்னணியும் இணக்கப்பாட்டுடன் செயல்படுவது தொடர்பாக இருதரப்பினரிடையேயும் புரிந்துணர்வினை உருவாக்கும் நோக்குடன் மற்றொரு சுற்றுப் பேச்சவார்த்தைகள் நடந்து வருவதாக செய்திகள் கூறுகின்றன.

இந்த வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், சிறிலங்கா சனாதிபதியின் வெளிவிவகாரங்களுக்கான ஆலோசகரான லக்ஷ்மன் கதிர்காமரும் முதல் தடவையாகச் சந்தித்து பரஸ்பர விடயங்கள் குறித்து பேசிக் கொண்டதையடுத்து, எதிர்வரும் புத்தாண்டின் முதல்வாரத்தில் சிறிலங்காவின் சனாதிபதியும், பிரதமரும் சந்தித்துப் பேசுவதற்கான முடிவும் எட்டப்பட்டுள்ளது.

இன்றைய சமாதான முன்னெடுப்புகளின் பன்முக நகர்வுகள் அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் வேகமாகவும், நம்பிக்கையூட்டும் வகையிலும், இதேவேளை சர்வதேச சமூகத்தின் பரந்து விரிந்த ஆதரவுடனும் மேற்கொள்ளப்பட்டு வருவது உண்மையில் சந்திரிக்காவினால் சகித்துக் கொள்ள முடியாத ஒன்றேயாகும்.

தனது சமாதானத்திற்கான யுத்த முனைப்புகள் படுதோல்வி கண்டதையடுத்துப் பொதுத் தேர்தலிலும் தோல்வியைச் சந்தித்த சந்திரிகா, அமைதிப் பேச்சுவார்த்தைகள் குறித்து விடுதலைப் புலிகளும், ரணில் தலைமையிலான அரசும் இப்படி ஒரு தீவிரமான நிலைப்பாட்டை எடுக்கும் என எதிர்பார்த்திருக்கவில்லை.

கடந்தகாலப் பேச்சுவார்த்தைகளைப் போன்று இந்த பேச்சுவார்த்தைகளும் இழுபறிநிலையில் இணக்கப்பாடுகளோ, முடிவுகளோ ஏதுமின்றி, புரிந்துணர்வுகள் அற்ற நிலையில் ஒரு சில மாதங்களிலோ அல்லது ஆரமபக்கட்டங்களிலோ கூட முறிந்து போய்விடும் என்றே சந்திரிகாவும் ஏனைய எதிர்க்கட்சிகளும், பேரினவாத சக்திகள் நம்பினார்கள்.

ஆனால் அவர்கள் அனைவரது எதிர்ப்பார்ப்புகளும் அபிலாஷைகளும் பொய்த்துப் போகும் வண்ணம், போர் நிறுத்தம் புரிந்துணர்வு உடன்படிக்கை, பிரதான போக்குவரவுப் பாதைகள் திறப்பு, பொருளாதாரத் தடை நீக்கம், விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்கம், தாய்லாந்து சந்திப்பு, தாய்லாந்துப் பேச்சுவார்த்தை, ஒஸ்லோ பேச்சுவார்த்தை அரசியல் தீர்வுக்கான வழிமுறைகள் தொடர்பான ஆரம்பகட்ட இணக்கப்பாடுகள் எனக் கட்டம் கட்டமாக உறுதியான திட்டமிடல்களுடன் சமாதான நடவடிக்கைகள் முன்னேறிவருவதையும், அதற்கு உலக சமூகம் பேராதரவை வழங்கி வருவதையும் சந்திரிகாவின் ஜனாதிபதித்தனத்தினால் எச்சவகையிலும் சகித்துக் கொள்ள முடியாமல் இருப்பதென்பது வெளிப்படையான விடயமாகும்.

இது சந்திரிகாவின் தலைமையிலான ஏழாண்டுகால-கடந்த-பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கால இனப்பிரச்சினை தொடர்பான சகல விதமான சர்வதேச ரீதியிலான கருத்துருவாக்கங்களையும், விடுதலைப்புலிகளுக்கு எதிரான பிரசாரங்களையும், போர் முனைப்புடன் கூடிய அணுகுமுறைகளையும் முற்றாக புறக்கணித்த - நிராகரித்த நடவடிக்கைகளேயாகும்

நோர்வேயின், சமாதாநகர்வுகளுக்கான மத்தியஸ்தம் சந்திரிகாவின் பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் தான் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் நோர்வே விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்படுகின்ற தென்ற அபாண்டமான குற்றச்சாட்டினை முன்வைத்து அந்த மத்தியஸ்த முயற்சிகளுக்கு முன்னோடியாகச் செயற்பட்ட நோர்வேயின் எரிக்சொல்ஹெய்ம் அவர்களை அந்த முயற்சிகளில் இருந்துபின் தள்ள முயன்றவர் சந்திரிகாவேதான்.

இப்போது வரலாறு மாறிவிட்டது. பிரச்சினை சந்திரிகாவின் கைகளைவிட்டு வெகு தொலைவுக்குச் சென்று விட்டது. இந்தச் சமாதான நகர்வுகளுக்கு தனது ஆதரவினை முழுமையாக (மனப்பூர்வமாக இல்லாது போனாலும்) தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு பலமுனையாலும் ஏற்பட்டுள்ளதை அவர் தெளிவாகவே உணர்ந்து கொண்டுள்ளார். சமாதானப் பேச்சு வார்த்தைகளின் இறுதி இலக்கான நிரந்தரமான அரசியல் தீர்வு என்பது எந்தவகையில் அமையுமோ - என்ன வடிவத்தை எடுக்குமோ என இப்போதைக்கு எவராலும் எதிர்வுகூற முடியாது விட்டாலும் கூட, இன்றைய நகர்வுகளைத் தடுத்து நிறுத்தவோ, குழப்பவோ, அல்லது அதில் பங்களிக்காமல் ஒதுங்கியிருக்கவோ பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட எவரும் நினைத்தால் அது அவர்களுக்கே பாதிப்பாக அமையும் என்ற ஓர் இக்கட்டான தேசிய மற்றும் புவிசார் அரசியல் சூழல் உருவாக்கியுள்ளது.

இந்த சிக்கலுள் உள்நாட்டு மற்றும் வொளிநாட்டு ஆதிக்க சக்திகள் அனைத்துமே மாட்டியுள்ளன. சிறிலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினை - பயங்கரவாதப் பிரச்சினை என்றெல்லாம் பிரசாரம் செய்யப்பட்டு, இந்தப்பிரச்சினை ஆயுதமுனையில் - ராணுவ நடவடிக்கைளின் மூலம் ஒடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு இந்திய மற்றும் சர்வதேச ஆயுத இராணுவ உதவிகளுடனும், நிபுணத்துவ ஆலோசனைகளுடனும் மேற்கொள்ளப்பட்ட சகல யூகங்களும் வியூகங்களும் சிதைந்து போனதின் பின்னர் இப்போது இது மூன்றாந்தரப்பு மத்தியஸ்த உதவியுடன், சர்வதேச சமூகத்தின் அனுசரனை மற்றும் ஆதரவுடன் சிறிலங்கா அரசு, விடுதலைப்புலிகளுடன் நேருக்கு நேர் பேசித்தீர்க்க வேண்டிய ஆரசியல் பிரச்சினையாக விஸ்பரூபம் பெற்றுள்ளது.

நோர்.வேயின் அனுசரணை மீண்டும் கோரப்பட்டு பேச்சுவார்த்தைகளுக்கான இருதரப்பினரின் விருப்பும், அங்கீகாரமும் தெரிவிக்கப்பட்டது முதல் வெளிப்படையாக'சமாதானத்திற்கு ஆதரவு' என்ற குரலில் சந்திரிகா பேசி வந்தாலும் கூட மறைமுகமாக இப் பேச்சு வார்த்தையினை எந்தெந்த வகையில் குழப்பமுடியுமோ அந்தந்த வழிவகைகளை யெல்லாம் கையாண்டு குழப்பவே முயன்று வந்துள்ளார்.
இதற்கு அவர்-

ஜே.வி.பி - மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற தனது பேரினவாத வெறிகொண்ட தோழமைக் கட்சிகள் மூலமும், ஏனைய அமைப்புகள் மூலம் ஊர்வலங்கள் கூட்டங்கள், பேரணிகள், பிரசார நடவடிக்கைகள், பிரசுர வெளியீடுகள் என்று எத்தனையோ சமாதான எதிர்ப்புச் செயற்பாடுகளை இன்னமும் கூட மேற்கொண்டே வருகிறார்.

தனது அரசியல் மற்றும் வெளிவிவகார ஆலோசகர்களான அநுராபண்டாரநாயக, லக்ஷ்மன் கதிர்காமர், ஆகியோர் மூலமான தூது நடவடிக்கைகள் மற்றும் துரோக நடவடிக்கைகள்மூலம் அயல்நாடுகள் வெளிநாடுகளில் தனது தனிப்பட்ட செல்வாக்குடன் கூடிய அரசியல் உறவுகளை இந்த சமாதான நகர்வுகளை எதிர்ப்பதற்காகக் கோரியுள்ளார்.

தனது நிறைவேற்றுஅதிகார பலத்தைக் காட்டி ரணில் தலைமையிலான அரசினை கலைக்கவோ, அல்லது அதன் அதிகாரங்களைப் பிடுங்கவோ தன்னால் எந்தக்கணத்திலும் முடியும் என அச்சுறுத்தி வருகிறார்.

நோர்வேயின் உயர்ஸ்தானிகரை நாடுகடத்துவது அதாவது திருப்பி அனுப்புவது சம்பந்தமாக ஆலோசனை செய்து வருவதாக மிரட்டல் விடுகிறார்.

விடுதலைப்புலிகளும் அரசும் எட்டப்போகும் அரசியல் தீர்வினால் இந்தியாவின் நலன்கள் பாதிக்குமென்றும் இந்தப்பிரச்சினையில் இந்தியா முழுமையாகத் தலையீடு செய்ய வேண்டும் மென்றும், இந்தியாவுக்கு மந்திராலோசனை கூற 'அநுரா' தலைமையில் ஒரு குழுவை அனுப்பி இந்தியாவை குழப்பி, அதன்மூலம் சமாதான முயற்சிகளுக்கு இடையூறு செய்ய விரும்புகிறார்.

இப்படியாக அவர்தனது விடயங்களை மாற்றி மாற்றிச் சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்க முயன்றாலும் கூட, அந்த நடவடிக்கைகள் அவருக்கு எதிர்பார்த்த பலன்களைக் கொடுக்கவில்லை என்பதே அவருக்கு இன்றுள்ள எரிச்சலும் துயரமுமாகும்.

பொதுவாக தென்பகுதிமக்கள் அமைதியையும் சமாதானத்தையும் பெருமளவில் விரும்புகிறார்கள் என்பது இன்று தெளிவான விடயமாகும். ரணில் அரசின் முயற்சிகளுக்கு அவர்கள் கட்சிரீதியாக இல்லாது விட்டாலும் அமைதிக்காக பெருமளவில் ஆதரவை வழங்குபவர்களாகவே உள்ளனர். தங்கள் வீட்டு வாசலுக்கு இனிமீண்டும் 'போர்' மூலமான அச்சுறுத்தல்கள், துயரங்கள் வருவதை அவர்கள் முற்றாக விரும்பவில்லை எனவே ஆட்சியை அதிகாரமூலம் கலைத்து, புதிய அரசை அமைக்கவோ, சமாதான முயற்சிகளை இடைநிறுத்தவோ பெரும்பான்மையினத்தவரின் ஆதரவு அவருக்கு கிடைக்கப்போவதில்லை. மாறாக தேசிய மட்டத்திலான அவருக்கு எதிரான எதிர்ப்பலை அதிகரிக்கவே செய்யும்.

ஆட்சியைக் கலைத்துவிட்டு புதிய தேர்தலை எதிர்கொள்ள

(15ம் பக்கம் பார்க்க...)

# யுத்த நிறுத்தத்திற்கு ஒரு வயது



**- நிலாந்தன் -**

**யுத்த** நிறுத்தத்திற்கு ஒரு வயது. நம்பமுடியவில்லை.

யுத்த நிறுத்தத்திற்கு ஒரு வயது. கடந்த வருடம் கிறிஸ்மஸ் நாளையொட்டி புலிகள் ஒரு தலைப்பட்சமாக அறிவித்த யுத்த நிறுத்தம் இந்த ஆண்டு கிறிஸ்மஸ் நாளுடன் ஒரு வயதைப் பூர்த்தி செய்திருக்கிறது.

உலகிலேயே அதிகம் போரியல் அதிசயங்கள் நிகழ்ந்த யாராலும் சரியாக புரிந்து கொள்ளப்படாத; எந்த ஒரு போரியல் பாடப்புத்தகத்துக்குள்ளும் வராத; மிக நூதனமான ஒரு போர்க்களத்தில் கடந்த ஒரு ஆண்டு காலமாக பீரங்கிக் குழாய்கள் குளிர்ந்து போயுள்ளன.

வரும் ஆண்டின் நடுப்பகுதியோடு அவை நிரந்தரமாகக் குளிர்ந்து போய்விடும் என்று பிரதமர் ரணில் விக்கிரசிங்க கூறுகிறார்.

எந்த அடிப்படையில் அவர் இவ்வாறு கூறுகிறார்? நாட்டு மக்களைத் திசை திருப்பவா? அல்லது குறிப்பாகத் தமிழர்களைச் சமாளிக்கவா? அல்லது சமாதானத்தின் சூத்திரக்கயிறை தம்வசம் வைத்திருக்கும் மேற்கு நாடுகளினால் வழங்கப்பட்ட மிக ரகசியமான ஒரு நிகழ்ச்சி நிரலின் படி அவர் அவ்வாறு கூறுகிறாரா?

ஆனால் களயதார்த்தம் என்று ஒன்றிருக்கிறதே?

யுத்தத்திற்குத் திரும்பிச் செல்லமுடியாத ஒரு முதிர் பருவத்தைச் சமாதானம் அடைவது என்பது பரஸ்பரம் நம்பிக்கைகள் எளிதில் உடைந்து போக முடியாத அளவுக்கு உறுதிப்படும் போதே சாத்தியம்.

இதை களயதார்த்தத்தின் அடிப்படையில் கூறினால் தமிழர் நிலத்தின் இயல்பு வாழ்க்கையை ஆகக்கூடிய பட்சம் மீளக்கொண்டு வரவேண்டும்.

இதை இன்னொரு விதமாகவும் சொல்லலாம் - அதாவது தமிழர் வாழ்வின் எல்லா நிலைகளிலிருந்தும் ஆயுதப்படைகளின் பிரசன்னம் அகற்றப்படவேண்டும். தமிழ்ப்பகுதிகளை ஆகக்கூடிய பட்சம் ராணுவமயநீக்கம் செய்ய வேண்டும்.

ஆனால் இதற்குப்படைத்தரப்பு சம்மதிப்பாகத் தெரியவில்லை.

யுத்தத்திற்கு திரும்பிச்செல்ல முடியாத ஒரு வளர்ச்சிக் கட்டத்தை சமாதான முயற்சிகள் அடைந்த பின்னரே தமிழ்ப் பிரதேசங்கள் மீதான ராணுவத்தின் பிடியைத் தளர்த்த முடியும் என்று யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலுமுள்ள படைத்துறை உயர் மட்டங்கள் கருதுவதாகக் கூறப்படுகிறது.

ராணுவத்தைப் பின்னெடுப்பதோ அல்லது ஆட்செறிவைக் குறைப்பதோ, தமது மையப்பகுதிகளைப் புலிகளுக்குத் திறந்து விடும் என்றும் சில சமயம் சமாதானம் முறிந்து யுத்தம் வெடித்தால் அது புலிகளுக்கே சாதகமாக அமைந்துவிடும் என்றும் அவர்கள் நம்புவதாகக் கூறப்படுகிறது.

இப்பத்தி எழுதப்படும் வரை கிடைத்த தகல்களின் படி உயர் பாதுகாப்பு வலயங்களில் சனங்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான ராணுவத்தின் முன்மொழிவுகள் புலிகளிடம் கொடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இது தொடர்பாக யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ள கருத்துக்கள் ராணுவத்தின் மேற்சொன்ன அச்சங்களைப் பிரதிபலிப்பனவாகக் காணப்படுகின்றன.

அதில் அவர் அழுத்திக்கூறும் அச்சம்- ''படைத்துறைச் சமநிலை''இங்கு அவர் படைத்துறைச் சமநிலை என்று கருதுவது யுத்தகள வலுச்சமநிலையைத்தான்.


இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டுவரும் பொருட்டு பிரசன்னத்தை பின்னெடுப்பதோ அல்லது ஆட்செறிவைக் குறைப்பதோ எதுவும் தற்சமயம் உள்ள படைத்துறைச் சமநிலையைப் புலிகளுக்குச் சாதகமாக மாற்றிவிடும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

ஆனால் சம்மந்தப்பட்ட எல்லோருமே ஒப்புக்கொள்ள வேண்டிய ஒரு முக்கிய விசயம் என்னவென்றால்- யுத்தகால வலுச்சமநிலையே சமாதானத்துக்குமான வலுச்சமநிலை என்றாகிவிடாது என்பது.

யுத்தகள வலுச்சமநிலையில் இருந்து தான் சமாதானத்திற்கான தேவைகள் வருகின்றன. ஆனால் யுத்தத்தின் வலுச்சமநிலை வேறு சமாதானத்திற்கான வலுச்சமநிலை வேறு. யுத்தகள வலுச்சமநிலை சமாதானத்திற்கான ஒரு தொடக்கம் மட்டுமே.

சமாதானம் தன்கென்று ஒரு புதிய வலுச்சமநிலையைக் கேட்கின்றது.

அந்த வலுச்சமநிலையானது யுத்தத்திற்கான காரணங்களை அகற்றும் விதத்தில் அமையும். பெருமளவு சிவிலியன் நோக்குநிலையில் இருந்தே. இப்புதிய வலுச்சமநிலை உருவாகும். நிச்சயமாக ராணுவ நோக்குநிலையில் இருந்தல்ல.



இயல்பு வாழ்க்கையை உருவாக்குவதற்கும் ஒரு சிவில் சமூகத்தை கட்டி எழுப்புவதற்குமான ஒருஅடிப்படையான சமாதானத்திற்கான வலுச்சமநிலை அமையும்.

ஏற்கனவே அது உருவாகத் தொடங்கிவிட்டது. ராணுவத்தின் பிடியில் இருக்கும் பிரதேசங்களில் புலிகளின் பிரசன்னமும் சர்வதேச அரங்கில் அரசிற்குச் சமமாக புலிகள் பங்குபற்றுவதும் இத்தகைய ஒரு புதிய வலுச்சமநிலை உருவாவதைக் காட்டுகின்றன.

இப்படி ஒரு வளர்ச்சிக்குப் போனபிறகும் பழைய ஓராண்டுக்கு முந்திய படைத்துறை வலுச்சமநிலை பற்றிப் பிரஸ்தாபிப்பது என்பது சமாதானத்தின் வளர்ச்சி விதிகளைப் புறக்கணிப்பதாகவே அர்த்தப்படும்.

இந்நிலையில் அடுத்த ஆண்டின் நடுப்பகுதியளவில் சமாதானத்தை முறிக்கப் படவியலாத ஒருமுதிர்ச்சிக் கட்டத்துக்கு எடுத்துச் செல்வது எப்படி?

இடையில் உள்ள ஆறு மாத காலத்துக்குள் ரணில் ராணுவத்தின் மீதான பிடியை படிப்பயாக இறுக்கும் ஏதாவது ரகசியத் திட்டங்களை வைத்திருக்கிறாரா?

அவ்வாறாயின் - சனாதிபதியும் முப்படைத்தளபதியுமாகிய சந்திரிகாவை கையாள வேண்டுமே?

இந்த இடத்தில் சில தமிழ் விமர்சகர்கள் - குறிப்பாக சமாதானத்தைக் குறித்த அச்சங்களையும், ஐயங்களையும் பெருப்பித்துக் கதைப்பவர்கள் - ஒரு விசயத்தை சுட்டிக்காட்டுகிறார்கள்.

சிங்களத்தலைவர்கள் எப்பொழுதும் தமிழர்களுக்கு எதையாவது தர விரும்பாத போதெல்லாம் எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்றன. மக்களைக் குழப்புகின்றன என்று பழியை எதிர்க்கட்சிகளின் மீதே போடுவதுண்டு.

இம்முறை ரணிலும் தமிழர்களுக்கு அவர் தரவிரும்பாதவற்றுக்கெல்லாம் சந்திரிகாவைச் சாட்டுகிறார் என்று மேற்படி விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

அவர்சமாதானத்துக்கு உண்மையிலேயே விசுவாசமாயிருந்தால் முதலில் சந்திரிகாவுடனான யுத்த முனையை மூட வேண்டும் என்றும் ஆனால் அதற்கவர் தயாரில்லை என்றுமவர்கள் கூறுகிறார்கள்.

சந்திரிக்காவுடன் விட்டுக் கொடுத்துப் பேரம் பேசத்தயாராயில்லாத அவர் புலிகளுடன் விட்டுக்கொடுத்து பேரம் பேசுவது என்பது தமிழர்களுக்குக் கொடுக்க விரும்பாதவற்றுக்கெல்லாம் சந்திரிகாவின் மீது பழியைப் போட்டுவிட்டுத் தான் தப்பித்துக்கொள்ளும் ஒரு தந்திரமே என்றுமவர்கள் கூறுகிறார்கள். இதிலவர் புலிகளையும் கையாளலாம் அதேசமயம் சந்திரிகாவையும் சர்வதேச அளவில் தனிமைப்படுத்திவிடலாம் என்றுமவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

மேலும் அரசியலமைப்புத் திருத்தச்சட்டங்களைக்கொண்டு வந்த போது அவை நீதிமன்றத்தில் பிரச்சினைக்குள்ளாகலாம் என்று பெரிய நிபுணர்கள் எனப்பட்டவர்களாலேயே, ஏன் ஊகிக்கப்பட முடியாமற்போயிற்று என்றும் அவர்கள் கேட்கிறார்கள்.

இத்தகைய ஒரு பின்னணில் யுத்த நிறுத்தத்தை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்குக் கனிய வைக்காமல் இப்படியே காலத்தை நீடிப்பது என்பது புலிகளின் போர்ச்சக்தியை நிர்த்துப் போகவைக்கும் ஒரு பொறியே என்றுமவர்கள் எச்சரிக்கிறார்கள்.



ஆனால் சமாதானத்தைக் குறித்து நம்பிக்கையோடு பேசும் அவதானிகளும் விமர்சகர்களும் மேற்படி அச்சங்களும்,ஐயங்களும் மிகைப்படுத்தப்பட்டவை முற்கற்பிதங்களின் பாற்பட்டவை என்று கூறுகிறார்கள்.

இம்முறை சமாதானத்தின் பலமே அதற்குள்ள சர்வதேச ஆதரவுத்தளம் தான் என்பதை சுட்டிக்காட்டும் அவர்கள் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச அளவில் எவ்வளவுக்கெவ்வளவு பலசர்லியாகவும் வீழ்த்தப்பட முடியாதவராகவும் காணப்படுகிறாரோ அந்தளவுக்கு கொழும்பில் பலவீனமானவராகக் காணப்படுகிறார் என்றும் கூறுகிறார்கள்.

இதன்படி தான் பலமாக நிற்கும் தளத்தில் அவர் அதிகம் நெகிழச்சியாக நடந்துகொள்வதை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

புலிகள் சர்வதேச அந்தஸ்தைப் பெற உதவியமை என்பது முன்பு எந்த ஒரு இலங்கையரசாங்கமும் செய்திராத ஒன்று இது தமிழர்களுக்கு எதிரான சிங்கள அரசுகளின் பிரதான மூலோபாயத்திலுண்டாகிய ஒரு பெரிய பெயர்ச்சி.

இதன்படி தற்சமயம் புலிகளுக்குச் சாதகமாகத் திரண்டுவரும் சர்வதேச அபிப்பிராயப் பின்புலத்தில் சிலசமயம் சிங்களவர்களால் சமாதானம் முறிக்கப்படுமிடத்து சர்வதேச சமூகம் புலிகளுக்குச் சாதகமாக நிற்கக்கூடிய வாய்ப்புக்களே அதிகம் உருவாகும் என்றும் சில அவதானிகள் கூறுகிறார்கள்.

எனவே சர்வதேச அரங்கில் புலிகளுடன் மிகவும் நெகிழ்ச்சியாக நடந்துகொள்ளும் ரணில் கொழும்பில் சந்திரிகாவைச் சமாதானத்தால் சுற்றிவளைக்கும் வரை அவருக்கு அவகாசம் தரப்பட வேண்டும் என்றுமவர்கள் கூறுகிறார்கள்.

அதோடு முக்கியமாக யுத்த நிறுத்தத்தை ஒரு பொறியாகப் பாவித்து அதில் புலிகளின் போர்ச் சக்தியைக் கரைத்துவிடும் உள்நோக்கம் ஏதும் ரணிலிடம் இருந்திருந்தால் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஆட்சேர்ப்புக்கு எதிராக வசனங்கள் ஏதும் திட்டவட்டமாகச் சேர்க்கப்பட்டிருந்திருக்கும் என்றுமவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி இருதரப்பும் தமது படைபலத்தைப் பேணலாம். அதாவது ஆட்சேர்க்கலாம்.

எனவே தான் பலமாக நிற்கும் சர்வதேச தளத்தில் ரணில் தனது விசுவாசத்தை நிரூபித்து வருவதால் சமாதான முயற்சிகளைக் குறித்து அதிகம் அச்சமடையத் தேவையில்லை என்பது மேற்படி விமர்சகர்களின் வாதமாயுள்ளது.

இதற்கிடையில் புலிகள் பிரிவினையில்லாத ஒரு தீர்வுகான புறஉருவரையைத் தெளிவாக அறிவித்தபின் சமாதானத்துக்கு எதிரான சக்திகளின் மத்தியில் திடீரென்று ஒரு அணிதிரளல் நிகழத்தொடங்கியுள்ளது. ஏதாவது ஒரு கட்டத்தில் சமாதான முயற்சிகள் முறிந்துவிடும் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்குப் புலிகளின் புதிய நிலைப்பாடு திகைப்பை ஏற்படுத்தியுள்ளது.

பேச்சுவார்த்தையரங்கில் புலிகள் காட்டிவரும் நெகிழ்ச்சிப் போக்கினால் வளரும் உலக அபிமானம் இந்தியாவுக்கு உவப்பானதாயில்லை போலத்தெரிகிறது. இந்தியாவில் உள்ளதைவிடவும் அதிகளவு அதிகாரமுடைய அதிகாரப்பகிர்வு அலகொன்று பரிசீலிக்கப்படுவதையிட்டும் இந்தியா அதிகம் சந்தோசப்படவில்லை போலத்தெரிகிறது.

எனவே கொழும்பில் உள்ள ரணிலின் எதிரிகள் சமாதானத்துக்கு எதிரான பிராந்திய வியூகமொன்றை உருவாக்க எத்தனிப்பது போலத்தெரிகிறது.

இது சர்வதேச அளவில் தனிமைப்படுத்தப்பட்டுவரும் சந்திரிகா பிராந்திய மட்டத்தில் தன்னைப் பலப்படுத்தும் ஒரு புதிய முயற்சியே. இதில் சம்பந்தப்பட்டவர்கள் வெற்றிபெற்றால் சமாதானம் மேலும் சோதனைக்குள்ளாகும்.

இப்பொழுது இலங்கைத்தீவின் சமாதானம் சர்வதேச அளவில் மிகவும் பலமாயுள்ளது. பிராந்திய அளவில் தளம்பிக் கொண்டிருக்கிறது. உள்நாட்டில் யுத்தத்திற்குத் திரும்பிச் செல்ல முடியாத ஒரு முதிர்ச்சிக்கட்டத்தை இனித்தான் அடையவேண்டியுள்ளது.

இந்நிலையில் இவ்வாண்டைப் போலவே வருமாண்டையும் வெறுமனே ஒரு யுத்தநிறுத்த ஆண்டாக நீடிப்பது கஸ்ரம்.

அவ்வாறு நீடித்தால் சமாதானத்துக்கு எதிரான பிராந்திய வியூகத்துட் சமாதானம் சிக்கிவிடும் ஆபத்து உண்டு. ■

# இணைவும் சமாந்தரமுமற்ற பயணம்

## சிறுவர் மற்றும் மாணவர் நலன், உரிமைகள் சம்மந்தப்பட்ட சில பிரச்சினைகள் சிறு கவனக்குறிப்பு

**டிசம்பர்** மாதமென்றால் மாணவர்களைப் பொறுத்தவரையில் அநேகமாகச் சோதனைக்காலம் தான். ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு பத்துவரையிலான மாணவர்களுக்கு ஆண்டிறுதிப் பரீட்சைகள்.. ஆண்டு பதினொன்றுக்கு க.பொ.த. சா/ தரப்பரீட்சை.

இது மாணவர்களுக்கு மட்டுமேயான சோதனைக் காலமோ அதனால் ஏற்படும் பதற்ற காலமோ அல்ல. அது பெற்றோருக்கும் கூட ஒரு சோதனைக் காலம்தான். மழைக்குளிரை மிஞ்சியும் சில வேளைகளில் அவர்களுக்கு வியர்த்துக் கொட்டுகிறது.. அந்தளவுக்கு அவர்கள் பதற்றமடைகிறார்கள்.

டிசம்பரில் மட்டுமென்றில்லாமல் க.பொ.த. உயர்தரப் பரீட்சை, தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சை என்று வரும் போதும்கூட இவர்கள் எல்லோருக்கும் சோதனைக் காலம் தான். மாணவர்களுக்கு பரீட்சையில் வரும் கேள்விகள் சவால். பெற்றோருக்குகோ பெறுபேறுகள் சவால்.

பெரும்பாலான பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளை பந்தயக் குதிரைகளாகவே வளர்க்கிறார்கள். அல்லது அப்படியான சூழலில் வளர்க்க வேண்டியிருக்கிறது.

பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவது என்பது பெரியதொரு ஏற்பாடாகவே இருக்கிறது. மாணவர்களின் அல்லது பிள்ளைகளின் எல்லாக் கவனங்களையும் மட்டுப்படுத்தி சுயவிருப்பத் தேர்வுகளை நிராகரித்துவிட்டு அவர்களைப் பாடப்புத்தகத்தினுள் நுழைத்து வருகிறார்கள்.

இரவு பகல் என்று பாராமல் ஓய்வு உறக்கம் என்பதையெல்லாம் யோசிக்காமல் படிப்பு படிப்பு என்று பெற்றோர்கள் பிள்ளைகளை முடுக்கிவிடுகிறார்கள். பிள்ளைகளில் கூடுதலானவர்களும் மெல்ல மெல்ல இதற்கு இசைவாக்கம் பெற்று 'படிப்பு' என்று இறுகிய இந்த ஒற்றை வழியிலேயே மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடத் தொடங்குகிறார்கள்.

இதிலும் ஒன்றை மிக இலகுவாகவே அவதானிக்கலாம். பாடசாலையில் படிக்கும் கல்வியை விட வெளியே ரியூட்டறிகளிலோ அல்லது தனிப்பட்ட முறையில் பிரத்தியேகமாகப் படிக்கும் கல்வியையோ தான்பெற்றோர்களும் மாணவரும் கூடுதலாக மதிக்கிறார்கள். அதிகம் நம்பியிருக்கிறார்கள்.

பாடசாலைகளில் நடக்கும் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டங்களுக்கோ வேறு பெற்றோர் சந்திப்புக் களுக்கோ உரிய மதிப்பையும் பெறுமதியையும் பெற்றார் கொடுப்பது குறைவு என்கின்றனர் கல்வி அதிகாரிகளும் அதிபர்களும். பொதுவாக பாடசாலைகளுடன் தொடர்பு கொள்ளும் ஆர்வம் பெற்றோரிடம் குறைந்து வருகிறது.

அதேவேளையில் அவர்களின் கவனிப்புப் பெறுமானம் தனியார் கல்வி நிறுவனங்களின் மீதும் தனியான பிரத்தியேக வகுப்பெடுக்கும் ஆசிரியர்களின் மேலும்தான்.

பாடசாலையை ஒரு அங்கீகாரத்துக்கும் பிற சலுகைகளுக்குமான ஒரு களமாகவே நினைக்கிறார்கள். பயன்படுத்துகிறார்கள்.

பரீட்சையின் பெறுபேறுகள் வந்துவிட்டால் அந்தச் சிறப்புக்கு பாடசாலைகள் மட்டும் உரிமை கொண்டாட முடியாத நிலையையும் அவதானிக்கலாம். பல சந்தர்ப்பங்களில் பத்திரிகைகளில் வரும் பாராட்டு விளம்பரங்களில் இதை நீங்கள் கவனிக்க முடியும்.

பாடசாலைகள் ஒரு பக்கமும் தனியார் கல்வி மற்றும் தனிவகுப்பு ஆசிரியர்கள் மறுபுறமும் என வரும் விளம்பரங்கள் போட்டி போட்டு மாணவரின் திறனைப் பாருங்கள் என விளம்பரப்படுத்துகின்றன. சில வேளைகளில் ஒரு மாணவனுக்கோ அல்லது குறிப்பிட்ட ஒரு தொகுதி மாணவருக்கோ இரண்டு மூன்று தரப்பின் பாராட்டு விளம்பரங்கள் வருகின்றன.

இதனைவிட சுற்று வட்டாரத்திலும் அவர்கள் சிறப்புச் சித்தியடைந்த மாணவர் தமது மாணவரே என்பதை நிரூபிக்க முனைந்து அந்தரப்படுவதையும் காணலாம். பல கல்வி நிறுவனங்களில் தம்மிடம் படித்துச் சித்தியடைந்தவர்கள் என பெயர்ப் பட்டியல் தொங்கவிடப்படுகின்றன.

இவற்றினூடாக தமது திறமைகளை நிரூபிக்க ஒவ்வொரு தரப்பும் வலுவாக முனைகின்றன. ஆனால் இந்தப் போட்டியில் தோற்று விடுவது பெரும்பாலும் பாடசாலைகள் தான்.

இங்கே புத்திசாதுரியமாக பெற்றார் ஒரு தந்திரத்தைக் கையாள்கிறார்கள். சித்தியடைந்த பிள்ளைகளின் பெற்றோர் இரண்டு தரப்புக்கும் பாராட்டுக்களையும், பாராட்டு விழாக்களையும் 'கௌரவிப்புக்களை'யும் ஒழுங்குபடுத்திச் செய்து நிலைமையைச் சமாளித்து விடுகின்றார்கள். கவனியுங்கள். சித்தியடைந்த பிள்ளைகளின் பெற்றார் மட்டும்தான். சித்தியடையாத பிள்ளைகளுக்கு யாரும் பொறுப்பெடுப்பதில்லை. அந்தப் பிள்ளைகளை எப்படிக் கையாண்டு சித்தியை நோக்கி, வெற்றியின் பக்கம் அழைத்துச் செல்வது என்ற கவனம் கூடக் குறைவாகவே இருக்கிறது.

சித்தியெய்திய பிள்ளைகளின் பெற்றோர் செய்யும் இந்தக் கௌரவிப்புகள் மெல்ல மெல்ல மதிய உணவு, அன்பளிப்புப் பொருட்கள் என்று வளர்ந்து நகைகள் ( மோதிரம், சங்கிலி) வரையில் வந்திருக்கின்றது இதில் எல்லாம் பெற்றோருக்கு சம்மதமில்லையாயினும் வேறுவழியில்லாமல் அவர்களும் இந்தக் 'கௌரவிப்புகளுக்கு' ஒத்துழைப்பு வழங்கியே தீரவேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது

பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளைச் செய்யவே சிரமப்படும் பெற்றோர் பலரை நீங்கள் அறிவீர்கள். வறுமைக் கொடுமையால் பல பிள்ளைகள் பள்ளிக்கூடம் போக முடியாமல் இருப்பதும் உங்களுக்குத் தெரியும். பள்ளிக்கூடம் போகமுடியாத பல சிறுவர்கள் மிகக் குறைந்த சம்பளத்துக்கு மிகக்குறைந்த வயதில் பல இடங்களில் வேலை செய்கிறார்கள்.

சிறுவர் நலன், சிறுவர் கல்வி, சிறுவர் உரிமைகள், சிறுவர் உளவியல், சிறுவர் எதிர்காலம் என்றெல்லாம் கூறி இயங்குவோர் இந்தப் பிரச்சினைகள் குறித்து எத்தகைய புரிதலுடன் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. எவ்வாறான அணுகுமுறையுடன் இவற்றுக்குத் தீர்வு காண முயற்சிக்கிறார்கள் என்பதும் கேள்வி.

சிறுவர் கல்வி பற்றியும் சிறுவர் உளவியல் பற்றியும் அதிகம் கதைப்போரின் வீடுகளில் பதினைந்து வயதுக்குட்பட்ட ஆண், பெண் பிள்ளைகள் வேலைக்கு நிற்பதைப் பார்த்திருக்கிறேன்.

ஒரு பக்கம் படிக்குமிடத்தில் உள்ள பிரச்சினைகளும் புதிய சம்பிரதாயங்களும் மறுபக்கத்தில் படிக்கவே முடியாத அவலமும் பாசாங்குத்தனங்களின் மாறுபாடான

**வெளிவாசல் பாலன்**

செயற்பாடுகளும்.


ஒருபுறம் இலவசக் கல்வியை சில வசதிகளுக்காக வைத்துக் கொண்டு தனியாக காசுகட்டிப்படிக்கும் கல்வியை நம்பி முக்கியத்துவமளித்து நிற்போர். மறுபுறம் இலவசக் கல்வியைக் கற்கவே பிள்ளைகளை பள்ளிக்கனுப்ப முடியாத நிலையுடையோர்.

மாணவர் நலன் மாணவர்களின் உரிமை என்பவையும் இனி சிறுவர் உரிமைகளைப் போல் வரையறுக்கப்பட வேண்டும்.

இணைவும் சமாந்தரமுமற்ற பயணமாகவே நமது சிறுவர் கல்வியும் எதிர்காலமும் இருக்கின்றது.

இதற்கு -

மெய்யான உடனடிப் புரிதலும் செயலூக்கமும் உடனடித் தேவை.



# மீள்புனரமைப்புச் செய்யப்படாத பாடசாலைகளும் பாதிப்புக்குள்ளாகும் மாணவர் கல்வியும்

**மழை** விட்டும் இன்னமும் தூவானம் விடவில்லை என்பார்கள். அதுபோல் போர் ஓய்ந்தும் சமாதான சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையிலும் போரினால் சிதைக்கப்பட்டு, சேதமாக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களின் பாடசாலைகள் இதுவரை காலமும் முழுமையாக மீள புனரமைப்புச் செய்யப்படவில்லை.

முன்னைய ஆட்சிக்காலத்தில் திட்டமிட்டு அனாகரீகமற்ற செயலாகத் தமிழ் மாணவர்கள் மீதும், பாடசாலைகள் மீதும் கல்வியைச் சிதைப்பதற்காகவே விமானக் குண்டு வீச்சுக்களையும், எறிகணைத் தாக்குதல்களையும் மற்றும் பல இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொண்டு பாடசாலைகளின் கட்டிடங்களை சேதமாக்கியதோடு, தமிழ் மாணவர்களின் கல்வியை சிதைத்தும் உள்ளது.

பாடசாலைகளின் கட்டிடங்கள் மற்றும் மாணவர்களுக்கு ஏதுவான வகையில் போதிய தளபாட வசதிகள் எதுவுமற்ற நிலையில் பெரும் நெருக்கடிக்குள்தான் மாணவர்கள் தமது கல்வியைத் தற்போது தொடர்ந்து கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.


போரினால் சிதைக்கப்பட்ட பாடசாலைகளின் கட்டிடங்கள் ஒரு போராட்ட களமாக இருந்ததையே இன்னமும் நினைவுபடுத்தி காட்சியளிக்கின்றதே தவிர மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஒரு அமைதியான கல்விக் கூடமாக இது அமையாது என்பதேயாகும். இவை மாணவர்களின் மனதில் போராட்ட வடுக்கள் மாறாமல் ஒரு கறைபடிந்த விம்பங்களாகவே இது தினமும் தென்படுகின்றது.

பாடசாலைக்கு மாணவர்கள் செல்லும் போது பெரும் ஆர்வத்தோடு கல்வியைக் கற்க வேண்டும் என்ற சிந்தனையோடு பாடசாலை வளாகத்துள் நுழையும் போதே இக்கட்டடங்கள் அவர்களின் கண்ணில் பட்டு கல்விச் சிந்தனையை மறந்து, கடந்த காலத்தை நினைவுபடுத்தி குழப்பத்திற்குள்ளாகின்றனர்.

இதேபோன்று மாணவர்கள் உற்சாகமாக விளையாடுவதற்கு விளையாட்டு உபகரணங்கள் இல்லாமையினாலும் மற்றும் விளையாட்டு மைதானங்களில் "கண்ணிவெடிகள் கவனம்" எனும் எச்சரிக்கைப் பலகையும் போடப்பட்டு கண்ணிவெடி வயல்களாக இருப்பதுவும் மாணவர்கள் மத்தியில் ஒரு அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றது.

இதேவேளை இராணுவத்தினர் பல இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆக்கிரமித்த பகுதிகளில் பெரும்பாலும் பாடசாலைகள். தான் இராணுவ முகாம்கள், காப்பரண்கள், சோதனைச் சாவடிகளாக இருந்து வந்ததும் தெரிந்ததே.

மாணவர்களின் எதிர்கால வாழ்வைச் சிறப்பாக நிர்ணயிப்பதற்கு அறிவுக் கோட்டையாகத் திகழ்வது



**சீலன்**

பாடசாலைகள்தான் என்பதுவும் மிகையானதல்ல. ஆகவே மாணவர்கள் கல்வியைக் கற்பதற்கு ஆர்வத்தோடு கூடிய கவனம் செலுத்தும் போதிலும் பாடசாலைக் கட்டிடங்கள் ஒரு கல்விக் கூடமாக இருந்து பாதுகாப்பை வழங்குவதைவிட பெரும் சுமையாக, தடையாக இருந்து வருகின்றது.

இதுபற்றி ஒரு . மாணவனின் கருத்து:

போரினால் எனது உடலில் ஏற்பட்ட காயம் மாறிவிட்டது. ஆனால் இந்தப் பாடசாலையின் கட்டிடத்திற்கு ஏற்பட்ட காயம் மாறவில்லை.

இப்படி எத்தனை கருத்துக்கள் மாணவர்கள் மத்தியில் எழுகின்றன.

இதேவேளை, விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் கணனித் துறையில் போதிய வசதிகள் இன்னமும் முழுமையாக செய்து கொடுக்கப்படவில்லை. ஆனால் இப்போது மாணவர்கள் இப்படி எத்தனையோ நவீன யுகத்தில் காலடி வைத்து விட்டார்கள். இதுவும் ஒரு நிவர்த்தி செய்யப்படாத குறைபாடாகவே காணப்படுகிறது.

இது இவ்வாறு இருக்கையில் பருவ மழை பெய்யும் காலமும் ஆரம்பித்து விட்டது. இதனால் மழையும் மாணவர்களின் கல்வியைக் குழப்புவதைத் தடுக்க முடியாமல் போய்விடும் என அச்சம் நிலவுகிறது.

இதேவேளை இதுவரை காலமும் இராணுவம் மேற்கொண்ட பல இராணுவ நடவடிக்கையினால் மாணவர்கள் தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து சென்று கல்வியைக் கற்பதற்கு சொல்லொணா துன்பங்களை அனுபவித்து பல அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர். ஆகவே இந்தச் சமாதான சூழ்நிலையிலாவது மாணவர்கள் தமது கல்வியை முழுமையாகக் கற்றுக் கொள்வதற்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க உரிய நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொண்டு தமிழ் மாணவர்களுக்கும், தென்னிலங்கை சிங்கள மாணவர்களுக்கும் வேறுபாடின்றி சம அந்தஸ்து வழங்கி மாணவர்களின் கல்வியை முழுமையாக முன்னெடுக்க அரசாங்கமே வழி செய்ய வேண்டும்.

ஆகையினால் இதுவரை காலமும் முன்னைய அரசாங்கம் விட்ட தவறை தற்போதைய அரசாங்கமாவது நிவர்த்தி செய்து, மாணவர்களின் எதிர்கால அபிலாசைகளை செய்யுமா? என்பதை பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும்.

இதேவேளை அண்மையில் வெளிநாட்டு நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவருவதாவது: வட - கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் சுமார் 24,000 மாணவர்கள் தளபாட வசதியின்றி கல்வி கற்று வருவதாகவும் கடந்த கால யுத்த நடவடிக்கையினால் 199 பாடசாலைகளின் கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் 32 பாடசாலைகளில் வகுப்பறைகள் தற்காலிக கொட்டகைகளாகவும் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சொர்க்கத்தில் காணாமல் ஒருவன் பெரிதும் தேடுவது, அவன் நன்பர்களைத் தான். - மார்க் ட்வெய்ன்.

# நறுக்கென...

- செங்குட்டுவன் -



## ஜே.பி.வியின் போர்'மூலோபாய யோசனை; 'சந்திரிகா'வும் பின்னணியில்

**இனப்பிரச்சினைக்கான** தீர்வு முயற்சிகள் தொடர்பான தனது கருத்தினை எவ்விதமான ஒளிவுமறைவோ, சுத்திவளைத்தலோ ஏதுமின்றி மிகத் தெளிவாகவே கூறிவிட்டதுடன், தன்னையும் ஒரு - வெறும் - பௌத்த சிங்கள இனவாத அமைப்பு என்று துல்லியமாக வெளிப்படுத்தியும் உள்ளது. ஒருகாலத்தில் 'சமதர்ம' சமூகத்தை - வர்க்க - இன - மத பேதமின்றி தேசத்தை தட்டியெழுப்பவென சிங்கள இளைஞர் யுவதிகள் மத்தியில் கவர்ச்சிகரமான மயக்கமூட்டும் அரசியல் கோட்பாடுகளைப் பிரகடனம் செய்தபடி, பாராளுமன்ற அரசியல் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க வக்கற்றது என்று பிரசாரம் செய்து கொண்டு ஆயுதப் போராட்ட வழிமுறையை முன்னெடுத்த 'சேகுவேரா' என்ற மாபெரும் புரட்சியாளரின் பெயரையே தமக்குச் சூட்டிக்கொண்டு தென்பகுதி மக்களை ஏமாற்றிய ஜே.வி.பி.யின் அரசியல் வரலாறு இரத்தவெடில் நிறைந்த தொன்றாகும்.

இன்றைய சிறிலங்காவின் சனாதிபதியின் தாயார் சிறிமாவோ பதவிக்குவர பின்சத்தியாய் இருந்துவிட்டு, தங்களின் சுயநல அரசியல் அபிலாஷைகளை அவர் நிறைவேற்ற மறுத்து மிதவாத, வலதுசாரிக் கனவுகளைக் கொண்ட இடது சாரிக் கட்சிகளான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் லங்கா சமசமாஜக் கட்சியுடன் தனது உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டதையடுத்து, 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், அந்த ஆட்சிக்கு எதிராக அரைகுறைத் தன்மை கூட அற்ற, வலுவான திட்டமிடல் தொலைநோக்கு மூலோபாயங்களற்ற ஆயுதப் புரட்சி என்ற சொல்லுக்கே அவமானம்..... (கிளர்ச்சி அல்லது குழப்பம் என்றே கூறலாம்) சிறிலங்கா பெரும் இரத்தக்களறி ஒன்றிற்கு வழிகோலினர் அந்த குழப்பத்தை, இந்திய இராணுவ உதவியுடன் மிருகத்தனமாக அடக்கினார் சந்திரிகாவின் அன்னையார் சிறிமாவோ. 25000க்கு அதிகமான சிங்கள இளைஞர்கள், யுவதிகள் வீதி வீதியாகச் சுட்டுகொல்லப்பட்டு எரிக்கப்பட்டார்கள். ஆறுகளில் தூக்கிவீசப்பட்டார்கள்.

பின்னர் இந்திய அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவம் சிறிலங்காவின் தமிழர் பகுதிகளை ஆக்கிரமிக் ஜே.ஆர்.அரசு அனுமதித்த போது இந்திய எதிர்ப்பு பிரசாரத்தை முன் வைத்து தமது மீள் வருகையை ஆரம்பித்த போது தென்பகுதியில் மீண்டும் ஒரு இரத்தகளறி உருவானது. இம்முறை ஜே.வி.பி.யும் அரசும் மாறி மாறி பழிவாங்கலை மேற்கொண்டதில் தென்னிலங்கை மரணங்கள் மலிந்த பூமியாக உண்மையில் ஆக்கப்பட்டது.

சந்திரிக்காவின் கணவர் விஜயகுமாரதுங்க ஜே.வி.பி.யினரால் படுகொலைசெய்யப்பட்டார். இதனைச் சந்திரிக்காவே ஒப்புக்கொண்டும் இருக்கிறார்.

அரசியல் அபிலாஷைகளும், சுயநலங்களும், சந்திரிகாவை ஜே.வி.பி.யினரின் பின்னால் போகவைத்துள்ளதுடன், ஜே.வி.பி.யினைரையும் சந்திரிக்காவின் காலில் விழவைத்துள்ளது. அரசியல் அசிங்கத்தனத்தின் உச்சக் கட்டமாகும். இந்த நிலையில் பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றிய ஜே.வி.பி. பிரதிநிதி மீண்டும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் ஆரப்பிக்கவேண்டும்' என்று போர் முரசு கொட்டியுள்ளார்.

சந்திரிகா தனது கணவரை கொன்ற (சாயம்போன) சிவப்புத் தோழர்களின் போர்ப்பிரகடனத்தின் பின்னால் இயங்குகிறாரா என்ற சந்தேகம் எழுவது தவிர்க்கமுடியாத ஒன்றேயாகும்....

'பன்றி எவ்வழியோ குட்டிகளும் அவ்வழி' என்ற முதுமொழியை புறக்கணித்துவிட முடியாதல்லவா?



## தலைமறைவான சிறிலங்காவின் முன்னாள் பிரதமர்

**முன்னாள்,** சிறிலங்காவின் பிரதமரான ரத்னசிறி விக்கிரம நாயக்காவைப் புலனாய்வுப் பொலிஸார் தேடுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அதிசிரேஷ்ட தலைவர்களுள் ஒருவர், சிங்கள பௌத்த இனத்தின் ஒரு காலத்திய காவலன் எனத்தன்னைத் தானே இனங் காட்டிக்கொள்ள முயன்றவர். இனப்பிரச்சினையென எதுவும் இங்கில்லை பயங்கரவாதிகளின் பிரச்சினைதான் உள்ளது அதற்கும், இராணுவ ரீதியில்தான் தீர்வு காணப்படவேண்டும். போரைத் தீவிரப்படுத்தலே அதற்கு ஒரே வழியென்றவர்.

பௌத்த விகாரைகள் இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு மையங்களாகச் செயற்படவேண்டும் என்று பிரகடனம் செய்தவர். 10000 பேரை இராணுவத்திற்குச் சேர்ப்பேன் எனச் சூழுரைத்து விட்டு ஆயிரம் பேரைக் கூடச் சேர்க்க முடியாது தடம்புரண்டவர்.

சிறிமாவோ பண்டார நாயக்காவின் நம்பிக்கைக்குரியவர், சந்திரிகா மீது விசுவாசமாக இருந்தவர்.... இப்படிச் சொல்லிக் கொண்டே போகக் கூடிய அளவுக்கு பிரபல்யமான சிங்களத் தலைவர். பௌத்த பாதுகாவலர் ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக தேடப்பட்டு வருகின்றார்.

இப்படி ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகளில் சிக்கியுள்ள பொ.மு.முன்னணித் தலைவர்கள் பட்டியல் நீளமானது.

இறப்பர் கூட்டுத்தாபன பலகோடி ரூபாய் பெறுமதியான ஊழலில் இவர் சிக்கியுள்ளார். வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்கத் தவறிய இவரை வீட்டுக்காரர்களே எங்கே இருக்கிறார் என்று தெரியாதென்கிறார்களாம்.

இவரின் மனைவி குசும் விக்கிரமநாயக்காவும் ஏற்கெனவே சர்ச்சைகளில் சிக்கியவர் மோசடிக் குற்றச்சாட்டுக்குள்ளானவர். மகன் விதுர விக்கிரமநாயக்காவுக்கு தகப்பனுக்கும் முரண்பாடுகள் நிறைய உண்டு.......

பிரதமராக இருந்தவேளையில் அலரிமாளிகையில் அவரது மனைவி அவருடன் வசிக்க வில்லையென்றும் கூறுவர்.

இப்போது இந்தப் பாரிய மனிதரைக் காணவில்லையென்று கைவிரிக்கிறார்கள்.

எந்த ஊழலுக்குப்பயந்து எங்கு ஒளிந்திருக்கிறாரோ...?

மகிந்த ராஜபக்ஷ ரத்னசிறியை ஓரங்கட்டி ஒதுக்கிப் பின்னர் இப்போ இந்த ஊழல் அவரின் விலாசத்தை தேட வைத்துள்ளது.



## சமாதானத்தையும் -சிங்கள மக்களையும் குழப்ப சோமதேரரின் ஜனவிஜயகட்சி

**இதுவரை** சிங்கள பேரினவாத சக்திகளுக்கு பௌத்த மதபீடங்களின் பின்னணி ஆதரவுடனும், நேரடி ஆசீர்வாதத்துடனும், அவ்வவ்போது அழுத்தமும் எச்சரிப்பும் கொண்ட ஆலோசனையுடனும் அரசியல்வாதிகளே தலைமைதாங்கி வந்துள்ளனர்.

ஆட்சி பீடம் ஏறும் எந்த அரசுக்கும் இந்த மதபீடங்களின் ஆசீர்வாதமும் ஆலோசனையும் தேவையென்பது சிறிலங்காவின் பௌத்த சிங்கள இனவெறி அரசியலில் மாற்றப்படமுடியாத ஒரு விதியாகவே ஆகிவிட்டது.

இதற்கு சுதர்மம் பேசும் இடதுசாரி அரசியல் வாதிகளும் கூட தப்பிக் கொண்டது கிடையாது.

சிறிலங்காவின் தேசியக் கட்சிகள் என்று கூறிக் கொண்ட தென்பகுதித் தலைமையின் கீழான சகல கட்சிகளுமே சிங்கள மக்களின் பௌத்த சமூகத்தவரின் வாக்கு வங்கியை நம்பித்தான் அரசியல் நடத்த வேண்டிய நிலையில் அக்கட்சிகள் அனைத்துமே சிங்கள மக்களின் நலன்கள், அபிலாஷைகள், தேவைகள் ஆகியவற்றிற்கே முக்கியத்துவம் கொடுக்கவேண்டியவையாக இயங்கிவந்துள்ளமையே வரலாறு.

தேசியக் கட்சிகளைவிடவும், ஜாதிக விமுக்தி பெரமுன எனத்தொடங்கி சிங்கள பூமி புத்திர கட்சி, சிஹல உறுமய எனத் தொடரும் நீண்ட பட்டியலைக் கொண்ட சிங்கள மக்களின் நலன்களையே குறிக்கோளாகக் கொண்ட பௌத்த மதவாதக் கட்சிகளும் உண்டு.... இந்தவகையான கட்சிகளின் தீவிரவாத தலைவர்கள் அவ்வப்போது வெளியிடும் இனவாத அறிக்கைகள், சமாதான நகர்வுகளுக்கு எதிரான பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் மூலம் தாங்கள் தொடர்ந்தும் இயங்குவதை வெளிப்படுத்திக் கொள்வார்கள்.

ஆனால் இப்போது சிங்கள மக்களின் நலன் காக்கவென 'ஜன விஜய' என்ற பெயரில் ஒரு புதிய கட்சியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த அரசியல் கட்சிக்கு தலைமை தாங்குபவர், இனவாத அரசியல்வாதிகளின் சமகாலத்திய ஞானகுருவான கங்கொடு வல சோமதேரர் என்ற பிக்கு ஆவார்.

இவரது இனவாத உணர்வு பிரசித்தமானது.

'சிங்கள மக்களின் நலன்களைப் பாதுகாக்க அனைத்துக் கட்சிகளும் தவறிவிட்டதாகவும் அதற்காகவே தான் புதுக்கட்சியை தொடங்கியுள்ளதாகவும்' இவர் கூறியுள்ளார்......

சிகல உறுமயவுக்கும் போட்டிக்கட்சியா? திலக் கருணாரத்ன தாடியைச் சொறிவது தெரிகிறது...... சிகல உறுமயவும் சிங்களவர்களின் நலன்களை பாதுகாக்க தவறிவிட்டது என்றார் 'சோமதேரரின்' புதிய இனவாதம் எந்த அளவுக்கு இருக்கும் என்பதை நினைத்தாலே பயமாக இருக்கிறது. பாவம் சிறிலங்கா.....! பாவம் சிங்கள மக்கள்.....!



## மதவடி மயிலர்

செய்தி: இலங்கையின் மேலாக அமெரிக்க வான்படை விமானங்கள் பறக்க அனுமதி கோருவோம் - அமெரிக்கா தூதுவர் ஆஷ்லி வில்ஸ்

*மயிலர்: போகிற போக்கைப் பார்த்தால் சமாதானப் பேச்சுவார்த்தை முடியுறதுக்குள்ள எல்லாருமாச் சேர்ந்து சிறிலங்காவை ஒரு வழிபண்ணிப் போடுவினம் போலை கிடக்கு... குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாத்தான் இருக்கு பாருங்கோ....! ஈராக்கோடை செய்யப்போற போருக்கு உலகமெல்லாத்தையும் பங்காளியாக்கத்தான் அமெரிக்கா திட்டமிடுகுது. வீடு கொழுத்திற ராசாவுக்கு எல்லாருமே நெருப் பெடுத்துக் கொடுக்கிற மந்திரியாத் தான் இருக்க வேண்டுமெண்டுதான் நினைப்பாம்.....!*

செய்தி: அரசு புலிகள் பேச்சுவார்த்தை வெற்றியளிக்கப் போவதில்லை என்கிறார் சனாதிபதி சந்திரிக்கா......

*மயிலர்: நல்லதை நினைக்கவோ, செய்யவோ, ஆதரிக்கவோ தெரியாத சனாதிபதியெண்டா இவதான் ஆள் பாருங்கோ... தானும் சமாதானத்திற்கு தயாரில்லை..... சமாதானதிற்கு முயற்சி செய்யிறவையையும் குழப்பி பலவீனப்படுத்த முயலும் ஒருவிதமான மனநோய் பண்டா குடும்பத்தின் பிசாத்தாகிவிட்டது பாருங்கோ.... அம்மையாரும் சமாதானம் எண்டு சண்டை, பிடிக்க வெளிக்கிட்டு, 'வெற்றிநிச்சயம்' எண்டு சொல்லிக் கொண்டு அந்த போலி ஜெனரல் மாமாவோடை சேர்ந்து கொண்டு போட்ட கூத்து கொஞ்சமே... எல்லாப்பக்கத்தாலையும் அடிவாங்கிக் கொண்டு..... இப்ப அறளைக் கதையெல்லே கதைக்கிறா... மாரித்தவக்கை சாகும் வரை கத்தித்தான் சாகும் பாருங்கோ..... அதைத் கத்தாதை எண்டு கட்டளை போடமுடியுமே!*

செய்தி: அவசியம் ஏற்பட்டால் மட்டுமே இனி சனாதிபதியைச் சந்திப்பேன் என்கிறார் ரணில்.....

*மயிலர்: அதெண்டாச் சரியான முடிவுதான் பாருங்கோ. அதிகார ராணி ஆட்களைக் காக்க வைத்து அவமானப்படுத்திறதிலை பேர்பேனவா பாருங்கோ..... எத்தனை முறை ரணில் அம்மணியைச் சந்தித்து இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தை குறிச்சு விளக்கியிருப்பர்..... பழைய பேப்பர்களைப் பார்த்தா எல்லாம் விளங்கும். ஆனால் தனக்கு ஒண்டும் தெரியாதெண்டெல்லே மனிசி நாக் கூசாமல் பொய் சொல்லுது..... ரணில் உந்த விஷயத்திலை இறுக்கமா இருக்கிறதுதான் சரி...... மதியாதோர் முற்றம் மிதியாமை நன்று.....*

செய்தி: சிங்கள இசைக்குழுப் பாடகரைத் தாக்கிய ரத்வத்தையின் மகன் பிணையில் விடுதலை.

*மயிலர்: ரத்வத்தை குடும்பத்தை அட்டமத்துச்சனி ஏழரைச் சனி இன்னும் என்னென்னமோ சனியன் எல்லாம் ஒண்டாப் போட்டெல்லே ஆட்டுது பாருங்கோ... அப்பன் எட்டடி பாய்ஞ்சால் குட்டியெல்லாம் பதினாறு முப்பத்திரண்டு, அறுபத்தி நாலெண்டெல்லே பாயுதுகள். பிள்ளையளை பாதுகாப்பா பக்குவமாக வளர்க்கத் தெரியாத முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பாடு பெரிய அவமானம் தான் பாருங்கோ..... வீடுதேடிப் போயெல்லோ மன்னிப்புக் கேட்கிறாராம்... அப்பன் சேர்த்தவினை பிள்ளையளை ஆட்டுதோ.... பிள்ளையள் செய்த வினை அப்பனை அலைக்குதோ.... அந்த ஊன்று கோலும் இல்லாட்டி ஆள் 'அவுட்' தான் பாருங்கோ.....*

செய்தி: யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. முகாம்களின் பாதுகாப்பு நேற்றுமுதல் மேலும் அதிகரிப்பு.....

*மயிலர்: கொஞ்சக்காலம்... அதாவது முந்தி பாதுகாப்பு படையினருக்கு (?) துணைப்படையா, பாதுகாப்பா அவையிருந்து விலாசங்காட்டிய காலம் போட்டுது. இப்ப பாதுகாப்பைத்தேடி கடற்படையின்ரை கொல்லைக்குள்ள ஒதுங்க வேண்டிய நிலையெல்லே வந்திட்டது. மக்களைப் பாதுகாக்க வேண்டிய சிறிலங்கா காவல்துறை ஈ.பி.டி.பி. யைப் பாதுகாக்க வேண்டிய பரிதாப நிலையிலை இருக்குது.... என்ன இருந்தாலும் சந்திரிக்காவுக்கு டக்ளஸ் மீது கவனம் அதிகம் தான் பாருங்கோ... அதுசரி சனம் போ எண்டு துரத்தேக்கை இல்லை நான் நிற்பன்தான் எண்டு ஏன் விடாப்பிடியா வெட்கங்கெட்டு நிக்கவேணும்...... இதுக்கு பின்னால தான் விஷயம் இருக்குப் போல..... விஷயமோ? விஷமோ ஆர்கண்டது?*

வாய்மையை ஆய்வு செய்யும் அறிவியலே தத்துவம். - அரிஸ்டாட்டில்.

# வவுனியாவில் நடைபெற்ற தமிழீழ வரலாற்றுக் கண்காட்சி

## ஈழத் தமிழர்களின் வரலாற்றைக் காட்சிப் படுத்திய கண்காட்சி

ஈழத் தமிழர்கள் இன்று தமது விடுதலைப் போராட்ட வரலாற்றின் மிகவும் முக்கியமான ஒரு கட்டத்தில் இருக்கறார்கள்.ஆனால்,தமது இந்தப் போராட்ட வரலாற்றைத் தாமே முழுமையாக அறிந்துகொள்ளாத அப்பாவிகளாகவும் தமிழ் இளம் சந்ததியினர் இருந்து வருகின்றனர். இந்த அவலம் நீக்கப்பட வேண்டியது,இனிவரும் காலத்தின் மிகவும் முக்கியமான ஒரு தேவையாக இருக்கின்றது.




தமிழர்களுடைய விடுதலைப் போராட்டம்,ஒரு ஆயுதப் போராட்டமாக வடிவமெடுத்து ஏறத்தாள இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து விட்டன. இதனால் இன்றைய சந்ததியின் ஒரு முப்பந்தைந்து நாற்பது வயது மதிக்கத்தக்கவர்களுக்கே இந்தப் போராட்டத்தின் வரலாறு ஓரளவுக்கேனும் தெரிந்திருக்கின்றது. இவர்களிலும் எல்லோருமே இந்த வரலாற்றை முழுமையாக அறிந்திருக்கிறார்கள் என்றும் சொல்ல முடியாது.இதற்குப் பிரதான காரணம், இந்த வரலாற்றை அறியும் அக்கறை இவர்களிடம் இல்லை என்பதே. தமிழினம் தனது வரலாற்றை அறிந்துகொள்ள விரும்பாத,அதில் அக்கறை கொள்ளாத ஒரு இனமாகவே கடந்த பல தசாப்தங்களாக இருந்து வந்துவிட்டது.

ஆறாம் ஆண்டு முதல், க.பொ.த.(சா/த) வரை நாம் வரலாற்றைக் கற்க்வே செய்கிறோம்.வரலாறும் சமூகக் கல்வியும் என்ற பெயரில் ஏறத்தாள ஆறாண்டுகளாக எமக்கு இந்தக் கல்வி போதிக்கப்படுகிறது. ஆனால்,இந்தக் கல்விமூலம் நாம் நம்முடைய வரலாற்றைத் தெளிவாகக் அறிந்து கொண்டிருக்கிறோமா என்றால் இல்லை. மகாசேனன் கட்டிய குளம் பற்றியும், தாதுசேனன் கட்டிய அணைக்கட்டுப் பற்றியும் பரீட்சைக்குப் பாடமாக்கியதே எமக்கு வரலாறு என்றதும் ஞாபகத்துக்கு வருகிறது.இதுதான் எமக்குச் சொல்லித்தரப்பட்டிருக்கின்ற வரலாறு.இந்த வரலாற்றுப் புத்தகங்கள் எமக்கு மறைமுகமாகச் சொல்லவிளைபவை இரண்டு விடயங்களைத்தான்.

ஒன்று,இந்த நாடு பௌத்தத்தை வளர்ப்பதற்காகப் புத்தரால் தெரிவு செய்யப்பட்ட ஒன்று என்பது மற்றையது அது சிங்கள மொழிபேசும் மக்களுக்குரிய ஒன்று என்பதாகும்.

இதற்கப்பால் நாமறிந்த வரலாறு என்பது மிகவும் சொற்பமே. அனுராதபுர இராச்சியம் பற்றியும், கண்டி இராச்சியம் பற்றியும்,கோட்டே இராச்சியம் பற்றியும் சொல்லும் இந்த வரலாறுகள்,முழுக்க முழுக்கச் சிங்கள மன்னர்களின் வரலாறுகளாகவே அமைந்துள்ளன.இந்தத் தீவை ஆக்கிரமிக்க முனைந்த அந்நியப் படைகளுடன் போரிட்ட சங்கிலி மன்னன் பற்றியும்,பண்டார வன்னியன் பற்றியும் இந்த வரலாறுகள் மூச்சும் காட்டுவதில்லை.கோட்டே இராச்சியம், கண்டி இராச்சியம் என்பவற்றுக்கு ஈடாக,இந்தத் தீவில் நிலவிய யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய வரலாறு திட்டமிட்டு மூடிமறைக்கப்பட்டே வருகிறது. ஏனெனில், அதையும் சொல்லப்போனால்,இது தமிழர்களுடைய தேசம் என்பது நிறுவப்பட்டுவிடும் என்பது சிங்கள வரலாற்றுப் பொய்யர்களின் அச்சம்.அதனால்,மாகவம்சம் என்கின்ற வரலாற்று நவீனத்தை உண்மையான வரலாறாகச் சித்தரித்து,இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரியது என முழுச்சந்ததிக்கும் எடுத்துரைத்து வந்துள்ளார்கள் இந்த வரலாற்றுத் திரிபர்கள்.

இவ்வகையில்,இந்த நாட்டில் வாழும் மக்கள் இன்று இரண்டுவிதமான வரலாற்று முற்றுகைகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.ஒன்று இந்தத் தீவை சுமார் நூற்றியிருபது ஆண்டுகளுக்கு மேல் ஆக்கிரமித்திருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியம் திட்டமிட்டு பரப்பிச் சென்றுள்ள கல்விமுறையும், அதனூடாக நாம் பெறும் வரலாற்றுணர்வும். இரண்டாவது, பிரித்தானியர் இலங்கையை விட்டு வெளியேறியதும், ஆட்சிப் பீடமேறிய சிங்கள ஆட்சியாளர்கள் இட்டுக்கட்டியுள்ள வரலாற்று முற்றுகை.இந்த இரண்டுவகை வரலாற்றுத் திரிபு முற்றுகைக்குள்ளிருந்தும் விடுபட்டு, உண்மையான வரலாற்றை,நேர்மையாக

**றுசாங்கன்**

இந்தத் தீவில் வாழும் மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் போதே,மீண்டும் இந்தத் தீவில் உண்மையான அமைதி ஏற்பட முடியும்.

இன்று தமிழர்களுக்குச் சமஷ்டி ஆட்சியின் கீழே அதிகாரங்களை வழங்கக்கூடாது என்று வாதிடும் சிங்களவர்களுக்கு,ஏறத்தாள நானூறு ஆண்டுகளுக்கு முந்தைய இந்தத் தீவின் வரலாறு சொல்லிக்கொடுக்கப்படவேண்டும்.இந்த வரலாற்றை நேர்மையுடன் எதிர்கொள்ளும் பக்குவம் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும். நீண்ட காலமாக வரலாற்றுப் பொய்களையே உண்மைகளாக நம்பி வாழ்ந்துவிட்டவர்களுக்கு, நிஜத்தை எதிர்கொள்வதென்பது கொஞ்சம் சிரமமான காரியமாகத்தான் இருக்கும். ஆனால், யதார்த்தத்தை அவர்கள் எதிர்கொண்டுதான் ஆகவேண்டும்.

இது ஒருபுறமிருக்க,இவ்வாறு இந்த வரலாற்று உண்மைகள் சிங்களவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கப்படுவது போல,அதனைத் தமிழர்களுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது என்பதுதான் வேதனையான உண்மை.ஏனெனில், இதுவரை காலமும் அவர்கள் அறிந்து கொண்ட வரலாறு என்பதுவும் சிங்களத்தால் இட்டுக்கட்டப்பட்ட வரலாறேயாகும்.இதனை அப்பாவித்தனமாக ஏற்றுக்கொள்பவர்களாகவே எமது சந்ததிகள் பல வாழ்ந்துவிட்டன.ஆகவே இந்த வரலாற்றுணர்வு தமிழர்களுக்கு ஊட்டப்படவேண்டியது இன்றைய காலகட்டத்தின் முக்கிய தேவையாகிறது.இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்ற போரின் காரணங்களையும்,தமிழர்களுடைய போராட்டத்தின் நியாயப்பாட்டையும் இன்றைய சந்ததி அறிந்துகொள்ளாவிடில் ,இந்தப் போராட்டத் திற்குத் தமிழர்கள் கொடுத்த விலை அர்த்தமற்றதாகிவிடும்.

அதனால்தான் போலும், இந்தப் போராட்டத்துக்கு தமது இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களை நினைவுகூரும் எழுச்சிநாட்களில்,இம்முறை வவுனியாவில் ஒரு வரலாற்றுக் கண்காட்சியும் ஒழுங்குசெய்து நடாத்தப்பட்டது. தம்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட ஒடுக்குமுறைகளுககெதிராக ஒரு மாபெரும் போராட்டத்தை நடாத்தி, அதில் மிகவும் முக்கியமான ஒரு கட்டத்தில் இன்று நிற்கும் தமிழினம்,தன்னுடைய வரலாற்றை ஒருதடவை மீளவும் பார்த்துக்கொள்வதற்கு இந்தக் கண்காட்சி பேருதவியாக அமைந்திருந்தது.இராணுவ ஒடுக்குமுறைகளுக்குச் சவால் விட்டு இன்று தமிழர்கள் நிமிர்ந்து நிற்கத் தொடங்கிவிட்டார்கள்.அவர்களுடைய உரிமைகளை மீட்டெடுத்தல் தொடர்பில் சர்வதேச அரங்கில் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.அவர்களுடைய பாரம்பரியத் தாயகப் பிரதேசங்களில் இதுவரை நிலவிவந்த இராணுவ ஆக்கிரமிப்பு நீங்குவதற்கான அறிகுறிகளும் தென்படத்தொடங்கியுள்ளன.

இந்த நிலையில்,இனிவரும் காலங்கள் தமிழர்களுக்கு மிகவும் முக்கியமானவையாக அமைந்துள்ளன. இவ்வளவு காலமும் போருக்குள் இழந்த தமது வாழ்வை மீளவும் கட்டமைத்துக்கொள்ளப் புறப்பட்டுள்ள தமிழினம்,இடையில் அறுபட்டுப்போன தனது வரலாற்றுவேரின் அந்தத்தைக் கண்டுபிடித்து, தனது எதிர்காலத்தைக் கவனமாகக் கட்டமைக்கவேண்டியிருக்கிறது.இதற்குப் புதைக்கப்பட்ட எமது வரலாறுகள் மீளவும் மறுகண்டுபிடிப்புச் செய்யப்படவேண்டும்.

இந்த வரலாற்றுப் புதைபொருளாய்வில் ஈழத்தமிழர்கள் முக்கியமான மூன்று மூடுபடைகளை நீக்கி,உண்மையான வரலாற்றைக் கண்டறியவேண்டியிருக்கிறது.முழு உலகிலும் நிலவிய இரண்டுவிதமான அதிகார மட்டங்களால் இட்டுக் கட்டப்பட்ட வரலாற்று முற்றுகையையும்,தனது நாட்டுக்குள் ஆட்சிபீடமேறிய சிங்கள ஆட்சியாளர்களால் திட்டமிட்டுப் பரப்பப்பட்ட வரலாற்று முற்றுகையையும் தமிழர்கள் நீக்கியாகவேண்டும்.

முதலாவது இந்த உலகில்,குறிப்பாக இந்தியக் கண்டத்தில் ஆதிக்கம் செலுத்தி,தன்னைப் பலாத்காரமாகப் பரப்பிய நாகரீகம் ஆரிய நாகரீகமாகும்.இது திராவிடக் கலாசாரத்தின் அடிப்படைகளைத் தகர்த்து,அதனிடத்தில் தன்னுடையவைகளை மறுபதிப்புச் செய்துள்ளது.இன்று தமிழர்கள் தமது சமயம் என்றும்,கலாசாரம் என்றும் மயங்கும் பல விடயங்கள் இவ்வாறு அவர்களிடம் திணிக்கப்பட்டவற்றின் எச்சங்களேயாகும்.இவற்றின் தேவைப்பாடுகளைச் சீர்தூக்கிப் பார்த்து,தமது கலாசாரத் தொடர்ச்சியைப் பேணவேண்டியவர்களாக இன்று தமிழர்கள் இருக்கிறார்கள்.

அடுத்து உலகின் பலபாகங்களிலும் ஆதிக்கம் செலுத்தியது பிரித்தானிய ஏகாதிபத்தியமாகும். இந்த ஏகாதிபத்தியம் எம்மிடம் பரப்பிவிட்டுள்ள புதியவகை நாகரிகம்,அடிப்படையில் கீழைத்தேசத்துக்குரிய ஒன்றே அல்ல.அது மேலைத்தேசத்தில் விளைந்து,அதன் நலன்களை அடிப்படையாகக் கொண்டு இந்த மண்ணிலும் பரப்பிவிடப்பட்டுள்ளது.இவை இரண்டுக்கும் அடுத்ததாக தமிழர்கள் எதிர்கொள்வது சிங்கள ஆக்கிரமிப்பின் இட்டுக் கட்டுக்களாகும்.

இந்த மூன்றையுமே படிப்படியாக கட்டவிழ்த்து,தனது வரலாற்றுத் தொடர்ச்சியைத் தமிழினம் கண்டுபிடிக்கவேண்டியுள்ளது.இத்தகைய ஒரு முயற்சியின் ஆரம்பப் படிநிலையாகவே வவுனியா நகரசபைக் கட்டடத்தில் நடைபெற்ற தமிழீழ வரலாற்றுக் கண்காட்சி அமைந்திருந்தது. தமிழீழக் கல்விக் கழகத்தின் ஏற்பாட்டில்,தமிழீழ மாணவர் அமைப்பினால்,வவுனியா வளாக மாணவர்களின் ஆதரவுடன் நடாத்தப்பட்ட இந்தக் கண்காட்சி, இந்த மாவீரர் எழுச்சிநாட்களில் தமிழீழப் பிரதேசங்களில் நடைபெற்ற நிகழ்வுகளில் மிகவும் முக்கியமான ஒன்றாகக் கவனிப்பைப் பெறுகிறது. இது மாவீரர் எழுச்சி நாட்களாக நவம்பர் மாதம் 25ஆம் திகதி முதல்,27ஆம் திகதிவரை நடாத்தப்பட்டது.

கண்காட்சியில்,ஈழத்தமிழர்களின் பூர்வீக வரலாறுமுதல்,இடையில் அது அன்னிய ஆக்கிரமிப்புக்களால் அறுபட்டது,அதன்பின்னர் தோன்றிய சிங்க்ள ஆக்கிரமிப்பு என தமிழர்களின் வரலாற்றின் முக்கிய காலகட்டங்கள் கவனமாகத் திட்டமிடப்பட்டுக் காட்சிகளாக விரிக்கப்பட்டிருந்தன.ஒளிப்படங்கள், பத்திரிகைச் செய்திகள்,பத்திரிகைகளில் வெளியான. கட்டுரைகள் என்பனவற்றின் ஒரு தொகுப்பாகவே அமைந்திருந்த இந்தக் கண்காட்சியைச் சாதாரணமாக ஒருவர் பார்த்து முழுப் பயன்பெற வேண்டுமானால்,அதற்கு ஒரு முழுநாளாயினும் தேவை. ஆனால் மூன்று நாட்கள் நடாத்தப்பட்ட இந்தக் கண்காட்சிக்கு, ஏராளமானவர்கள் படையெடுத்த வண்ணமிருந்த நிலையில், இதற்கான வாய்ப்பு மிகமிகக் குறைவு. ஆனாலும்,ஒரு வரலாற்று ஓட்டத்தை ஒரேபார்வையில் அறிந்துகொள்வதற்கான ஒரு அரிய வாய்ப்பை இந்தக் .கண்காட்சி பலருக்கும் வழங்கியிருந்தது.

காலையில் பாடசாலைக்கோ,அல்லது அலுவலகத்துக்கோ செல்லும் அவசரத்தில்,பத்திரகைச் செய்திகளின் தலைப்புக்களை மேலோட்டமாக மேய்ந்துவிட்டுப் போகும் ஒருவரைப் போல,இந்தக் கண்காட்சியை ஒருசிலமணி நேரத்துக்குள் பார்த்து முடிப்பவர் ஒரு வரலாற்று ஓட்டத்தை ஒரே பார்வையில் கண்டுகொள்ள முடிகிறது. கொஞ்சம் நிதானித்து, ஆறுதலாக நின்று (இதற்கு அங்கு காணப்பட்ட நெருக்கடி இடமளிக்கவில்லை) அங்கே விரிக்கப்பட்டிருந்த காட்சிகளுக்குள் கவனத்தைச் செலுத்தும் ஒருவருக்கு ஓரளவுக்கேனும் தமிழர்களுடைய வரலாற்றின் ஒரு நீண்ட காலகட்டத்தை அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும்.

ஒரு முழுநாளை இந்தக் கண்காட்சிக் கூடத்துக்குள் செலவிட்டவன் என்றவகையில்,கண்காட்சிக்குச் சென்றிருக்காதவர்களுக்கும், மேலோட்டமான பார்வையைச் செலுத்தியவர்களுக்கும் அதன் பயனை ஓரளவுக்கேனும் பகிரும் வகையிலேயே நான் இந்தப் பத்தியை எழுத முனைகிறேன். (இன்னும் வரும்)

## உள்ளத்தை உறுத்துபவை

பரந்தன் சந்தியில் ஒரு மனிதர் மனிதர் என்பதா அல்லது வேறு ஏதாவதுஒரு பெயரைக் கொண்டழைப்பதா என்று தெரியவில்லை.

ஏதோ ஒரு உருவம் நடமாடிக் கொண்டிருக்கிறது. ஈக்கள் மொய்க்க துர்நாற்றம் வீசிய படியிருக்க சந்தியில் நிற்கும் மனிதர்களிடம் அந்த உருவம் கைகளை நீட்டும். மனம் இரங்கி அவர்கள் மூக்கைச் சுளித்தபடி போடும் பிச்சையை வாங்கியபடி மீண்டும் அது நகரும். இப்படியே பல நாட்களாக உயிர் ஊசலாட அந்த உருவம் நடமாடிக் கொண்டிருந்தது.

மிகவும் வயது போன அந்த உருவத்தை இன்னமும் எவரும் காணாதது தான் வேதனையாகவுள்ளது. சில வேளைகளில் வீதியின் அருகில் மண்ணில் விழுந்து கிடக்கிறார் அந்த முதியவர் சில வேளைகளில் ஆடைகள் கழண்டு விழ மெல்ல மெல்ல ஒரு விலங்கு போல ஊர்ந்து பனையோலையால் அடைக்கப்பட்ட சிறு மறைவிடம் நோக்கி நகருவார்.

மனித வாழ்க்கையையே வெறுக்கும் படியான ஒரு அவல வாழ்க்கை உயிர் இன்னும் பரியாததால் அந்த உடல் அல்லல்ப் பட்டுக் கொண்டிருக்கிறது.

அந்த முதியவருக்கு உடனடியாக மருத்துவ உதவி வழங்கி ஒரு மூதாளர் பேணகத்தில் சேர்ப்பித் தால் ஒரு மனித உயிறிற்கு மதிப்பளித்த பாக்கியம் கிட்டும்.

எத்தனை நடமாடும் மருத்துவ சேவைகளும் தொண்டு நிறுவனங்களும் வலம் வரும் இவ் வீதியால் அல்லல்ப்படும் அந்த முதியவருக்கு எந்த நிறுவனம் தொண்டு புரியப் போகிறது.

இதுவும் ஒரு போரின் வடுதான் எப்படி அந்த முதியவர் உறவுகளை இழந்தாரோ அல்லது அவர் இந்நிலைக்கு வர புறக்கணிக்கப்பட்டதோ யாருக்கத் தெரியும்.

விலை மதிப்பற்ற ஒரு மனித உயிர் அவலப்பட்டுக் கொண்டிருக்கிறது யாருக்கு கண் திறக்கும்.

- வேழினி -

என்னை நான் மதிக்க வேண்டும், என்பதே நான் கற்ற மிகச் சிறந்த பாடம். - ராபர்ட் ஸதி

# தாய்மடி வாசம் 5

> எல்லாவற்றையும் தாண்டி அவனது கண்களில் முட்டி நின்ற வேதனையின் அடையாளங்களாய் அவனது உருவம். அந்தக் கண்கள் சொல்லி நின்ற சோகம் அப்படியே அவனை என்னுடன் அழைத்துப் 'போவென்றிருந்தது......

"இஞ்சை வாங்கோ இப்படியிருங்கோ..?" அவன் அருகில் வர மறுத்து தன்குழந்தைச் சிரிப்போடு நின்றான்.

"இஞ்சை வாங்கோ குஞ்சு நானொண்டும் செய்யமாட்டன்..." தலையைக் குனிந்து 'கொண்டு வந்து கையில் இருந்த கடலைப் பெட்டியையும் தன்னோடு கவனமாக்கி என்னருகில் வந்து நின்றான் அந்தப் பாலகன். எனது 6 வயது மகனின் தோற்றத்தை விடச் சிறிய தோற்றம்.

"பிள்ளைக்கென்ன பேர்...?"

"ராகுலன்".

"உங்கடை அம்மா அப்பா எங்கே நிக்கினம்.....?"

"அவை செத்துப் போட்டினம்....."

ஓ....குழந்தையே.....
உன்னைப் பெற்றவர்கள்
இந்த உலகிடமிருந்து
விடை பெற்று.........

நீ தனியனாய் நின்று துடிக்க....
எந்தச் சனியன் வந்து
அவர்களை அழைத்தது.....

அது எப்படி குழந்தையே...
ஒற்றையாய் உன்னை விட்டு -
அவர்கள்
எப்படிப் பிரிந்தார்கள்....

உன்னைக் காக்க வேண்டிய கண்கள்
காலக் கொடியவனின் கையில்
கருகிவிட்டதாலா
கடலைச் சுருளோடு நிற்கின்றாய்
குழந்தையே....!

ஓ.... அதுதான் நீ எண்ணையில்லாத்
தலையோடும்
ஏக்கம் நிரம்பிய விழியோடும்
இந்த வெய்யிலோடு
போராடுகிறாயோ...?

இந்த நிலையில் நீ துடிக்க
எந்தப் பேய் உன்னை ஈன்றவரின்
உயிர்களை எடுத்தது....?

அவன் கண்கள் கலங்குகின்றன. என் மனசெங்கும் ஏதோ அதிர்வுகள் நெருப்புள்ளும் நிமிர்ந்தெழுந்த இந்த மண்ணின் மலரிவன். விழிகள் நனைகிறதே....அள்ளியணைத்து அழாதேயெனச் சொல்ல வேண்டும் போலிருந்தது. வெளியில் எங்களை எந்தக் கண்ணாவது பார்த்துவிட்டால் அதிசயமாய்ப் பார்க்குமே என்ற பயத்தில் என்னுணர்வுகளைக் கட்டி வைத்து விடுகிறேன்.........

"உங்களுக்கு எத்தினை வயது...? "

"ஏழுவயது."

அழுவதற்கு தயாராயிருந்த அவனை அமைதிப் படுத்த சற்று ஆறவிட்டுத் தொடர்கிறேன்.



"அப்ப நீங்க ஆரோடையிருக்கிறீங்கள்..?"

"மாமாவோடைதான் இருக்கிறது."

"அப்ப மாமி...?"

"மாமியும் நானும் தான் கடலை விக்கிறனாங்கள்."

"மாமா வேலைக்கு வேறையிடம் போறவா."

"பிள்ளைக்குப் பள்ளிக் கூடம் போகவிருப்பமில்லையே..?"

"எனக்கு நல்ல விருப்பம்.."

"ஏன் பிள்ளையின்ரை அம்மா அப்பாவை செத்தவை...?"

அவன் விசும்பியபடி..."தெரியாது" என்கிறான். நான் ஒரு தாய் என்பதையே மறந்து ஒரு பத்திரிகைக்காரன் போல் அந்தப் பிஞ்சை கேட்கிறேன்.... இனிதாய்க் கழிக்கவேண்டிய பொழுதுகளுக்கு சொந்தமாக வேண்டியவன்....
வண்ண வண்ணக் கனவுகளோடு
புத்தகங்கள் சுமக்க வேண்டிய காலமல்லவா
இவனது....
சிறுசிறு குறும்புகள் செய்து
அம்மாவிடம் பேச்சு வாங்கி
அப்பாவின் சாரத்துக்குள் முகம் புதைத்து
சிரிக்கவேண்டியவனல்லவா இவன்...
கோபம் மாறி அம்மா முத்தமிட்டு
அந்தச் சுகத்தில் கண்ணயர வேண்டியவன்

இன்று
தனிமரமாய்......
இவனைச்
சந்திக்கும்
இந்நிமிடம் வரையும்
எனது



பிள்ளைகளைத் தனியே தகப்பனுடன் விட்டு வந்துவிட்டடேனே..... தகப்பனுடன் அட்டாகாசம் பண்ணிப் பேச்சு வாங்குவார்களா...? ஒழுங்காகச் சாப்பிடுகிறார்களா...? நேரத்துக்கு நேரம் நித்திரை கொள்வார்களா? இப்படி அவர்களின் நினைவே சுற்றிச் சுற்றிக் கொண்டிருக்க ஏக்கத்தில் இருந்த எனக்குள் அச்சம் பரவியது. இப்படி எனது குழந்தைகளுக்கு நடந்தால் என் குழந்தைகள் எப்படி துடித்துப் போவார்கள்....? உலகில் எந்தக் குழந்தையும் அம்மாவை, அப்பாவை இழந்து விடவே கூடாது.

"நான் போப்போறன் மாமி தேடுவா...."

என எழுந்தவன் கைகளில் என்னால் அப்போதைக்கு முடிந்த சின்ன உதவியாய் சிறு தொகையினைக் கொடுத்து... கவனமா மாமியிட்டைக் குடுக்க வேணும் என்றேன். முகம் மலரச் சிரித்தபடி அப்ப நான் போறன் என்று விட்டுப் போனான். அவன் போன திசையில் எனது விழிகள்... மீண்டும் அவனைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருந்தன.....

"என்ன சுதான்ரி இப்பிடியொரு கொடுமை இந்தக் குழந்தைக்கு...?"

"என்னம்மா செய்யிறது இப்பிடி எத்தனை பிள்ளையள்.... இன்னும் கனக்கப் பாக்க இருக்கு...."

விழி நிறைந்த கண்ணீரோடு சுதான்ரியைப் பார்த்தேன். சுதான்ரியும் விழிகலங்க என்னைப் பார்த்தா.

எனது மகனுக்கு இவனைவிட ஒரு வயசுதான் குறைவு. ஆனால் அவன் ஓரளவு வசதிகளோடு வாழ்கிறான். அவனுக்குக் கிடைக்கும் வசதிகளில் ஒரு துளியை இவனுக்கு செய்யலாம். ஆனால் அவனது தொடர்பு முகவரி எதையுமே வாங்கவில்லை. அப்போது தான் சிந்தனையில் அந்த நினைவு வந்தது. அவனது தொடர்பை வாங்காது விட்டடேனேயென்று கலங்கினேன். சுற்றிவரத் தேடுகிறேன் அந்தச் சின்ன ராகுலனை. என் கண்களுக்கு எட்டிய தூரம் வரை அவனது தடமே இல்லை.

"அந்தப் பிள்ளையின்ரை விலாசத்தை வாங்கியிருக்கலாம் மறந்திட்டன். சுதான்ரி... அந்தப்பிள்ளை ஒரு நிலைக்கு வாறவரைக்கும் தொடர்ந்து ஏதாவது செய்து கொண்டிருக்கலாம்..... சே.... பாருங்கோ சுதான்ரி எனக்கு அப்ப அந்த நினைவே வராமல் போட்டுது."

"இப்படி எத்தினை பிள்ளையளை இந்த மண் சுமக்குது. இதுகளைவிட காலுகளைக் கையளைக் குடுத்திட்டு எத்தினை சீவனுகள் பிள்ளை......"

விடுதலைப் போராட்டம் நடக்கும் காலத்தில் இவை தவிர்க்க முடியாதவைதான். ஆனால் இவர்களதும் இந்த மண்ணினதும் கண்ணீரில் அகதி விண்ணப்பம் நிரப்பி ஐரோப்பா ,அமெரிக்க நாடுகளில் வாழும் தமிழ் உதிரங்களும் இந்தச் சுமைகளைச் சேர்ந்து சுமக்கலாமல்லவா....? இந்தக் கடமையை, காலத்தின் தேவையை எம்மில் எத்தனை பேர் எண்ணிப் பார்க்கிறோம்....? என்றால் குறிப்பிட்ட ஒரு தொகையைத் தவிர மற்றவர்கள் இவற்றை நினைப்பதே பெரும் சுமையாய்க் கருதி விலகியிருக்கிறார்கள்....! ஆனால் மாதமிரு திருமணம், பூப்புனித நீராட்டு விழா, வாரம் ஒரு பிறந்தநாள்.... பிள்ளை பிறந்து குற்றக்களிவென்று கொண்டாட்டங்கள். கொண்டாட்டங்களுக்கு புதிதுபுதிதாய் நகைகள், உடுப்பு, ஒரு கொண்டாட்டத்திற்கு உடுத்திய உடுப்பு, நகை இன்னொன்றுக்கு உடுத்தோமென ஏதோ வானுலகிலிருந்து வந்த தேவதைகள் போலவும், ராஜகுமாரர்களாகவும் போலி வாழ்வும், பொருத்தமில்லா கௌரவமும் காட்டும் பல புலத்துத் தமிழர்களின் பணம், பகட்டுக்காய் கரைவது மட்டுமன்றி எவ்வளவு உணவுகளை கொட்டிச் சிந்தி.....



போதாக்குறைக்கு கோவில் எனும் பெயரில் கொழுக்கும் உண்டியல்களின் வருவாயில் வாழும் ஆசாமிகளும், பூசாரிகளும் அம்மாளை இங்கு குளிர்வியுங்கள் நாட்டை அவகாப்பா என சாமிக்கு நடுவில் நின்று உருவாடி ஊரை இன்றும் ஏமாற்றும் உருவாடிகளின் வங்கி உண்டியல்களும், மதங்களின் பெயரைச் சொல்லி மனிதமே இன்றி இந்த மண்ணின் தியாகங்களை வீனென்றும், அநியாயமான ரத்தம் சிந்தலென்றும் ஏன்போராடுவான் அவர்கள் கொடுப்பதை வாங்கிக் கொண்டு அமைதியாய் இருக்காமல் ஏன் அடிபடுகினம்....? எனப்புலம்பும் ஆணவர்க்கெல்லாம் இந்த மண்ணும் மக்களும் நிமிர்ந்துள்ள இந்த நிமிர்வு நிச்சயமாய் புரியாது. புரியவே புரியாது. எனினும் ஒரு நாள் இந்த மண்ணின் பூபாளம் தமிழீழ விடுதலையை ஒலிக்கும் போது கட்டாயம் இவர்களெல்லாம் கூனிக் குறுகி நிற்கப் போவது நிச்சயம்.

## தாயகப் பயண அனுபவப் பகிர்வு
## -சுதந்திரா-

ஆறு வயது ராகுலன் என் நினைவுகளை அடிக்கடி குழப்பிக் கொண்டிருந்தான். சற்றே நேரத்தில் நான் திரும்பியும் காணத்துடித்த ராகுலன் இன்னொரு பெண்ணுக்கு என்னைக் காட்டினான். இஞ்சை வாங்கோ அவர்களைக் கையைக் காட்டி அழைத்தேன்.

ராகுலனுடன் வந்திருந்த அந்தப் பெண்ணைக் காட்டிச் சொன்னான் "இவதான் மாமி." அவளுக்கு மிஞ்சிப் போனால் இருபது வயது தாண்டியிராது. இடுப்பில் ஒரு வயதுக்குள்ளிருக்கும் ஒரு ஆண் குழந்தை. ஆடையெதுவும் அந்தக் குழந்தையின் உடம்பில் இல்லை. முகமெல்லாம் மண்ணாய்..... என்னைப் பார்த்து சிரித்தது.

"நீங்க குடுத்த காசை ராகுலன் என்னட்டைத் தந்தவன்."

அவளுடன் கதைக்க வேண்டுமென மனசு துடித்தது......

"இஞ்சை வாங்கோ இதிலையிருங்கோ....."

என்முன்னிருந்த இருக்கைகளைக் காட்டுகிறேன். அந்தத் தங்கையும், என்னைக் கலங்க வைத்த ராகுலனும், அவளது இடுப்பிலிருந்த குழந்தையும் என்முன் இருக்கிறார்கள்.

"உங்களுக்கென்ன பேர்?"

அவள் தனது பெயரைச் சொன்னாள்.

"இந்தக் குழந்தை உங்களுடையதா?"

ஓ...

"உங்கடை வீட்டுக்காரரெல்லாம் எங்கையிருக்கினம்?"

"எனக்கு எட்டு வயதில அம்மா செத்துப் போயிட்டுது.... ஒரு அண்ணா போராளியா இருக்கிறார்.18வயதில கலியாணங் கட்டீட்டன்."

அதற்குமேல் அவளைப் பற்றி அறிய முற்படவில்லை. மேற்கொண்டு அவள் ஏதேனும் சோகத்தை சொல்லிவிட அதைத்தாங்கும் மனவைரம் என்னிடம் அப்போ இல்லை.

போராளியான இவன் அண்ணன் கண்ணில் இவள் இதே கோலத்தில் காண நேர்ந்தால் அந்தப் போராளி மனம் எவ்வளவு வேதனைப் படும். வறுமையின் நிமிர்த்தம் தன்தங்கை கடலை விற்கிறாள் என்பதை எந்த அண்ணன்தான் சகித்துக் கொள்வான்? போராளிகள் மென்மையானவர்கள் அவர்களது மென்மையான உள்ளம் தானே அவர்களைப் போராளியாக்கியது. சில வேளை தன் தங்கையைக் காணநேர்ந்தால் இவள் போலிருக்கும் இந்த மண்ணின் தங்கைகளை எண்ணி ஆறுதலடைவானோ....! அல்லது இந்த அவலங்களுக்கெல்லாம் காரணமானவர்களை அழிப்பதற்காய் இன்னும் உறுதியோடு புறுப்படுவானா....? ஆம்! தன்னின விடியலுக்காகப் புறப்பட்ட அந்தத் தம்பி இன்னும் உறுதியோடு புறப்படுவான்.

அந்த முகம் தெரியா உறவே!
உன் தங்கையின் இந்த நிலைக்கும்
இன்னும் இந்த மண்ணின்
துயரங்களுக்கெல்லாம்
காரணமானவர்களைத் தூளாக்கு
உன் தோழர்களோடு புறப்படு
அவலம் தொலையும்
அந்தவொரு பொழுதிற்காய்
நானும் காத்திருக்கிறேன்.......
தோழனே புறப்படு....!
தயவு செய்து என்மீது
கோபப்படாதே!
தாயகம் காக்க எழும் நேரத்தில்
என் தாய் என்னை
அகதியாக்கிவிட்டாள்.
அகதியாய் ஐரோப்பாவிலிருந்து
நான் அடைந்த, அடையவிருக்கின்ற
அவலங்களே எனக்குத் தண்டனை
தான்..........
இரண்டு அகதிகளை
ஐரோப்பாவில் பெற்று
வைத்திருக்கிறேன்
தோழனே...!
என் குழந்தைகளும் என் போல் அகதி
வாழ்வு வாழ்வதை
நான் வெறுக்கின்றேன்.
அவர்களை - என்
மண்ணின் புதல்வர்களான
உங்களது பாதங்கள் பதிந்த
மண்ணுக்கு ஒரு நாள் கூட்டிவருவேன்.

இதுதான் உங்கள் நாடென
அவர்களுக்குச் சொல்லி
அவர்களை இந்த மண்ணில் தான்
வாழ்விப்பேன் எனும் நம்பிக்கையோடு
வாழ்கிறேன்......
அந்த இனிய பொழுதின் வரவிற்காய்
ஏங்குகிறேன்.....

"உங்கடை விலாசத்தைத் தருவீங்களே....!"

(தொடரும்)



**சிறுகதை**

# வழுக்கு மர வாழ்க்கை



ஆதித்தநிலா

தென்னஞ் சோலைகள்! முல்லை மண்ணின் கற்பக தருக்கள். பத்து ஏக்கர் இருக்கும் அந்தத் தென்னங்காணி. சுவாத்தியமான தென்றல் காற்று. தென்னங் கீற்றுக்களின் சலசலப்பு. நிலவு எறிக்கையில் வெளியில் கட்டிலைப் போட்டுட்டு வானத்தையும், அந்தத் தென்னம் பிள்ளைகளையும் பார்த்துக் கொண்டிருப்பதில் அலாதி பிரியம் அமலாவுக்கு.வேலை முடித்தும் அரக்கப்பரக்க பிள்ளையைக் கிணத்துக் கட்டில கிடத்திட்டு போனமாதிரி அதுக்காகவே ஓடி வந்திருக்கிறாள் எத்தனையோ தடவைகள்.

அந்த ரம்மியமான காட்சியை எப்பவும் பார்த்துக் கொண்டு, அனுபவிச்சுக் கொண்டு இருக்கலாம் போலத் தோன்றும் ஆனா... அவனின் முகம் மட்டும் நினைவில் வராத வரைக்கம் தான் அந்த ரம்மியம் எல்லாம் அவனின் முகம் நினைவில் வர, அவள் வாடிப்போடுவாள். நிலவுகூடச் சுடுவதாய்த் தோன்றும். தென்றல்க் காற்றுக்கூட கூதல் காற்றாய்த் தோன்றும்.

'உடும்பு மாதிரி ஒட்டிக்கொண்டே இலாவகமாய் ஏறுவான் அவன். 13 வயதுகளே நிரம்பியவன் அவன் உழைப்பு மிகுதியால் உருக்குலைந்து போன உடல்வாகு. குச்சித் தடியான கை, கால்கள். ஏழ்மையிலும், வெய்யிலிலும், துயரிலும் வாடிவதங்கித் தினமும் மரத்தை உரசி உரசி ஏறி உரோஞ்சுப்பட்ட கீறல்கள் ஏராளம் அவனில்.

அந்த பத்து ஏக்கர் காணிக்குள்ள இருக்கிற 250 பிள்ளைகளிலையும் மாதத்திற்கு இரண்டு தடவைகள் ஏனும் தேங்காய் பறிக்க வருவான் அவன். அவனுடன் 12 வயதுகளே நிரம்பிய அவன் தம்பியும் கூட. அவனைப் பார்த்தால் அவன் தம்பியைப் பார்க்கவே வேண்டாம். ஆனா... சில இயல்புகளில மட்டும் வேறுபாடு.

இவன் கேட்ட கேள்விக்கேனும் பதில் சொல்வான். இவன் அளிக்கும் பதில்கள் ஞானிகளின் பதில் போல் தத்துவம் பேசும். இவன் தம்பி கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லாத மௌனி. வெறித்த பார்வை. “தம்பி, நீங்கள் எந்த இடம்...” அவள் கேட்டபோது பணிவாய் பதில் சொன்னான்.

“தனங்கிளப்பக்கா..”

“நீங்கள் படிக்கப் போறதில்லையோ...” குனிந்து கொண்டான். மௌனமாய் நின்றவன், நிமிர்ந்தபோது அவன் கண்கள் கலங்கியிருந்தது தெரிந்து. 'ஐயோ! நோகடித்துவிட்டேனோ' என்று வருத்தமாய் இருந்தது அவளுக்கு.

“அக்கா, தனங்கிளப்பில இதவிடப் பெரிய தென்னஞ்சோலையில எங்கட வீடு. இடம்பெயர்ந்து ஓடிவரேக்க எதையுமே எடுக்கேல. அப்ப எனக்கு 5 வயது. தம்பிக்கு 4 வயது. தங்கச்சியாக்கள் ஒருத்திக்கு மூன்று வயது. ஒருத்திக்கு ஒரு வயது. நாங்களே போதுமெண்டு ஓடி வரேக்க ஷெல்லில அப்பா செத்துப் போட்டார். அம்மாதான் இங்கால எங்களைக் கொண்டுவந்து சேர்த்தவா.

அப்பாவைக்கூட அடக்கம் செய்யிற அவகாசம் இல்லாம, அப்படியே விட்டுட்டு வந்தம். அம்மா அதைச் சொல்லி அழுதழுதே நோயாளியாய்ப் போட்டா. நான்தான் வீட்டப் பாக்கிறனான்.”

“தங்கச்சியாக்கள் படிக்கினமோ அப்பன்...”

“கடைசித் தங்கச்சி மட்டும் படிக்கப்போறவள். தம்பிக்கு அடுத்தவள் விடியக் காலையில மா இடிக்க அது இது எண்டு வேலைக்குப் போட்டு பின்னேரப் படிப்புக்குப் போறவள்”

“நீங்கள் ஏன் அப்பன் போறதில்லை..” கண்ணில நீர்கட்டச் சிரித்தான். ஊருக்குப் போய்த் தான் படிக்கிறது எண்டிருந்தன் ஆனா.. ஊருக்குப் போனாலும் இதே நிலைதான். தென்னைமரங்கள் ஒன்றும் இல்லையாம். பொட்டல்வெளியாய் அடிக்குத்திகள் மட்டும்தான் இருக்காம். போய் என்ன செய்யிறது...! அதோட எங்கன்ர வீட்டுக்குப் பக்கத்து வீடுதான் வினோதினியக்கான்ர வீடு. நான் வீனோக்காவெண்டுதான் கூப்பிடுகிறனான். அவா நல்ல படிப்புப் படிச்சவ. அவாக்கு இன்னம் வேலை கிடைக்கேல்ல. நான் அழேக்க அவதான் என்ன தேற்றுறவா. அவா அழேக்க நான்தான் தேற்றுறனான்.

அமலாக்கு வினோவைத் தெரியும் முல்ல மாவட்டத்தில அந்த நேரத்தில இருந்து வசதியீனங்களுக்கு மத்தியிலும் நல்ல பெறுபேறோட என்ர பண்ணினவள் வினோதினி. தகப்பன் இல்லாத அவள், தாய்தான் கூலிவேலை செய்து படிப்பிச்சவா என்று சொல்லுறவள். முதல் வாற சம்பளத்தில அம்மாக்கு சீலைவாங்கிக் குடுக்கவேணும் எண்டு கனவுகள் நிறைந்த கண்ணோடு அவள் சொல்லிக் கொண்டு இருந்தது அமலாக்குத் தெரியும்.

கோஸ்முடிச்சு 8 வருசம் இன்னம் அவளுக்கு நியமனம் கிடைக்கேல்ல ஜீஏ பண்ட எண்டு போய்வாறவள். அதுவும் உரிய உரிய நேரத்துக்குக் கிடைக்காது. அதிலதான் அவள் குடும்ப வண்டியை ஓட்டிக் கொண்டு இருக்கிறாள்.

ஒருநாள் அவளை ஏதேட்சையாய் சந்திக்கிற வாய்ப்புக் கிடைச்சுது படிக்கேக்க இருந்த மாதிரியே இருந்தாள். நடிகர் சிறீ தேவி போல அவள். உள்ளுக்க எரிமலையாய் குமுறிக்கொண்டு இருந்தாலும் வெளியில காட்டிக்கொள்ள மாட்டாள்.

அன்றும் வேலைக்குப் போட்டுத் தான் வந்திருந்தாள். அவள் தோற்றம் அதனைப் புலப்படுத்த அவளுக்கான நியமனம் கிடைக்காதது தெரியாத நான்,

“என்ன மாதிரி வினோதினி, அம்மாக்கு சீலை வாங்கிக் குடுத்தியோ... டிப்ளோமா முடிச்சிட்டியோ எண்டு கேட்டன்.”

எரிமலையயாய் குமுறிக்கொண்டு இருந்த எரிமலை, வெடிச்சுப் போட்டுது. குலுங்கிக் குலுங்கி அழும் அவள என்னால தேற்ற முடியேல. அவளின்ர எதிர்பார்ப்புக்கள்...!

“என்னக்கா யோசிக்கிறியள்...” அவன் தான் நடப்புக்குக் கூட்டிவந்தான்.

“தம்பி, வேலைக்காகப் படிக்கவேண்டாம் தம்பி. அறிவுக்கெண்டாலும் பின்னேரப் பள்ளிப்படிப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேணும் அப்பன். சிறுவன் நலன்காக்க எடுக்கிற முயற்சிகளில நீங்கள் அக்கறை காட்டவேணும் அப்பன்...”

“அறிவுக்கோ...! அவனின் அசட்டையான கேள்வி பொறி தட்டிற்று”

“அறிவு என்றது என்னக்கா...!” அவன்தான் கேட்டான். 'மெய்ப்பொருள் காண்பது அறிவு பல்கலைக்கழக இலட்சினையில் பொறிக்கப்பட்டிருந்த வாசகம் நினைவில் பளிச்சிட்டது.

'மெய்ப்பொருள் காண்பதுதான் அறிவு - உண்மைப் பொருளைக் காண்பதுதான் அறிவு' எது உண்மைப் பொருள்....? அவனுக்கு எந்த உண்மைப் பொருள் தெரியாது. வறுமை, வாழ்வு, வறுமையிலும் உழைத்து குடும்பத்தைக் காப்பாற்றி வரும் நிமிர்வு, படிச்சுச் சாதிச்சது எது என்ற தெளிவு...?

படிப்பு வாழ்வு கொடுக்கவேணும் வாழ்வு கொடுக்கிறதா? வினோதினி போல எத்தினை பட்டதாரிகள்...'எது அறிவு?' தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள்.

“அக்கா...” அவன் அன்பொழுக அழைத்தான்.

“அக்கா, வினோக்காவுக்கும் உங்கள மாதிரி வேலை கிடைக்கோணும் வேலை கிடைச்சா நான் காவடி எடுக்கிறதெண்டு அம்பாளிடம் வேண்டியிருக்கிறன்.”

அவனதுவேண்டுதலை அலசிக்கொண்டிருந்தவளை மீண்டும் அவன்தான் அழைத்தான்.

“அக்கா... கடைசித் தங்கச்சி படிக்கிறாள். நல்லாப் படிக்கிறாளாம். வினோக்காதான் சொல்லிச்சு. அவள எப்பிடியும் படிப்பிச்சுப் போடுவன்.

ஆனா...வினோக்கா மாதிரி அவளும் அழுதுகொண்டிருப்பாளோ என்று தான் கவலையாய் இருக்கு.”

இவனுக்கா அறிவு இல்லை..? அனுபவம் என்ற ஆசான் குருவாய் வழிகாட்ட அவன் உலகப் பேரேட்டை கற்றுக் கொண்டு இருப்பது புரிந்தது.

அவள் அவனை ஆழமாய் ஊடுருவிப் பார்க்கையில் சாரதாவின் சாயல் அடிப்பது நினைவில் வந்தது.

அமலாக்கு நியமனம் கிடைத்த புதிது. அந்த கிராமத்துப் பாடசாலையில் ஆண்டு 09 திற்கு வகுப்பாசிரியராய் நியமிக்கப்பட்டிருந்தாள். ஒரு மாணவி மட்டும் வசதிக் கட்டணம் கட்டேல்ல. கேட்டபோது தான்புரிந்தது, அவள் கட்டணம் கட்டவில்லை என்பதற்காக வரவில் ஒழுங்கில்லை என்பது.

அமலாவந்த சில நாட்களிலேயே அந்த வகுப்பில முன்னிலையில நிற்கிற மாணவிகளில ஒருத்தியாய் சாரதாவை இனம் கண்டிருக்கிறாள். அவரின் ஒழுங்கற்ற வரவுக்கு சக மாணவிகள் சொல்லுவது போல வசதிக் கட்டணம் தான் காரணமாய் இருக்குமோ என்று தோன்ற அணுகியபோது தான் அவளின் நிலவரம் புரிந்தது.

அவள் தகப்பன் கைது செய்யப்பட்டு காணாமல் போய்விட. இடப்பெயர்வின்ர அவலங்களும் இணைந்து அவர்களைக் கொடுமையாய்ப் பாதித்திருந்தது.

அத்தனை கொடுமைகளுக்குள்ளும்... ஏழ்மைக்குள்ளும்... பிரிவுக்குள்ளும்.. தாயுடன் சேர்ந்து தோட்டம் செய்துகொண்டு படிப்பையும் தொடர்ந்து கொண்டிருந்தாள். சாரதா.

அதிகாலை 3.00 மணிக்கு 500மியகாய்க் கண்டுகளுக்குக் குளத்தில் இருந்து பட்டையால் தண்ணீர் இறைத்துவிட்டு, 5 மைல்கள் நடந்தே அவள் பாடசாலை வருவதாய்ச் சொன்னபோது, அமலா அடைந்த அவ நம்பிக்கை...? ஆராய்ந்தறிந்த போதான, ஆச்சரியம்! வேதனை....!

.8 ரூபாய் வசதிக்கட்டணம் அவளுக்காய் அன்று கட்டியதற்கா இன்று வரை அவள், அமலா லீவில் வந்து நிற்கிறாள் என்றுகேள்விப்பட்டதும், “ரீச்சர் எப்படி இருக்கிறியள், உங்களாலதான் நான் படிச்சனான், உங்களாலதான் எனக்கு வேலை கிடைச்சது, என்று மகிழ்ந்து கூறுகையில் அமலா சிறுத்துத்தான் போவாள். என்னதான் நான் இவளுக்குச் செய்தனான், என்று தோன்றும் அமலாவுக்கு.

அமலாக்கு, ஏழ்மையிலும், வசதி வாய்ப்புக்கள் அற்றும் - கிடைக்கும் வசதிகளை பற்றிப்படரும் இவர்கள் போன்ற சிறுவர்கள் நினைவில்ச் சுழர, வசதி வாய்ப்புக்களைக் கொண்டிருந்தும் பெறுபேறற்று அரட்டைக் கச்சேரி நடத்தும் மாணவர்களை வழிக்குக் கொண்டுவர படாதபாடு படுகையில் உஷ்ணம் தலைதூக்கும்.

அதிர்ந்தே கதைக்க விரும்பாதவள், அவர்கள் நலனுக்காய் கண்டிக்கையில் 'பூமாராங்காய்' அதே கண்டிப்புக்கள் அவளைத் தாக்கும். வசதி வாய்ப்புக்கள் கண்ணை மறைக்கும் புதிர்கள் வேதனை தரும். கடமை தொடரும்.

நினைவுகள் மோதிக் கொண்டிருக்கையில் மீண்டும் அவன்தான் கவனத்தைக் கலைத்தான்.

“அக்கா, ஐயா வாறார்! நான் வாறன் அக்கா.” தோட்டக்கார உரிமையாளர் அந்த ஐயா மட்டும்தான். பிள்ளையள் எல்லாம் வெளிநாட்டில.

அவன் போவதையே கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த வளுக்கு சிறிய வயதில் பார்த்த வழுக்கு மரப்போட்டி நினைவில் குமிழியிட்டது. மாறிமாறிப் போட்டியாள்ர்கள் ஏறி வழுக்கிக் கொண்டிருந்தார்களே ஒழிய ஒருதரும் உச்சிய எட்டேல்ல.

கடைசியாய் போட்டியில கலந்து கொண்ட 10 பேரும் சேர்ந்து ஒரு தருக்கு மேல ஒருதர் ஏறி நின்று உச்சியத் தொட்டவை.

பேந்தென்ன அதில தொங்கவிட்டிருந்த 100 ரூபாயையும் பத்துப் பத்து ரூபாயாய் பகிர்ந்து கொண்டதுதான்.

அமலாக்கு அவன் மரத்தில ஏறுகிற போதெல்லாம், அவனுக்கு இந்த வாழ்க்கை வழுக்கு மரம் போலவும் இந்த கடும் காற்றுக்க அவன் கழுமரத்தில ஏற்றப்படுவது போலவும் தோன்றும். 'பட்டினத்தார்' கழு மரத்தில ஏற்றப்பட்ட போது அது பற்றி எரிஞ்சதாய் அவள் படித்திருக்கிறாள்.

இவன் ஏறும் போதெல்லாம் பட்டினத்தார் ஏற்றப்பட்ட போது, கழுமரம் பற்றி எரிஞ்சமாதிரி, இதாலவாற இவன்ர உழைப்பு, அவன்ர வறுமையெல்லாம் எரிச்சு, அவனையும் உயர்த்துமோ. அல்லது அவனையே...?

சீ... என்ன நினைப்பிது. எண்ணங்கள் எப்பவும் நேராகவே இருக்க வேணும் என்று சிந்தனையை உதறியவளுக்கு, சிறுவர் தினத்திற்காய் கட்டுரை, கவிதை எழுத ஊக்கப்படுத்த வேண்டிய பொறுப்புத் தன்னிடம் தரப்பட்டது நினைவுக்கு வந்தது.

கட்டுரை, கவிதைகள்,சிறுவர் உரிமை, அவற்றினைப் பாதுகாத்தல் தொடர்பாய் அமைய வேணும்.

அவளுக்கு அண்மைய காலங்களில் வந்து கொண்டிருக்கும் பத்திரிகைச் செய்திகளில் சகல பிள்ளைகளுக்கும் கல்வியாய் வறிய இடைவிலகல் மாணவர்களுக்குப் பல மனித நேய சிறுவர் உ ரிமை நிறுவனங்கள் பாடசாலை உபகரணங்கள் கொடுத்து வருகின்றன. என்ற செய்தியும் பழைய பாடத்திட்ட ஆண்டு ஆறோ, ஒன்பதோ சரியா நினைவில இல்ல ஆங்கிலப் புத்தகத்தில 'த புவர் மான்' என்ற கவிதையாய் இருக்க வேணும் நினைவில் பளிச்சிட்டன.

பசியோட வந்து கொண்டிருந்த ஏழை மனிதருக்கு, கடற்கரையில நின்று அதன் அழகை ரசித்துக் கொண்டிருந்த பணக்கார மனிதன். ஆகா...! என்ன அற்புதம்! என்று விபரிக்க வைற்றுப் பசியோட வந்த ஏழைமனிதனுக்கோ ரசிக்கத் தோன்றேல்ல கொட்டாவி வருகிறது.

ஆனா... அவன் ரசிக்கத் தெரியாத மனிதனல்ல அவனுக்கு....? இவனுக்கு...? இடப்பெயர்வுகள்.. இழப்புகள் ... இல்லாமை...

வாழ்க்கையே கசந்து போயிருக்குமோ பாணுக்கே வழியில்லை என்று மகாரானியிட்ட முறையிட்ட மக்களுக்கு கேக் சாப்பிடுங்கோ என்று மகாராணி சொன்ன ஆலோசனை மாதிரி அமலாவிற்கும் அவனுக்குத் தான் சொன்ன ஆலோசனைகள் இருக்குமோ என்று தோன்றிற்று.

'நீங்கள் ஏன் அப்பன் போறதில்லை..” கண்ணில நீர்கட்டச் சிரித்தான். ஊருக்குப் போய்த் தான் படிக்கிறது எண்டிருந்தன் ஆனா.. ஊருக்குப் போனாலும் இதே நிலைதான். தென்னைமரங்கள் ஒன்றும் இல்லையாம். பொட்டல்வெளியாய் அடிக்குத்திகள் மட்டும்தான் இருக்காம். போய் என்ன செய்யிறது... அதோட எங்கன்ர வீட்டுக்குப் பக்கத்து வீடுதான் வினோதினியக்கான்ர வீடு. நான் வீனோக்காவெண்டுதான் கூப்பிடுகிறனான். அவா நல்ல படிப்புப் படிச்சவ. அவாக்கு இன்னம் வேலை கிடைக்கேல்ல. நான் அழேக்க அவதான் என்ன தேற்றுறவா. அவா அழேக்க நான்தான் தேற்றுறனான்.

-அலெக்ஸ் பரந்தாமனின்

# மூன்று குட்டிக்கதைகள்



## அந்த நாள் ஞாபகம்

**சாலை** வழியே பள்ளங்களில் தேங்கி நிற்கும் மழைநீரைக் கனரக வாகனங்கள் பாய்ச்சியடித்து, உடலையும் போட்டிருக்கிற உடுப்பையும் சேறாக்கி விடுமோ என்ற பயத்தில் முன்னும் - பின்னும் கவனமாகப் பார்த்தவாறே மிக வேகமாக சந்தையை நோக்கி நடந்து கொண்டிருந்தார் வைத்திலிங்கம் வாத்தியார்.

சந்தையின் உட்புறம் சேறும் சகதியுமாக இருந்ததோடு, அதிகளவு சனக் கூட்டத்தையும் அது உள் வாங்கியிருந்தது. சகதியில் 'சிலிப்பர்' காலோடுநடப்பது வாத்தியாருக்கு பெரும் சிரமமாக இருந்தது. ஒருவாறாக ஒருவாரத்துக்குரிய மரக்கறி மற்றும் உபசாமான்களை வாங்கிக் கொண்டு திரும்புகையில், வாத்தியாருக்கு அந்த ஆச்சி கண்ணிலே தென்பட்டாள்.

வெங்காய வியாபரிகளுக்கு முன்பாக வளர்ந்து நிற்கும் அந்தப் பனை மரத்தின் கீழ், கிழிந்து போன உரப்பையொன்றின் மீது தூதுவளை இலைகள், மொசுமொசுக்கையிலைகள் மற்றும் முருங்கையிலைக் கட்டுகளைப் பரப்பி, அவற்றை விற்பனை செய்வதற்காக இருந்தாள்.

சந்தையினுள் சாமான்கள் வாங்க வருவோர் எவரும் அந்த ஆச்சியைக் கவனித்ததாகத் தெரியவில்லை. நைந்துபோன பழைய பருத்தி நூல் சேலையோடு, சுருக்கம் விழுந்த அவளது முகத் தோற்றம் அவளின் வறுமையைச் சொல்லாமலே சொல்லிக் கொண்டிருந்தன.

வாத்தியார் ஆச்சியின் அருகில் வந்தார்.

"தூதுவளை ஒரு கூறு என்ன விலை ஆச்சி?"

"ஒரு கூறு அஞ்சு ரூவா அய்யா."

"உந்த நாலு கூறையும் தாணை ஆச்சி...."

ஆச்சியின் முகத்தில் அளவு கடந்த சந்தோசம். இலைகளை அப்படியே கூட்டி அள்ளி வாத்தியாரின் 'பை'யினுள் போட்டாள். வாத்தியார் கொடுத்த இருபது ரூபாத்தாளை வாங்கி தன் இரு கண்களிலும் ஒற்றி கைவிரல்களை நெட்டி முறித்துக் கொண்டபோது வாத்தியாரின் கண்கள் பனித்து விட்டன.

மரக்கறி வியாபாரம் செய்து, தன்னை ஒரு 'வாத்தியார்' நிலைக்கு ஆளாக்கிவிட்டு இறந்து போன தனது தாயை அக்கணத்தில் நினைத்துக் கொண்ட போது, வாத்தியாருக்கு, மேலும் பனிக்கத் தொடங்கின கண்கள். ●●●

## தட்டிச் சுத்திகள்



"**விறகு** வேணுமா விறகு.....?"

தெருவிலே ஒலித்த குரலைக் கேட்டு அடுக்களையில் உள்ள வேலைகளை அப்படியே போட்டு விட்டு முற்றத்துக்கு வந்தாள் அந்த வீட்டுக்காற அம்மா.

"தம்பி... விறகுகாரத்தம்பி...."

கூப்பிட்டுக் கொண்டே முற்றத்துச் சேற்றினில் வழுக்கி விழுந்து விடாது, தன் பாதங்கள் இரண்டையும் மிகப் பக்குவமாக மண்ணில் பதித்து நடந்தாள்.

விறகு விற்பனை யாளன் அவளின் குரலைக் கேட்டதும் , விறகின் பாரச்சுமையோடுதனது மிதிவண்டியைத் திருப்பி உருட்டிக் கொண்டு அவளிடத்தில் வந்தான்.

"விறகு என்ன விலை போகுது...?"

"நூற்றி எழுபத்தைஞ்சம்மா.."

"என்னது...? அண்டைக்கு ஒருவன் இதைவிடக் கனக்க விறகு நூறு ரூபாவுக்குத் தந்தவன்."

விறகுக்காரன் எதுவும் கூறாது மௌனமாக நின்றான். அவனது தலையில் இருந்தும், அணிந்திருந்த ஈர உடையிலிருந்தும் சொட்டுச் சொடடாக மழை நீர் வடிந்து கொண்டிருந்தது. குளிர் மிகுதியால் அவன் உதடுகள் இரண்டும் ஒன்றோடு ஒன்று தொட்டு விளையாடிக் கொண்டிருந்தன.

"விறகை நூறு ரூபாவுக்குத் தாவன்.." வீட்டுக்கார அம்மா குறைந்த விலையில் அவனிடம் இருந்து தட்டிப்பறிக்கும் முயற்சியில் இறங்கினாள்.

"அம்மா! நான் சொன்ன விலையிலிருந்து ஒரு சதமும் குறைக்க மாட்டன். விரும்பினால் வாங்குங்கோ. இல்லாட்டி விடுங்கோ. மழைவரப் போகுது. நான் கெதியாப் போகவேணும்...."

அவன் கடுமையாக கூறியபடி, தன்மிதிவண்டியை மெல்லத் திருப்பினான்.

'இவனிடம் சரிப்பட்டு வராது போலக் கிடக்குது....' என நினைத்த அம்மா, தன்கையினில் வைத்திருந்த இருநூறு ரூபாய்த் தாளை எடுத்துக் கொடுத்தாள்.

"என்னட்டை சில்லறை இல்லை' அவன் கூறினான்.

"அப் உந்தப் படலைக்குள்ளை விறகைப்பறி. நான் உதிலை கடையில மாத்திக் கொண்டு வாறன்..." அவள் கூறியபடி அவனை விட்டு நகர்ந்தாள்.

விறகுகாரனுக்கு இன்னும் சில நிமிடங்களில் தன்கையில் சேரப் போகும் நூற்று எழுபத்தைந்து ரூபாவினைப் பற்றியதாகவே இருந்தது. அவன் ஒவ்வொரு விறகுத் தடிகளாக எடுத்துப் போட்டு விட்டு நிற்கையில் மழை பலமாகப் பெய்யத் தொடங்கியது.

"இந்தா பிடி காசை..." அவசரமாக வந்த வீட்டுக்கார அம்மா அவனிடம் காசைக் கொடுத்துவிட்டு தெருப் படலையைத் திறந்தவள் அதைச் சாத்தி உள் கொழுக்கியை மாட்டி விட்டு வீட்டுக்குள் சென்று மறைந்தாள்.

அவன், அவள் கொடுத்த காசை விரித்துப்பார்த்தான். நூறு ரூபாய்த்தாள் மட்டுமே இருந்தது. மிகுதி....?

"அம்மா.... அம்மா..." அவன் படலையடியில் நின்று கத்தினான் பலமாக.

ஆனால் அந்த அம்மா வரவேயில்லை வெளியில் வெகு நேரமாக. ●●●

## வக்கிரமனம்



**காலைப்** பொழுது உதயமாகி வெகு நேரம் கழிந்துவிட்டது. அவன் இன்னமும் நித்திரை கலைந்து எழும்பவில்லை. முதல் நாள், இரவு நேரக் கடமையை முடித்துவிட்டு வீட்டுக்கு வர வெகுநேரம் சென்று விட்டதால் அவன் இன்னமும். அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

"டேய் தம்பி.... எழும்படா. இண்டைக்கு பகல் நேர வேலையல்லோ. ஒன்பது மணிக்கு வேலைக்குப் போக வேணுமெல்லோ..." தாய் அவனைத் தட்டி எழுப்பினாள்.

அவன் நேரத்தைப் பார்த்தான். எட்டுமணி. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தவன், அவசரம் அவசரமாக முகம் கழுவி விட்டு குளிப்பதற்காக இரண்டு வீடு தள்ளியிருக்கும் அந்தக் கிணற்றடியை நோக்கி நகர்ந்தான். கிணற்றடியில் அந்த வீட்டுக் காரனின் மகன் குளிப்பதற்கு அயத்தமாக நிற்பதைக் கண்டதும், அவன் மனம் சலித்துக் கொண்டது.

"கொஞ்சம் பொறும். நான் குளிச்சுட்டு விடுகிறன்...." அவன் எதுவும் பேசாது மௌனமாகத் தலையாட்டி விட்டு அவ்விடத்தில் நின்றான்.

குளிக்கப் போன வீட்டுக்காரனின் மகன், முதலில் இரண்டு மூன்று வாளி தண்ணீர் அள்ளி கிணற்றுத் தொட்டியைக் கழுவினான். பின்பு குளிக்கும் தொட்டியில் நீரினை நிறைத்து நிரப்பினான். கிணற்றின் அருகோரம் ஒரு தடிக் கெவரில் கொழுவியிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியில் 'ஷேவ்' எடுத்துக் கொண்டான். அதன்பின்பு உடலுக்கு இரண்டு தடவைகள் மாறிமாறி சவர்க்காரம் பூசிக் குளித்தவன், காலில் அணிந்திருந்த 'பாட்டா' செருப்புகள் இரண்டுக்கும் சவர்க்காரம் பூசுவதும்... அதைப் பொச்சுத் தும்பால் தேய்த்துக் கழுவுவதுமாக....

இத்தனைக்கும் கிணற்றுக்குப் பக்கத்தில் இன்னொரு மனிதன் குளிப்பதற்காக வீடு தேடி வந்து நிற்கிறான் என்ற உணர்வோ, கவனிப்போ எதுவுமற்ற நிலையில் அந்த வீட்டுக் காரப் பொடியன் நடந்து கொண்டிருந்தான்.

"சே.... இடம் பெயர்ந்து வந்ததாலை இந்த நிலை, ஊரிலையென்டால்...?'

ஊரின் நினைவுகள் அவன் இதயத்தைப் பெரும் கனமாய் அழுத்தின. நேரம் வெகுவிரைவாய்ச் சென்று விட்டதை உணர்ந்து கொண்ட அவன், திடுமென வீட்டை நோக்கித் திரும்பி நடந்தான்.

அவன் செல்வதைக் கிணற்றடியில் நின்றவாறே கவனித்த வீட்டுக்காரப் பொடியன், அத்தோடு தனது குளிப்பை முடித்துக் கொண்டு வெளியேறினான் தன் கிணற்றடியைவிட்டு... ●●●




## எரிந்த சாம்பலிலிருந்து.......

உயிர்ப்புற்றெழுந்து
போவதாய்
ஓருணர்வு.
புழுதி குளித்தெழுந்து
எதையோ தேடிக்
கொண்டிருக்கும்
கௌதாரிகளின்
கண்களையே.....
பார்த்துப் பார்த்துக்
கலங்குது கண்ணீர்.

உலவுது காற்று
உயிர் பெறுகின்றது இயற்கை
எரிந்த சாம்பலிலிருந்து
எழுந்த 'பீனிக்ஸ்' என
எழுதப்படுகின்றது
உறவு
அன்றைய நாள்
அந்தத் தனித்த கல்லறைக்கும்,
எனக்குமான
உறவினிடையில் எரிந்த
தீபத்தலிருந்து
தெரிந்த அந்த முகத்தைப்
போல.....

எல்லாமே போனபோதும்,
எழுதிய - உன்
உயிர்ப் பாடலின்
பல்லவி முடித்தே....
பாலங்கடப்பதெனப்
பிடிவாதம் பிடிக்கின்றது
பேனா.....
பேனா மட்டுமல்ல
உனதும் எனதுமான உறவில்
கலந்து போன......
உணர்வுங் கூடத்தான்.....

நா. கானகன்



## சமாதானம்..

அழகான ஒரு தேர்
ஆயிரமாயிரம் பேரின்
அர்ப்பணிப்பால்
உருவான,
அற்புதத் தேர்.
பல்லாண்டாய்
பல்லாயிரம் பேரின்
உதிரத்தில் ஊறி
உறுதி பெற்று உருவான தேர்
வேலைப்பாடெல்லாம்
முடித்து
வெள்ளோட்டத்திற்கு
தயாராய்
நிற்கிறது.
வடம்பிடித்திழுக்க
அயலவரெல்லாம் அழைப்பு
கேட்கின்றனர்.
பூசை முடிந்து
வீதி உலாவர தயாராகிறது.
புதுத்தேர்.
ஆயிரம் பேர் சேர்ந்து
ஆசையாய் தேரிழுக்கின்றனர்.
சித்திரத்தேரின்
சிறப்பான உலாக்கண்டு
சினங்கொண்ட சிலர்
அச்சாணி கழட்டி - தேரை
அடியோடு சாய்க்க
முயல்கின்றனர்.
இருந்தும்
அயலவரின் உதவியுடன்
அழகாய் வலம் வருகிறது
தேர்.




தமிழவன்,

வாய்மை, வாசல் கதவில் தடுக்கி நின்று விடும், தவறு இடுக்கு வழியாகக் கூட உள்ளே நுழைந்து விடும். - ஜேஷ் பீல்லிவ்ஸ்.

# இளைவர்களுக்கு இளையநாதத்தின் புத்தாண்டு வாழ்த்துக்கள்

2003




## கத்தி கொடுத்த புத்தி



குமரனும், பிரமனும் உற்ற தோழர்கள். பாலர் வகுப்புத் தொடக்கம் 7ம் வகுப்பு வரை ஒன்றாகவே படித்துக்கொண்டிருந் தார்கள். பிரமன் வகுப்பில் ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதை அப்படியே விளங்கிக்கொள்வான். அத்துடன் எதையுமே துருவித் துருவிக் கேட்கும் தன்மையுடை வன். ஆனால், குமரன் சில பாடங்களை விளங்கிக்கொள்ளத் தாமதம் எடுக்கும். அப்போது, பிரமன் அவனுக்கு அதனைச் சொல்லிக்கொடுப்பான். குமரன் படிக்க முயற்சியெடுப்பது மிகக்குறைவு. பாடசாலையில் கற்பிக்கும் பாடத்தை மீண்டும் படிக்கமாட்டான். எவ்வளவு சொன் னாலும் தட்டிக்கழித்துவிட்டு விளை யாட்டில் ஈடுபட்டுவிடுவான்.

அன்று வெள்ளிக்கிழமை, கோயிலுக்குச் சென்று இருவரும் கடவுளை வணங்கிவிட்டுப், பாட சாலை செல்லச் சற்றுத் தாமதமாகிவிட்டது. அதனால், அதிபர் தண்டனையாக வகுப்ப றையின் வெளியே நிற்குமாறு பணித்துவிட்டார். பிரமன் தன் பிழையை உணர்ந்து மனம் வருந்தி னாலும், குமரன் ஆத்திரமாகவே இருந்தான். அவனுக்குப் பழிவாங்கும் எண்ணமே அதிகமாக இருந்தது. தன்னுடைய பிழையை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இருக்கவில்லை. ஆனால் பிரமன்,

“வா,நாங்கள் அதிபரிட்ட மன்னிப்புக்கேட்டிட்டு வகுப்புக்குப் போவம். பாடமெல்லாம் அநியாயமாய்ப் போகுது'' என்றவுடன், குமரனும் அரை மனதுடன், மன்னிப்புக் கேட்டு விட்டு இருவருமாய் வகுப்பிற்குள் நுழைந்தனர்.

ஒரு நாள், இருவரும் கந்தசாமி கோயில் தேர்த் திருவிழாவிற்குச் சென்றார்கள். அருகேயிருந்த பட்டடையைப் பார்க்க ஆசைப்பட்ட அவர்கள், ஆவலாக விரைந்தனர். அங்கே பெரிய இரும்பொன்றை, நெருப்பில் வைத்து சூடாக்கு வதைப் பார்த்த குமரன், “ஏன், இப்படிச் செய்யிறியள்?, இந்தப் பெரிய இரும்பில என்ன தான் செய்யலாம்,?” எனக் கேட்டான்.

“அதா தம்பி, இப்படி இரும்பை நெருப்பில காய்ச்சி அடிச்ச கத்திகள் தான் இதுக ளெல்லாம்” என்றார் அந்தப் பெரியவர்.

“எப்படி இதெல்லாம் உங்களுக்குத் தெரியும்...?'' குமரன் கேட்க,

“எல்லாம் அப்பாவோட சேர்ந்து, என்ர முயற்சியால தான் பழகினனான்” என்று பதில் கூறினார்.

''இனி, நானும் மீண்டும், மீண்டும் முயற்சியெடுத்தால் எவ்வளவு நன்றாகப் படிக்கலாம்? சும்மா கிடந்த இரும்பைத்தானே இப்படியெல்லாம் மாத்தியிருக் கிறார். ஏன், நான் மாறேலாது....? என எண்ணியவன், “முயற்சியெடுத் தால் முடியாதது எதுவுமே கிடையாது என்பதை உணர்ந்து கொண்டான்.

வி.தேவபானு

## வாரம் ஒரு குறள் அறிவோம்



இன்று உலகளாவிய ரீதியில் மக்களுக்கான உதவிகள் புரியப்பட்டு வருகின்றன. போரினாலும், இயற்கை அழிவுகளாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களுக்கான உதவிகளைப் பல நாடுகளும் புரிந்து வருகின்றன. இதேபோல இடர்ப்படுகின்ற ஒருவருக்கு இருப்பவர்கள் கொடுத்து உதவுவது என்பது சிறந்த ஒரு செயலாகும். இத்தகைய உதவிகள் காலமறிந்து, நேரமறிந்து, தேவையறிந்து செய்யப்படுவது மிக மிக முக்கியமானதாகும். அப்படிச் செய்யப்படுபவைகளே உதவி என்ற வரைவுக்குள் அடங்கும். இல்லையெனில் ஒருவன் தன்னிடத்தில் இருந்ததைக் கொடுத்தான் என்று சொல்லி வைக்கலாமே தவிர, உதவி செய்தான் என்று சொல்லி விட முடியாது. ஆகவே தேவையறிந்து ஒருவருக்கு உதவ எல்லோரும் முயலுவோம். நாகரிக மோகத்தில் திளைக்கும் நம்மில் அநேகர் பேருக்காகவும், புகழுக்காகவும் அள்ளியள்ளி வழங்குகிறார்கள். அதில் என்ன பயன் உள்ளது?அதன் பெருமை எத்தகையது? இந்தக் கேள்விக்கு விடையாகவே,

“உதவி வரைத்தன்று உதவி, உதவி செயல்ப்பட்டார் சால்பின் வரைத்து”

என்று வள்ளுவர் தமது நடையில் அழகாகக் கூறியுள்ளதை நோக்குவோம்.

## மீனவர்

கப்பல் ஒன்று கடலிலே
கரையை வந்து அடைந்தது.
மீனவர்கள் படகிலே மீனை
சேர்ந்து வந்தனர்.

கொண்டு வந்த மீன்களை
விற்கக் கொண்டு சென்றனர்.
விற்றுப் பெற்ற பணத்தினை
வீடு கொண்டு சென்றனர்.

பணம் முடிந்த பின்பு தான்
கடற்கரைக்கு வந்தனர்.
மீண்டும் படகில் ஏறினர்
மீன்கள் பிடிக்கச் சென்றனர்.

அன்று மட்டும் அதிஸ்டமாய்
பெரிய மீன்கள் மாட்டின.
அன்று தொடக்கம் மீன்களை
தொடர்ந்து பிடிக்கச்
சென்றனர்.

பு.சஜீவன்,றம்பைக்குளம்,வவுனியா.

## குறுக்கெழுத்துப் போட்டி 1

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | | | |

**இடமிருந்து வலம்**

1- 4 வெளிநாட்டுச்சிற்றுண்ணித் தாக்கத்ததினால் அதிகம் பாதிக்கப்பட்ட எமது உற்பத்தி ஒன்று.

6-9 பழுதாகும் உணவுப்பொருட்களை இப்படியும் பாதுகாப்பர்.

12-14 எம்மிடம் காணப்படும் ஒரு பரந்த வளம்(குழம்பியுள்ளது.)

15-19 இந்தியாவிலே கடும் கோடையிலும் குளிர்மை தரும் நீர்வீழ்ச்சி ஒன்று உள்ள இடம்.

20-21 எந்தவொரு மனிதனுக்கும் அவசியம் தேவை எமக்கும் அது கிடைக்க வேண்டும். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1-15 மிகவும் சோம்பேறியான மிருகம், கோபத்தில் இதன் பேரைச் சொல்லிப் பேசுவர்.

3-12 இது பலரைப் பைத்தியமாக்கும் என்பர்.

5-19 முத்தமிழ்களில் ஒன்று

இளையவர்களே!

கட்டங்களை தாள் ஒன்றில் வரைந்து சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.1
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

போட்டியில் பூரணமாக விடைகளை நிரப்பியவர்கள் பெயர் இளையநாதத்தில் பிரசுரிக்கப்படும். உங்கள் பெயர் விபரங்களைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

## உங்களுக்குத் தெரியுமா...?

- ஆதிகாலத்தில் ரயிலை குதிரைகள் தான் இழுத்தன கேட்க வேடிக்கையாக இருந்தாலும் உண்மை இதுதான். தொடக்க காலத்தில் பஸ்களையும், ரயில்களையும் குதிரைகளே இழுத்துச் சென்றன.

- ஒக்ஸிஜன் இல்லாமலே இமய மலையில் ஏறியவர்கள் கூட இருக்கிறார்கள். ஆஸ்திரியாவைச் சேர்ந்த 'பீடர் ஹெப்ளரும்' இத்தாலியின் “.'.பெயின் 'ஹோல்டு மெஸ்னரும்” ஒக்ஸிஜன் இன்றியே எவெறெஸ்டில் ஏறிச்சாதனை புரிந்துள்ளனர். நாள் 08-05-1978

- குதிரைகளுக்கு நடனமாக கற்பிக்கப் பாடசாலைகள் இருக்கின்றதென்றால் நம்புவீர்களா? குதிரைகளுக்கு நடனப்பயிற்சி அளிக்கப் பாடசாலைகள் வியன்னாவில் உள்ளன இந்த நடனத்திற்கு பெயர் லெபிசானர் (Lipizaner)

கு.தனுசஷன்
தரம்-7
கிளி/அக்கராயன் ம.வி.




வேகமாக வண்டி இழுக்கும் ஹக்னிக் இனக்குதிரை



திபெத்திலிருந்து பார்க்கும் பொழுது எவெரெஸ்ட் சிகரம்



நடனமாடப் பயிற்றிவிக்கப்படும் குதிரை




**ஓவியத்துக்குள் ஓவியம் கண்டுபிடியுங்கள்.**

வளர்ந்திருக்கும் செடிக்குள் இரண்டு உருவங்கள் ஒளிந்தி ருக்கின்றன. அவற் றைக் கண்டுபிடி யுங்கள்.

இ.ராஜ்குமார்
மு/புதுக்குடியிருப்பு ம.வி.

இளையவர்களே!
உங்கள் ஆக்கங்கள் வரவேற் கப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி

இளைய நாதம், வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

# சிறுவர்களும் அவர்களது விருப்புக்களும்


முத்து ராதாகிருஷ்ணன்

# சிறுவருக்கு உகந்த அரங்கு

**சிறுவர்** அரங்கில் 'சொல்லுதல்' என்பதை விட 'நிகழ்த்திக் காட்டுதல்' என்பதே முதன்மை பெறும். உரையாடல்கள் குறுகியதாகவும் பிள்ளைகள் விரும்பும் வகையிலும் இருத்தல் வேண்டும்.

ஒப்பனையைப் பொறுத்தளவில் எவ்வித ஒப்பனையும் பிள்ளையின் முகத்தை முற்றாக மறைப்பதாக இருத்தல் கூடாது. குறித்த பாத்திரத்தின் தன்மை புலப்படும் வகையிலும் இப்பாத்திரமாக நடிக்கும் சிறுவன் யார் என்பது தெரியக் கூடிய வகையிலும் ஒப்பனைகள், வேடப்புனைவுகள் இருத்தல் அவசியமானதாகும். முற்றாக முகத்தை மூடிய முகமூடிகள், ஒப்பனைகள் சிறுவர் அரங்கைப் பொறுத்த வரையில் பொருத்தமற்ற ஒன்றாகும். தமது சக நண்பன் தான் குறித்த பாத்திரமாக வருகிறான் என்பது இவ்வரங்கில் கலந்து கொண்டிருக்கின்ற ஏனைய சிறார்களுக்கு துலாம்பரமாகத் தெரிதல் வேண்டும். இச்சிறுவர் அரங்கு சிறார்களின் உணர்வுடன் ஒன்றிவிடக்கூடியது என்பதால் பகுத்தறிவற்ற விடயங்களைக் கையாளுதல் தவிர்க்கப்பட வேண்டும். பாரதூரமான விடயங்களைச் சிறார்களின் மனதில் அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் பயன்படுத்தலாகாது. உதாரணமாக ஒரு நாடகத்தில் சிங்கம், மான், மரை, போன்ற மிருகங்களைப் பிடித்துக் கொல்வதாகக் காட்டும் போது சிங்கம் பிடித்து இறந்த மான் நாடகத்துக்குக்காகப் பொய்யாக இறந்தது போல் கிடக்கின்றது என்பது சிறுவர் களுக்கு புரிய வேண்டும். அவர்கள் பார்க்கும் போது மான் எழுந்து ஓடலாம். இறந்த மானைச் சுற்றி ஏனைய மிருகங்கள் அழுவதாக இருந்தால் அது அழுவது என்றில்லாமல் நகைச்சுவையாக இடம் பெறுதல் வேண்டும். இவ்வாறான விடயங்களில் மிக அக்கறையுடன் இவ்வரங்கில் ஈடுபடுபவர்கள், வழிகாட்டுபவர்கள், தொழிற்படுதல் அவசியமாகும்.

வளர்ந்தவர்களுக்குரிய அரங்குகளில் பயன்படுத்தப்படும் உறைநிலையில் நிற்றல் (still) என்பதுவும் சிறார்களின் அரங்கில் பொருத்தமற்ற ஒன்றாகும்.

**சிறுவர் அரங்கின் பயன்**

சிறுவர் அரங்கினால் சிறார்கள் அடையக்கூடிய பயன்கள் பலவுள்ள. முக்கியமாக அவர்கள் அழுத்தங்களிலும் பல்வேறுபட்ட உள அழுத்தங்களில் இருந்து விடுபவர். இதனால் தெளிவான சிந்தனையும் படைப்பாற்றலும் வியாபகமான நோக்கும் ஏற்படும். விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் உருவாகும், சமூகத்தில், நண்பரிடையே, வகுப்பில் கூடிக்கருமமாற்றும் இயல்பும், தன்னடக்கம், கற்பனை விருத்தி என்பவை ஏற்படும். எதையும் யோசித்து அனுபவித்து இரசிக்கத் தெரிந்த இரசனைத் திறன் வளர்ச்சியடையும்.



உயர்வான குணங்கள், நேர்மை, அன்பு,உயிர்களிடத்து நேசம் என்பவை இயல்பாகவே ஏற்படும். உண்மையான மகிழ்வு, நகைச்சுவை என்பவையும் இயல்பாகும். இவை எல்லாம் ஒருங்கிணை ந்து கல்வியிலும் குணத்திலும் மேம்மட்ட ஆழுமைகொண்ட மனிதனாக வருவதற்கு வழிசெய்யும் எனக் கூறலாம். எனவே நல்ல மனிதர்களை உருவாக்கு வோம்.

துரதிஷ்டசவமாக இலங்கை போன்ற நாடுகளில் நிலவும் முரண்பாடுகளும் அதனால் கிளர்ந்தெழுந்துள்ள யுத்தமும் சிறுவர்களுக்கு மிக மோசமன பாதிப்புக்களையே ஏற்படுத்தியுள்ளது. இங்கு பலவிடங்களில் சிறார்களுக்கு தமது உளவயதிற்கேற்ப பொருந்தி வாழக்கூடிய வாய்ப்பு கிடைக்கவில்லை. இவ்வாறு இயல்பான இந்த உள வயதுக்கு பொருந்தக்கூடிய வாய்ப்புக்கிடைக்காத சிறார்கள் எத்தகையவர்கள் என நோக்கினால்....

1. மிக வறுமையான குடும்பச் சூழல், வறுமையான நாடு, பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டு வறுமையாக்கப்பட்ட சமூகச்சூழல்களில் உள்ள சிறார்கள்கள்.
2. மிக மோசமான போர்ச் சூழல் காணப்படுகின்ற நாடுகள், பிரதேசங்கள், போராட வேண்டிய நிர்ப்பந்தங்கள் காணப்படும் பகுதிகளில் உள்ள சிறார்கள்.
3. இன முரண்பாடுகள் காணப்படுகின்ற சூழல், எல்லைப் பகுதிக் கிராமங்கள் நிதமும் பயமுடன் வாழ வேண்டிய சூழல்களில் உள்ள சிறார்கள்.
4. பொருளாதாரக் காரணங்களுக்காக சிறுவர்களைத் தொழிலில் ஈடுபடுத்தும் சமூகங்களில் உள்ள சிறார்கள்.
5. சிறுவர் சிறுமியரைப் பாலியல் தொழில்களில் ஈடுபடுத்தக்கூடிய சூழலில் உள்ள சிறார்கள்.
6. அடக்குமுறை, சர்வாதிகாரப் போக்கு கொண்ட கல்வி நிறுவனங்களில் கல்வி கற்க வேண்டிய சிறார்கள்.

மேற்குறிப்பிட்ட சூழல்களில் சிறார்கள் தமது வயதுக்கும் தமது உளவயதுக்கும் பொருத்தமற்ற செயல்களில், ஈடுபடுத்தவும் ஈடுபடுத்தப்படவும் செய்யப்படுத்தப்படுகின்றனர். பிரச்சினைகள் அவர்களை மன அழுத்தங்களுக்குள் நுழைத்து விடுகின்றது. சிறுவர்கள் சிறுவர்களாக இல்லாது பெரியவர்களாக செயற்படத் தொடங்குகின்றனர். இத்தகைய நிலை அவர்களது இயல்பான தன்மையிலிருந்து முற்றாக மாற்றி விடுகின்றது. இத்தகைய மன இறுக்கங்களிலிருந்து சிறுவர்களை விடுவிப்பதற்கு சிறுவர்களுக்கான 'சிறுவர் அரங்கு' (children theatre) சிறுவர் விளையாட்டுக்கள் (children play) என்பவை மிகப் பொருத்தமானவையாகக் கருதப்படுகின்றன. வன்முறையான மனநிலையில் இருந்து விடுபடக் கூடிய நீதிக்கதை களையும் அவர்கள் விரும்பும் பொருட்கள் மிருகங்களையும் பாத்திரங்களாகவும் உருவகங் களாகவும் கொண்டு இச்சிறுவர்களுக்கான அரங்கு அமைதல் வேண்டும். எனவே இவ்வளவு சிறப்புப் பொருந்திய சிறுவர்களுக்கான இவ்வரங் கினைப் பயன்படுத்தி நல்ல மனிதர்களை உருவாக்குவோம்.

**வடக்கு கிழக்கில் சிறுவர் அரங்கின் தேவை**

வடக்கு கிழக்குப் பகுதி நீண்காலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பதால் சிறுவர்களிடையே கல்வியில் நாட்டமின்மை, கட்டாய இலவசக் கல்வியை பெற்றுக் கொள்ளாமை, பாடசாலையிலிருந்து இடைவிலகல் போன்ற தன்மைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருவது கண்டு கொள்ளப்பட்டுள்ளது. யுத்தம் வறுமை என்பன அதன் மூலங்களாக கருதப்பட்டாலும் இவ்வழுத்தங்களில் இருந்து சிறார்களை விடுவிக்கவோ அல்லது இத்தகைய சிறார்களை அடையாளம் காணவோ சதாரண கற்றல் கற்பித்தல் நடைமுறைகளால் சாத்தியப்படவில்லை எனவே இக்குறைபாடுகள் தொடர்ச்சியாகவே இருந்து கொண்டே வருகின்றன.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் எல்லைப் பகுதிகளிலும், கிராமப்புறங்களிலும் உள்ள சிறார்களை அவதானித்தபோது பின்வரும் குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டன.

1. சிறார்கள் தமது தாய் தந்தையர் அல்லது உறவினர்களின் அகால மரணங்களை கண்ணுற்றவர்களாகவும் கேள்விப்பட்டவர்களாகவும் இருத்தல்.
2. தாய் தந்தையரை இழந்து உறவுகள் மற்றும் வெளியாரில் தங்கியிருக்கின்றவர்களாக இருத்தல்.
3. நீண்டகாலமாக முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து மனநெருக்குதல்கள் கொண்டவர்களாக இருத்தல்.
4. கட்டாய இலவசக்கல்வி வாய்ப்புக்கள் இருந்தும் வறுமை பொருளாதார ரீதியில் வீட்டிற்கும் பயன்பட வேண்டிய தன்மை என்பவற்றால் பாடசாலையை விட்டு விலகி இருக்கின்றவர்களாக இருத்தல்.
5. மனப்பாதிப்புக்கள் பயம் என்பவற்றைக் கொண்டு (இயல்பில்) இயலாதவர்களாக இருத்தல்.
6. தமதுதிறமைகளை விருப்பங்களைத் தாமே அறிந்து கொள்ளாமல் இருக்கின்ற தன்மை உடையவர்களாக இருத்தல்.
7. பாடசாலைகளில் கற்பவர்களில் பெரும்மள விலானலான சிறார்கள் கல்வியை சுமை யாக கருதுகின்ற தன்மை உடையவர்களாக இருத்தல்.
8. பாடசாலையில் கற்கின்ற மாணவர்களில் பொருமளவானோர் உணர்வுகளை வெளிப்படையாகப் பகிர்கின்ற பழக்கம் அற்றவர்களாக இருத்தல்.
9. பாடசாலைகளில் கற்றல் கற்பித்தற் செயற்பாடு கவர்ச்சிகரமான ஒன்றாக இல்லாததால் பாடசாலையை விட்டு இடைவிலகல்.
10. விழுமியங்களை மதிக்காமல் தான்தோன்றித்தனமாக வாழ முனைதல்.
11. வன்முறையின் பால் விருப்புக் கொண்டவர்களாக இருத்தல்.
12. தமது திறன்களை முற்றிலுமாக வெளிப்படுத்த முயற்சிக்காது சோம்பியிருத்தல்.
13 பொருத்தமான இடங்களில் தாம் எதிர்நோக்கும் இடர்களுக்கு முகங்கொடுக்க, தட்டிக்கேட்க திராணியற்றவர்காக இருத்தல்.


மேற்குறிப்பிட்ட தன்மைகளில் இருந்து சிறார்களை விடுவித்து 'சகலருக்கமான கல்வி' என்பதை அவர்களும் பெறக்கூடிய வகையில் செயற்படுவதற்கும் அதற்கூடாக அவர்களின் கல்வியில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் சிறுவர் அரங்கு மிகப் பொருத்தமானதாகும். மன இறுக்கங்களிலிருந்து சிறார்களை விடுவித்தல் என்ற 'மனவியல்' சார்ந்த செயற்பாடு இக்கட்டத்தில் முக்கியமான ஒன்றாக உள்ளது. இதற்கு சிறுவர் அரங்கை பிரதான ஊடகமாகப் பயன் படுத்துவதனூடாக பண்படலாம்.

□□□

சாவதற்கு அஞ்சுவனை ஒப்பவே, வாழ அஞ்சுபவனும் ஒரு கோழை ஆவான். - பீனியாஸ்.:.பிளேட்ச்சர்.

# வெளவால்கள்

கிளிநொச்சி வெளவாலுகளுக்கு பேர் போன இடம் அந்த நாளயில அப்பாத்தை சொல்லுவா, வீட்டுக்கை வெளவால் பறந்தா குடியெழுப்பிப் போடும்



எண்டு. நானும் பாத்திருக்கிறன். குடியெழும்பின வீடுவழியதான் வெளவால் குடிகொள்ளுறது. பூட்டியாச்சி சாக அம்மா ஒப்பாரி வச்சது இப்பவும் கண்ணுக்க நிக்குது.

" வண்ணமணி மண்டபமாம்-
ஆத்தையிப்ப
வெளவாலோ கூடுதெணை-
கோட்டைமணி மண்டபத்தில்-
இப்ப
கூகைகுடி கொள்ளுதெணை-"

எண்டு- முன்னை தண்ணித்தாங்கியடியில "ஈயெண்டீ யெல்லெப்" காறர் முகாம் போட்டிருந்தவை, அப்ப உந்த மக்கள் தொண்டர் படைக்கெண்டு ஊருராப் பிள்ளைபிடிகாறர் பிள்ளையளப் பிடிச்சு அங்கதான் வச்சிருந்தவங்கள் தெருவெல்லாம் தாய்மார் அழுது குழறினபடி நிப்பினம். இவை இருந்தாப்போல துவக்கால மரங்களப்பாத்துச் சுடுவினம்.

கீச்சுக் கீச்செண்டு- என்ர தாயே சொல்லேலாது அவ்வளவு வெளவாலும், வானத்திலயிருந்து மழைபெய்தாலும் நிலத்தில விழாது கருமேகம் போல பறக்கும். பிறகு எப்பனால வந்து கண்டுபோட்ட மாட்டின்ர இளங்கொடிய மரத்தில தூங்க விடுவினமே அது மாரி மரத்தின்ர இலைதெரியாம தூங்கிரும். வெளவால் நாத்தமோ.... அய்யேக்...... சிணிநாத்தம். ஆணைமணக்கிறதைவிட மோசம்.

இதுகளெல்லாம் சத்ஜெயவுக்கும் அசையேல்ல, ஓயாத அலை ரெண்டுக்கும் அசையேல்ல. வெடிச்சத்தத்தோட வெளியாலபோயிற்று பிறகும் அதே மரத்தில தொங்கீற்றுதுகள்.ஒண்டு கவனிச்சுப் பாருங்கோ வெளவால் இருக்கிறதில்லை. தூங்கிறது.

மரம் பழுத்தால் வெளவாலை
வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாரும்
இங்குண்டோ.

இது கம்பர் பாடினது. அப்ப சோழனோட கோவிச்சுக் கொண்டு போகேக்க- பாடினது. இப்ப கிளிநொச்சியும் பழுத்தமரம் போலதான்- அங்க உள்ள வெளவால்கள் போதாதெண்டு வெளிநாட்டு வெளவாலுகளும் வருது. வெடிச்சத்தத்தோட எழும்பிப் பறந்ததுகளும் திரும்பி வருது.

தோட்டத்துக்க மாடு பூந்து கிடந்த நேரம் வேலிவிராயெல்லாம் விழுந்து கிடந்த நேரம். அதைச் சீராக்கி வேலிபோட்டதிலும் மாடுகலைச்சதிலயும் எத்தினபேற்ற வாணாள் ( வாழ் நாள்) போட்டுது- துடிக்கப்பதைக்க அதுகளைக் கோண்டே மண்கிடங்கில போட்டாச்சு.

மல்லிகைப் பூ
மாலையிட்டோ- என்ரராசா
உன்னை மடியில் வைச்சுப்
பாக்காம-
எருக்கம் பூ மாலையிட்டோ-
எடுத்தெறிஞ்சம் பூமியிலே..

எண்டு பெத்து வளத்ததுகள் நெருப்பைத் திண்டு தவிக்குதுகள். குந்தியிருக்கிற குடிசைக்கும் கிடுகில்லை.தாற நிவாரணத்தையும் கூலி வேலையையும் நம்பிக் குடும்பங்கொண்டு போகுதுகள்.

எண்ணத்தைச் சொல்லுற வயதியுள்ளவன் வெளிநாட்டில அகதி. வயதியத்தவை உள்நாட்டில



அகதி.

புரிந்துணர்வு ஒப்பந்தம் அது இதெண்டு கிளிநொச்சியப் பாக்கப் பதினாறு கண் வேணும். இருந்தென்ன செய்யிற என்னவோ நாட்டார்பாட்டொண்டு சொல்லுவினயே

தொட்டுத் தாலி கட்டினவன்
துணி விரிச்சுப் படுத்திருக்க
ஏட்டறிவும் கெட்டொருவன்
செய்ததவப் புண்ணியமோ
தோட்டக் காரன்
நானிருக்க- வேலி
துளைச்சு வந்தவன்
பழத்தப்பறிக்க-

எண்டு நாட்டுக்காக வீட்டுக்கு வீடு பங்களிச்சவை நாலு காசில்லாம குந்தியிருக்கினம். ஆனா இந்த குந்தியிருக்கிறவைக்கு ஞாயமா சேரவேண்டியதெல்லாம் ஆராரோ அனுபவிக்கினம். உதுதான் பாருங்கோ "கொமீனிசம்" வளரக் காரணமா இருந்ததும்- உழைச்சவன் குடிசையில பசியில கொட்டாவிவிட உழைப்ப சுறண்டினவன் மாடிமேல மாடிகட்டி அதுக்கு மேல நிண்டு புளிச்சலேவறை விட்டானாம்.


சும்மா- மணியடிச்சு விளக்கைவைச்சு பூசை செய்தா காணாது. ஆரார் சந்தோசமா இருப்பினம் எண்டு நினைச்சு அவயளுக்காகப் பாடு பட்டதுகளின்ர ஆத்துமா குளிர வேணுமெண்டு நினைக்க வேணும்.

ஏற மட்டுந்தான் ஏணி வேணுமெண்டு நினைக்கக் கூடாது. இறங்கவும் வேணும். உயரத்தில ஏற ஏற விழுகிறதும் கஷ்டம்

வண்ண வண்ண வாகனங்களும் வயதியளும் வந்த பிறகு ஊருச் சனத்துக்கும் ஒரு நம்பிக்கை வந்திருக்குத் தான். எங்களுக்கும் காலம் வருமெண்டு. ஆனாப்பாருங்கோ சிலது பேர் 'வளத்தநாய் மூஞ்சயப் பாத்தமாரி உதச்சு தள்ளினாலும் எங்கட உயிர் உங்களோட தான்'எண்டு நிண்டவைகூட இந்த மரத்தில பழம் பொறுக்க வாறத பார்க்க சந்தோசமாக்கிடக்கு. அவைக்கென்ன ஆல் பழுத்தா அங்க அரசு பழுத்தா இஞ்ச.

சொன்னாப் போல கனகமணியக்கா வீடு பெருப்பிச்சுக் கட்டுறாவாம். கட்டிடிஞ்ச கிணறு கட்ட ஏழாயிரத்துக்கு சீமெந்து வாங்கேலாம கிணத்த மூடுவிச்ச மனிசி. இப்ப ரோட்டிலயிருந்து வீட்டுக்கு நடைபாதைக்கு சீமெந்து போட்டு, சுத்துமதிலும் கட்டுறாவாம். சும்மாயில்ல கோலுக்கு சலவைக் கல்லு - ஒவ்வொரு அறைக்கும் விசிறி.'

'அது சரி கிளிநொச்சியில வேலைக்காள் பிடிக்க கஷ்டமாயிருக்கே. என்ன செய்யிறா. ஏன் இப்ப உதெல்லாம்



கட்டுறா?'

எண்டா, வெளிநாட்டிலயிருக்கிற மக்கள் வந்தே கட்டப் போகின. அவை வாற காலத்தில இருக்க வெண்டு கட்டுறா. வேற ஆர் - எங்கட முகாமில இருக்கிற ராசனும் அவன்ர ஆக்களுந்தான் வேலை.

"அட பாவமே..... நாட்ட மீட்க போராடினவை எண்டைக்கும் கூலியாத்தான் இருக்கப் போகுதுகளோ இவையல் எப்ப வசதியாய் வாழுறது."

எங்கை வாழுறது. ஆராருக்கோ காணிபிடிச்சுக்குடுத்திட்டாங்கள். அவன்ர வீடு உயர்பாதுகாப்பு வலயமாம். கேளுங்கோ கதைய.

மக்களின்ட பாதுகாப்புக்குத்தான் பாதுகாப்பு படை எண்டது உலக நியதி இதென்னண்டா பாதுகாப்பு படைக்கு பாதுகாப்பாம். புதினந்தான். முன்னை ஒரு காலத்தில மலேசியா சிங்கப்பூர் எண்டு போனவையள் திரும்பிவந்த நேரம் இப்பிடித்தான் நடந்ததாம். ஊரில இருந்து மண்ணைக் காத்தவை எண்டைக்கும் இருந்த இரைதான். வந்தவை வடக்கு வீதியால போனா தெற்கு வீதியில சென்று மணக்குமாம்.

இவ்வளவு நாளும் காடுகரம்பைக்குள்ள இருந்தவையும் கலர் புல்லாதிரியினம். உண்மையா ஊருக்குழைச்சவைக்கு மீளக்குடியேறுறதும், பழையபடி வாழுறதும் கிடைக்குதோ இல்லையோ.

இந்த இடைத் தரகருகளின்ர கோட்டையள் மட்டும் எழும்பிக் கொண்டுதான் இருக்கு. இண்டைக்கோ நேத்தோ, நெடுகத்தானே - தமிழனுக்கு இந்த விதி - எழுதாவிதிக்கு அழுதா தீருமே.

பங்கார்உடைஞ்சு குப்பறகிடக்கிற கோயிலுக்கு முன்னால நிண்டு தோப்படிக்குது கிழவன். ''எணையப்பு - பிள்ளையார்.... கோயிலுடைஞ்சதோட வெளிநாட்டுக்குப் போட்டாரெணை..... எண்டன் ..... கிழவன் ஆறுதலா என்னை நிமிந்து பாத்துட்டு.'' இல்லப்பிள்ளை பிள்ளையார் இருந்ததாலதான் நாங்கள் ஊருக்க வந்த நாங்கள் எண்டார்.

"பத்தாயிரம் ஏறக்குறைய பத்தாயிரம் பிள்ளைகள் இறந்ததாலத்தான் ஊருக்க வந்த நான் எண்டு அவர் மட்டுமில்ல. இப்ப கனபேர் மறந்து போச்சினம். கல்லுக்கு பால்வார்க்கினம். கல்லறைக்கில்ல. வெளவால்கள் இருக்காது. பறக்கும் அல்லது தூங்கும்.

**மாயா**




**எனக்கும்** சிரித்திரன் ஆசிரியர் சிவஞான சுந்தரம் அவர்களுக்குமிடையில் நிலவிய நட்பானது எந்தவகையைச் சார்ந்தது என்பதை என்னால் தரப்படுத்த முடியவில்லை.

அது இரு இலக்கிய ஆர்வலர்களுக்கிடையிலானதா?
ஒரு படைப்பாளிக்கும் இரசிகனுக்குமிடையிலானதா?
தந்தைக்கும் மகனுக்கு மிடையிலானதா?
அண்ணனுக்கும் தம்பிக்கும்மிடையிலானதா?

அந்த அளவுக்கு உய்ர்ந்த கலைஞர் சிறந்த சிந்தனையாளன் மெல்லுணர்வுகளின் மொத்த வடிவம், அனைத்திலும் மேலாக நல்ல இதயம் படைத்த மனிதன். சிரிக்கச் சிரிக்கப், பேசுபவர் மட்டுமல்ல வரைகோடுகளாலேயே வயிறு குலுங்கச் சிரிக்க வைக்க வைக்கும் வல்லாளன்.

சிரித்திரன் ஏட்டில் மகுடம் போன்றது அவரது மகுடியார் பதில்கள். அவரைக்காணச் செல்லும் வேளைகளில் அம்மாத சஞ்சிகைக்குரிய மகுடியார் பதில்களின் கையெழுத்துப் பிரதிகளைத் தந்து தன் முன்னே இருந்து படித்துப்பார்க்கும் படி சொல்வார். மனதுக்குள் படித்துக் கொண்டிருக்கும் போது படிப்பவரின் முக உனர்வுகளை வைத்தே தனது பதில்களின் தரத்தைக் கணித்துக் கொள்வார். தன்னிலும் இளையவர்களாயினும் தவறு என்று சுட்டிக்காட்டினால் தயங்காமல் திருத்திக் கொள்வார்.

"அண்ணன், உங்களது ஒவ்வொரு மகுடியார் பதிலும் ஒவ்வொரு புதுக் கவிதைகள் போல் உள்ளன" என்று ஒரு முறை உளந்திறந்து கூறிய கருத்தினால் அவர் புளகாங்கித மடைந்து போனார்.

இத்தகைய பெருமகன் குமுறிக் குமுறி அழுத் காட்சியையும் பார்க்கும் அபாக்கியம் எனக்குக் கிட்டியது. பாரிசவாதம் கண்டு அவரது வலது காலும், கையும் செயலிழந்து வைத்திய சாலைக் கட்டிலிலே கிடந்த போது என்னை முதன் முதல் கண்டதும் ஏதோ சொல்ல முனைந்து முடியாத நிலையில் உடல் குலுங்க உணர்ச்சி வசப்பட்டு அழுதார்.

எழுத்தாளன், சிறந்த கருத்தோவிய வரைஞனின் அந்தக் கை வலுவிழந்து போனால் எப்படி அவனால் தாங்கிக் கொள்ள முடியும். அந்த இயலாமையும் ஏக்கமும் சொற்ப காலங்களே நீடித்தன. வயது அறுபத்தைந்து தாண்டிய நிலையிலும் தன்னம்பிக்கை தளராது இடது கைகொண்டு எழுதப்பழகி, கருத்தோவியங்களும் வரைந்த அவரது சாதனை சாமானியமல்ல. அவர் நோயுற்று வைத்தியசாலையில் கிடந்த வேளையில் சில நாட்கள் வைத்தியசாலையில் அவரோடு பகலில் நின்று பராமரிக்கும் பேறு எனக்குக் கிட்டியது. அந்த நோய்ப் படுக்கையிலும் அவருக்கே இயல்பான நகைச்சுவை அவரைவிட்டு விலகி விடவில்லை.

ஆரம்பத்தில், வைத்திய சாலையில் கடமையாற்றிய தாதியர் அவரை இன்னார் என்று இனம் காணவில்லை. அறிந்து கொண்ட பின்னரோ அவர்களின் கவனிப்பு பராமரிப்பு அபாரமாக இருந்தன அவர்களது அன்புத் தொல்லையால் அவர் அலுப்படைந்தே போனார்.

இத்தனைக்கும் அவர் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியின் பழையமாணவன் இற்றை வரையில் மிகப்பிரபல்யமாகப் பேசப்படுகின்ற அன்றைய அதிபர்பளான லோங் அடிகளார், மத்தியூ அடிகளார் ஆகியோரிடம் கற்றவர். அவர்களின் மாணவன் தான் என்பதில் பெருமை கொள்பவர். ஒரு நாள் வைத்திய சாலைக்குச் சென்ற என்னிடம்

"ஐசே இந்த நேர்ஸ்மார் படு மோசம் தாங்கள் நினைத்த நேரத்தில் எல்லாம் திடீர் திடீர் என்று என்னிடம் வந்து சிறுநீர் (பரிசோதனைக் காக) கேட்கிறாங்க. இப்படி திடீர் என்று என்னிடம் வந்து கேட்டால் சிறு நீர் வந்திடுமா. அப்படி நினைத்த உடனே என்னிடம் இருந்து சிறுநீர் வரவேனும் என்றால் எனக்கு முன்னால் ஆமி வரவேணும் இல்லாட்டி பாதர் லோங் வரவேணும் "என்று சிரிப்போடு கூறி என்னையும் சிரிக்கவைத்தார்.

அந்தச் சிரிப்புக்குள்ளும் பொதிந்திருந்த பொருள் என்னைச் சிந்திக்க வைத்தது அதாவது அவருடைய குருபக்தி. லோங் அடிகள் மிகக் கண்டிப்பானவர், கடமை, கட்டுப்பாடு, கல்வி விடயங்களில் அணுவளவும் பிசகாதவர். கையில் பிரம்புடனேயே பாடசாலையில் நடமாடுபவர். மாணவர் மத்தியில் சிம்ம சொப்பனம் அவர் .

**- நாவண்ணன் -**

சிரித்திரன் ஆசிரியர், லோங் அடிகளார் மீது வைத்திருந்த குருபக்தியையும் அடிகளிடம் தண்டனை பெற்றதால் இன்று தலை நிமிரிந்து நிற்பவர்களையும் எண்ணி வியக்கத் தோன்றுகிறது. இன்றைய ஆசிரியர், மாணவர் உறவினைச் சுட்டிக்காட்டும் வகையில் மாணவன் ஒருவனை வீதியில் கண்ட ஆசிரியர் மரம் ஒன்றின் பின்னே மறைந்து கொண்டு. மாணவன் கண்டால் பட்டப் பெயர் சொல்லிக் கேலி செய்வான் என்று நடுங்கும் காட்சியை கருத்தோ வியமாக வரைந்து சிரித்திரனில் வெளியிட்டிருந்ததே நினைவுக்கு வருகிறது.

இத்தகைய ஒரு மேதைக்கு 'மாமனிதர்' விருது வழங்கி 1991ஆம் ஆண்டில் தேசியத் தலைவர் அவர்கள் சிறப்பித்ததும் மிகப் பொருத்தமானதே.

தாயின் இதயமே குழந்தையின் பள்ளிக்கூடம். - ஹென்றி வார்ட் பீச்சர்.



# தாய்லாந்து - சமாதானப்பேச்சின் - புதுப்பரிமாணம் பயணமும் - பார்வையும்

தி.தவபாலன்

**பேச்சுக்கள** 2ஆம் கட்டம் ஆரம்பமாவதற்கு 6 மணித்தியாலங்களின் முன்பாகவே நாம் றோஸ்காடன் விடுதியை அடைந்தோம் றோஸ்காடன் விடுதியின் பாதையில் நாங்கள் நடந்து கொண்டிருந்த போது அவ்வழியே தாய்லாந்துப் பொலிஸ் கொமாண்டோக்களின் பாதுகாப்புடன் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் அவர்கள் தங்குமிடத்துக்குச் சென்று கொண்டிருந்தனர். அவர்களின் இருப்பிடமருகே பாதையில் கார்களை விட்டு அவர்கள் இறங்கினர். இறங்கிய அவர்கள் எம்மையும் TTN குழுவினரையும் கண்டனர். நாம் அவர்களருகே சென்ற போது தாய்லாந்து கொமாண்டோக்கள், புலனாய்வுப் பாதுகாப்புப் பிரிவினர் எம்மை பலமாகத் தடுத்தனர். எம்மை விடுமாறு அவர்கள் கூறியபோதும் நாம் அருகே செல்லத் தாய்லாந்து பாதுகாப்புப் பிரிவினர் விடவில்லை. கடைசியாக அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் விரிவாக விளக்கி எம்மை அனுமதிக்குமாறு கூறினார். அனுமதியின் பின் அவர்களுடன் உரையாடி 2ஆம் கட்டப் பேச்சுக்களில் இடம் பெறப்போகும் விடயங்கள் பற்றி திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களளிடம் பேட்டி எடுத்து எமது வானொலிக்கு தொலைபேசி வழியாக அனுப்பினோம்.

மாலை 3மணிக்கு பேச்சுக்களின் ஆரம்பமாக ஒளிப்படம் எடுக்கும் அனுமதிக்காக - ஊடகவியலாளர்கள் சோதனைக்காக ஒரு இடத்திற்கு அழைக்கப்பட்டனர். அங்கு ஊடகவியலாளர்களின் புகைப்படக் கருவிகள் இயக்கிப் பார்க்கப்பட்டு கடுமையாக சோதனையிடப்பட்டன.

குண்டறி கருவி, மோப்ப நாய்கள், புலனாய்வு சோதனையாளர்கள் என இந்தச் சோதனை இடம் பெற்றது. குண்டறியும் சோதனைக்கு இராணுவச் சீருடை அணிந்த வெள்ளையினத்தவர்கள் இருவர் மேற்பார்வையாளராக இருந்தனர். இவர்கள் 2 Bomb Spyal வாகனங்களை Rose Garyen இல் நிறுத்தியிருந்தனர் மேலும் தாய்லாந்து கொமாண்டோக்களின் இரு வான்களில் ஆயுதங்களுடன் அதிரடிப்ப டையினர் ஏற்றப்பட்டு - இயங்கு நிலையில் (Start) உறுமிக் கெண்டிருந்தது. தேவையேற்படின் எந்தநிலையிலும் சீறிப்பாய்ந்து நடவடிக்கை மேற்கொள்ள அவை தயார் நிலையில் இருந்தன. றோஸ்காடன் விடுதிச் சூழலில் கொமாண்டோக்கள் நடமாடிக் கொண்டிருந்தனர். விடுதியின் ஒவ்வொரு மாடியிலும் 2 கொமாண்டோக்கள் நிறுத்தப் பட்டிருந்தனர்.

விடுதியின் மேலே நீர்த்தாங்கியின் மேற்பக்கத்தில் தொலைநோக்கி, துப்பாக்கி, இரவு பார்வைகாட்டி சகிதம் 2 கொமாண்டோக்கள் சுற்றிப் பார்த்து அவதானித்துக் கொண்டிருந்தனர்.

றோஸ்காடின் விடுதி 'ரீ சைன்' (Rechine) என்ற ஆற்றின் ஓரமாக - ஆற்றின் வனப்போடு அமைக்கப் பட்டுள்ளது. அதில் ஆற்றில் பயணத்தைக்களிக்க ஒரு படகுத் துறை விடுதியுடன் அமைக்கப் பட்டிருந்தது அந்த இறங்கு துறையை மையமாக வைத்து தாய்லாந்து பொலிஸ் கடற்படையினர் படகில் ஆற்றில் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தனர். விடுதி ஓரமாக அப் படகு எந்த நேரமும் ஓடிக் கொண்டேயிருந்தது.

பேச்சுக்கள் நடைபெறும் தேக்கு மர மாளிகையருகேயும் ஒரு ஏரியிருந்தது. அந்த ஏரியின் ஒரு பக்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதி நிதிகளும், சிறிலங்கா அரசப் பிரதிநிதிகளும் தங்கி நிற்கும் விடுதிகள் இருந்தன.

இதனால் ஏரியினுள் எந் நேரமும் பொலிஸ் படகு ஓடிக் கொண்டேயிருந்தது. தவிர ஏரியூடாகப் பேச்சுவார்த்தை மண்டபம், பிரதிநிதிகள் தங்கும் விடுதிகள் என்பவற்றை படம் பிடிக்கவும் அப்பக்கங்களைப் பார்த்து தொடர்ந்து நிற்கவும் பொலிசார் தடை விதித்தனர். இதற்குள்ளும் சில ஊடகவியலாளர்கள் படங்களைப் பிடித்தனர்.

குறிப்பாக ஒன்றைக் கூறலாம் அங்கு சிறிலங்கா அரசுப் பிரதிநிதிகளை விட - தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கே அதிகபாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தன.


பேச்சுக் காலத்தில் அரசுப்பிரதிநிதிகள் சாதாரணமாக உலவினர். ஆனால் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் வெளியே வரும் போது அவர்களுடன் தாய்லாந்துப் பாதுகாப்புப் பிரிவினர் கவசங்கள் போல நகர்ந்தனர்.

இத்தகைய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் முதல் நாள் பேச்சுக்களின் ஆரம்பத்தில் செய்தியாளர்கள் படப்பிடிப்பு நடைபெற்றது. மண்டப வாசலிலும் கூடச் சோதனை செய்து 20 பேர் கொண்ட தொகுதிகளாகப் படம் பிடிக்க அனுமதிக்கப்பட்டது.

இதன்பின் முதல்நாள் பேச்சுக்கள் நடைபெற்றன. இந்த இடத்தில் றோஸ் கார்டன் விடுதியில் - ஊடகவியலாளர் அறை ஒன்றும் (Midea room) ஒழுங்கமைக்கப் பட்டிருந்தது. அங்கு கணனிகள் இணையத்தள வசதிகளுடன் வைக்கப்பட்டிருந்தன. தொலை நகல், தொலைபேசி வச்திகளும் செய்யப்பட்டிருந்தன. கொழும்பு சிங்கள தமிழ் ஊடகவியளாலர்கள் அதன் வழி இலவசமாகச் செய்திகளை அனுப்பினர். கொழும்பின் பிரதான இரு தமிழ் நாழிதல்கள் செய்தியாளர்களை அனுப்பவில்லை என்பது அவர்களுக்கு பேச்சின்பால்இருந்த அக்கறையின் வெளிப்பாடாக உணர முடிந்தது.

முதல் நாள் பேச்சின் முன்பதாக அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வழங்கிய நேர்காணல் வீடியோவை தமது TTN தொலைக் காட்சிக்கு அனுப்பும் முயற்சியில் மாலை வேளை அதன் பணிப் பாளர் குகன் குணரட்ணம் ஈடுபட் டிருந்தார்.

றோஸ்காடனில் பேச்சுக்களின் காட்சிகளை ஒலிபரப்ப தாய் லாந்தின் THAICOM, BB TV ஆகியன தமது செய்கோள் நேரடி ஒளிபரப்பு வாகனங்களை நிறுத்தி யிருந்தன. இவற்றினூடாக TTN தலைமைச் செயலகத்திற்கு வீடியோவை அனுப்ப குகன் மேற் கொண்ட முயற்சிகள் நிறைவேறாது போக தாய்லாந்தின் செய்கோள் அலைமேலனுப்பி (Uplink) நிலையை நோக்கிச் சென்றோம். முன்னர் குறிப்பிட்ட மூதாட்டியே வாகனத்தை ஓட்டிச் சென்றார்.



மழை பெய்து கொண்டிருந்தது தாய்லாந்தின் பிரதான சாலைகள் வழியாக வாகனம் ஓடிக் கொண்டிருந்தது.

மிக் நேர்த்தியாக சாலைகள், சாலைகளின் ஓரங்களில் தாய் லாந்து மன்னர், மகாராணியின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

எங்குகாணும் கட்டடங்களும் ட்ராகன் மிருக உருவத்துடன், அவர்களின் கட்டடக்கலையில் அமைந்திருந்தன. ஒரு பெரிய மைதானத்தில் தூரத்தில் நின்ற புத்தர் சிலை தெரிந்தது. அதனை சாக்யாமுண்யா என அந்தமூதாட்டி குறிப்பிட்டார். தாய்லாந்து ஒரு பௌத்த நாடு என்பதைக் குறிப்பிட வேண்டும். ஆனால் அங்கு பௌத்த விகாரைகளும், புத்தர் சிலைகளும் மலிவாக இல்லை. புத்தருக்கு சாக்சியமுனி என்ற பெயருள்ளது. இதனையே தாய்லாந்து மக்கள் 'சாக்யாமுன்யா' என்கி றார்கள்.

1மணி நேரப்பயணத்தின் பின் பாரிய அளவுகளில் செய்கோள் அலையனுப்பி, அலைவாங்கி சட்டிகள் (Dish) பல கோணங்களில் நிறுத் தப்பட்டிருந்தன.

அவற்றின் மத்தியில் இருந்த அலைய னுப்பி கட்டடத்துள் சென் றும் "நுழை வாயிலில் Nonthapuri satelite uplink station என எழுதப் பட்டிருந்தது.

அதனுள் நுழைந்தோம் அங்கு இளம் தாய்லாந்தியர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். குகன் அங்கிருந்தவர்களில் அரைகுறை ஆங்கிலம் தெரிந்தவர்களிடம் தனது நிலைமையைக் கூறி வீடியோவை பிரான்ஸ் TTN க்கு அனுப்ப சம்மதம் பெற்றுவிட்டார்.

அந்தச் சமயம் நாம் அவர்களிடம் அந்த தொழில்நுட்பம் பற்றி பேச்சுக் கொடுத்தோம். எவரும் அதற்கு பதிலளிக்கவில்லை பதிலாக தாய்மொழியில் ஏதோ கூறினார்கள்.

உயர் தொழில் நுட்பத்தையும் தொழில் நுட்ப வார்த்தைகளையும் கூடஅவர்கள் தாய் மொழியிலேயே உருவாக்கிப் பயன்படுத்துகிறார் கள். அங்கு அவர்களின் தொழில் நுட்பப் புத்தகங்கள் யாவும் தாய் மொழியிலேயே காணப்பட்டன. கருவிகளிலும் கட்டளைகள் தாய் மொழியிலேயே இருந்தன. கருவிகளின் வழி காட்டிகளும் (Catalocke) கூட தாய்மொழியில் தான் இருந்தன.

தாய்மக்களின் எண்ணிக்கை 6 கோடி. அந்த மக்களின் உறுதிப் பாட்டினால் நவீன தொழில் நுட்பம் தாய்மொழிக்கு மாறியிருக்கிறது, மாற்றப்பட்டிருக்கின்றது.

உலகில் தமிழ்பேசும் தமிழர்கள் 9கோடி பேர் இருக்கின்றனர்.

ஆனால் நவீன தொழில் நுட்பம் தமிழுக்கு மாற்றப்பட்டிருக்கிறதா? ஏன் மாற்றப்படவில்லை?

(மேலும் வரும்)

# சிந்திக்க வைத்த சந்திப்பு

**எனக்கு** கவிதை எழுத நல்ல விருப்பம். ஆனால் எப்படி எழுதுவதென்று தெரியாது. கவிதைகளை நன்கு வாசித்தாலும் எழுத வருகுதில்லை. எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் கவிதை எழுதுகிற ஒரு கவிஞர் இருக்கிறார். அவருக்கு என்னைவிட வயது குறைவு. ஒரு நாள் அவரிடம் போய் கவிதை எழுதுவது எப்படி என்று கேட்டேன்.

"கவிதை என்பது பள்ளிக் கூடத்தில் சொல்லிக் கொடுக்கும் பாடமல்ல. அது உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்க வேண்டும்." என்று சொன்னார். அவர் சொன்ன அந்த சிறு குறிப்பு கவிஞர் வைரமுத்து வினுடையது. இங்கே இப்படித்தான் பலபேர். தாங்களாக ஒரு கருத்தைச் சொல்லமாட்டார்கள். இன்னொருவரின் கருத்துக்களைக் காவி விவா தங்களில் சுழிப்பார்கள். அப்படி எவரும் சுழித்தால் அவர் பெரும் கவிஞர் என்ற மகுடத்தை அவருக்குச் சூட்டி விடுவார்கள். ஒரு கவிதை எழுதவேணும் என்று வந்த ஒரு ஆர்வலனுக்கு இதுதானா பதில்? நான் 'நன்றி' கூறிவிட்டு வந்து விட்டேன்.

பின்பு - ஒரு நாள் இலக்கியக் கருத்தரங்கு ஒன்று நடந்தது. இளங்கவிஞர்களுக்கான ஒன்றுகூடல் அது. மிக ஆர்வத்துடன் அங்கு சென்றேன். அங்கு நவீனத்துவம், பின் நவீனத்துவம், இஸங்கள் என்றெல்லாம் ஏதோ ஏதோ பேசினார்கள். கவிதை எழுதுவதென்றால் இனிப் பெரிய கஸ்டம் தான் அவர்கள் கூறிய அனைத்தையும் கற்றால் தானே கவிஞனாகலாம்.

அந்த ஒன்றுகூடல் நடந்ததற்குப் பின்பு .எனக்கொரு நெருடல், எல்லோரும் "கவனிப்பு" பெறுமளவுக்கு நான் கவிதைகள் எழுத வேண்டுமென்று.

எனக்குத் தெரிந்த ஒரு மாஸ்டர் நல்லாகக் கவிதைகள் எழுதுவார். அவர் முன்னைய பத்திரிகைகளில் நிறைய எழுதியிருக்கிறார். ஆனால், இப்ப எதுவும் எழுதுவதில்லை ஏனோ தெரியாது. அவரிடம் சென்று எனது விருப்பத்தை அவருக்குக் கூறினேன்.

"கவிதை என்பது உணர்தல் பற்றியது. முதலில் நீர் நல்ல 'கவிதைகளை வாசியும். அதற்குப் பிறகு எழுதுவாய். என்னிடம் நல்ல கவிதைப் புத்தகங்கள் இருக்கின்றன. தரலாம்."

"எனக்கு இப்போதைய கவிதைகள் ஒன்றும் புரியவில்லை மாஸ்டர். புரியாத கவிதைகளைத்தான் நல்ல கவிதைகள் என்று சொல்கிறார்கள்."

"புரியவில்லை என்பதற்காக அத்தகைய கவிதைகள் மீது காழ்ப்புக் கொள்வது எம்மிடத்திலுள்ள அகங்காரத்தின் விளைவு தம்பி... உந்தப் புரியவில்லை என்பதற்கு உதாரணம் சொல்லுகிறேன். "பிரம்மராஜன்" என்றோரு கவிஞர் "முதலைக்குப் பல்தேய்க்கும் பறவைகள் பற்றி" என்ற கவிதையில் முதல் வரிசையைச் சொல்கிறேன்.

பித்தப் பூ பிதற்றும்
பெண் தம்பூரா
தளர்ந்த பிளை இரண்டு
கலைந்த சிலை மூன்று
முலை நிழலை உறுஞ்சும்
குழந்தைக் கனவு
மண்டையில் கூரையில்
உதடுகள்
மனம் தளராத சிலந்தியின்
எச்சில் வீடு
குயில் புரியாத கூடு......

மேற்படிக் கவிதை "கணையாழியில்" பிரசுரமானது. நீல பத்மநாபன் (நாபன்) இந்தக் கவிதையைப் புரிகிறதா என மறைந்த கவிஞர் சண்முக சுப்பையாவிடம் கேட்டார். அது சுப்பையாவுக்கும் புரியவில்லையாம். இதே போலத்தான் தம்பி இந்த நவீன ஓவியங்களும்.

ஒரு நவீன ஓவியன் வீட்டில் ஒரு திருடன் புகுந்து எல்லாப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு சென்று விட்டான். வந்து சென்ற திருடனை அடையாளம் காட்ட அந்த ஓவியர் வரைந்து காட்டினாராம். அதை வைத்துப் பொலிஸ்காரர்கள் ஒரு துடைப்பான், பிளாஸ்டிக்வாளி, ஒற்றைக்கண்குரங்கு, ஆகியவற்றைக் கைது செய்து கொண்டு வந்து அந்த ஓவியருக்குக் காட்டினார்களாம்.

தம்பி.... புரியாத தன்மை என்பது பிரதானமாகக் கவிஞரிடத்தில் இல்லை. மாறாக வாசகனாகிய எம்மிடத்தில் தான் உள்ளது. நாங்கள் யாருக்கு கவிதை படைக்கின்றோம் என்ற விடயத்தில் தெளிவாக இருக்க வேணும். "போர் மண்ணில் கவிதை கள் கத்தி மாதிரி" இருக்க வேணும். மக்களுக்காகத்தான் கலை இலக்கியம். மக்கள் புரியும் படியாகத் தான் அதனை படைக்கவேணும்.

கவிஞர் 'மஹ்மூது தர்வீஷ்' கவிதையை இப்படிக் கூறுகிறார்.

கவிதை, வீட்டுக்கு வீடு
ஒரு விளக்கை
எடுத்துச்
செல்லவில்லையானால்
ஏழைகளுக்கு அதன் அர்த்தம்
என்னவென்று
விளங்கவில்லையானால்
அதை விட்டொழிப்பது
உத்தமம் என்று!

"தம்பி நீ எழுதத் துடிக்கும் ஒரு மொட்டு. நீ கூறிய மேற்படிக் கதைகள் உன் ஆர்வத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து விடும். உன் மனதில் படுகின்ற எல்லவற்றையும் எழுது - கவிதையில் ஒரு கவித்துவமிருந்தால் காணும். க்விதையைத் தீமானிப்பது காலம் தான். ஆகவே இந்தக் காலத்தை நீ உனது கவிதையில் கொண்டு வா" என்றார் மாஸ்டர்.

எரிசரன்

பெருமை, பொறாமை, பேராசை - இவையே மனிதர் உள்ளங்களைப்பற்றி எரியச் செய்யும் தீப்பொறிகள். - ஆலிகிரிய தாந்த்தே

# விளையாட்டுத்துறைக்கு முன்னைய காலங்களை விட இப்போது ஒரு சமூக அங்கீகாரம் உண்டு - அன்ரன் அன்பழகன்

**போர் நிறுத்த** உடன்படிக்கை மூலம் இலங்கைத்தீவில் அமைதிக்கான சூழ்நிலை பேணப்படுகின்ற இன்றைய காலகட்டத்திலும் தமிழ் மக்களுக்குரிய அடிப்படை மொழி உரிமை பேணப்படவில்லை. விளையாட்டு, கல்விமுறைமையையும், சமாதானத்தையும், இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் மிகச் சிறந்த ஊடகமாகும். இன ஐக்கியம் ஒருமைப்பாடு என்பவற்றை ஏற்படுத்துவதையே இன்றைய கல்விக் கொள்கை அடித்தளமாகக் கொண்டுள்ளது என இதன் இலக்குகளில் கொள்கை ரீதியாக வகுக்கப்பட்டு உள்ளபோதும். கல்வி அமைச்சின் அதிகாரிகள் நடைமுறையில் இவ்விடையங்களில் அசிரத்தையாகவே உள்ளனர்.

கல்வி அமைச்சின் அகில இலங்கை மடைட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்குரிய பதக்கங்களில் தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளதுடன் தன்ச்சிங்களத்திலேயே இவை உருவாக்கப்பட்டுள்ளன. விளையாட்டுப் போட்டிக்கான அழைப்புகள், கையேடுகள் என்பன கூட தமிழ் மொழிமூலப் படசாலைகளுக்கு சிங்களத்திலேயே அனுப்பி வைக்கப்படுகிறது.


உண்மையானதும் நேர்மையானதுமான ஒரு சமாதான சூழ்நிலையை இலங்கைத்தீவில் ஏற்படுத்துவதில் ஐக்கிய தேசிய முன்னியின் அமைச்சா ்களிடையே கூட ஒரு ஒத்திசைவான ஒரு அக்கறை இல்லையோ என எண்ணத் தோன்றுகின்றது. விளையாட்டுத்துறை அமைச்சு அண்மையில் களுத்து றையில் காணி அமைச்சின் முன் முயற்சில் ஏற்படுத்தப்பட்ட சமாதான விளையாட்டுப் போட்டியில் கையேடுகள் மும்மொழிகளிலும் அச்சிடப் பட்டிருந்தது ஒரு நல்ல முன் முயற்சியாகும் இதே போன்று கொழும்பு சுகதாச விளையாட்டரங்கில் நடந்து முடிந்த ஆசிய மெய்வல்லுனர்ப் போட்டிகளில் தொடராக மும்மொழிகளிலும் வழங்கப்பட்ட அறிவித்தல் முறை சிறப்பாக அமைந்திருந்தது. தமிழை இலங்கைத் தீவில் தேசிய மொழிகளில் ஒன்றாக ஏற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்தும் போதே தமிழ்மக்களும் இலங்கைத்தீவைத் தமது தாய்நாடாக ஏற்றுக்கொள்ளும் மனநிலை உருவாகும்.

அனுராதபுரம் பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் வடகிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மிகக் குறைவான ஆசிரியர்களே கலந்து கொண்டனர்.



மாகாணமட்டத்தில் இப்போட்டி நாடத்படாததும் இதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம். ஆசிரியர்களைச் செயற்திறனுடையவர்களாக வளர்த்துக் கொள்வதற்கு இவ்வாறான போட்டிகள் மிகவும் அவசியமாகிறது.

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் படிக்கின்ற போது என்னுடைய பதினைந்தாவது வயதில் எனக்கு மெய்வல்லுனர் நிகழ்வுகளில் பங்குபற்றும் வாய்ப்புக் கிட்டியது. இதற்குகாரணமாக அமைந்தவர் முரசுமோட்டையைச் சேர்ந்த தற்போதைய கிளிநொச்சி மாவட்ட விளையாட்டதிகாரி திரு.சு. கனகராசா அவர்கள். அவர் அப்போது உயர்தரவகுப்புக்களில் படித்துக் கொண்டிருந்தார். அவர் பாடசாலைக் காலங்களில் அகில இலங்கை போட்டியில் குண்டெறிதல், தட்டெறிதல் என்பவற்றில் கலந்து கொண்டு தங்கப் பதக்கள்களையும் வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டார். பாடசாலைக் காலங்களில் என்னால் மாவட்ட மட்டத்தில் குண்டெறிதல், நாநூறு மிற்றர் ஓட்டம் என்பவற்றில் இரண்டாம், மூன்றாம் இடங்களையே பெறமுடிந்தது.



அந்தோனிப்பிள்ளை அன்ரன் அன்பழகன் ஆசிரியர் - கிளி/ உருத்திரபுரம் மகாவித்தியாலயம், Ever green Athlet எனப்படும் இவர் கிளிநொச்சி மாவட்ட குண்டெறிதல் சாதனையாளராகவும் விளங்குகிறார். கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அபிவிருத்திச் செயலாளர், பகுதி நேர மெய்வல்லுனர் பயிற்றுனர் தகைமைச் சான்றிதழ் பெற்றுக்கொண்டவர்.

கிளிநொச்சி மாவட்டம் உருவாகிய பின் 1985ஆம் ஆண்டிலிருந்து 1998ஆம் ஆண்டு வரை குண்டெறிதல் போட்டியில் மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்று வந்துள்ளேன் மிகநீண்ட காலமாக கிளிநொச்சியில் மெய்வல்லுனர்ப் போட்டிகளில் பங்குபற்றியவன் நானாகத்தான் இருக்கும் என்று நினைக்கின்றேன். முன்னைய காலங்களைவிட இப்போது விளையாட்டுத் துறைக்கு ஒரு சமூக அங்கீகாரம் இருக்கின்றது. இது விளையாட்டுத்துறை வளத்திற்கு நல்ல உந்து சக்தியாக அமையும்.

ஒப்பீட்டளவில் வடக்கு கிழக்கு மாகாணம் அகில இலங்கைமட்டப் போட்டிகளில் கடைசி நிலையிலேயே உள்ளது. எனினும் உதைபந்தாட்டத்தில் மன்னார்மாவட்ட அணி கடந்த இரண்டு வருடங்களாக மூன்றாம் நிலையைப் பெற்றுள்ளது. அது விரைவில் முதல்நிலைக்கு வர வேண்டும் என்று விரும்புகிறேன் அம் மாவட்ட வீரர்களின் முயற்சியும் நம்பிக்கையும் அகில இலங்கைத் தெரிவுக்குழுவில் இடம்பெற்ற "டிக்கோணி" யின் வழிகாட்டலுமே அவர்களை இன்நிலைக்கு கொண்டு வந்துள்ளது. அதுமட்டுமல்ல மன்னார் 'புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அகில இலங்கை மட்டம், மாகாண மட்டம் என்பவற்றில் முதன்மையான இடங்களை உதைபந்தாட்டத்தில் பெறும் பாடசாலையாகும். சிறுவயதிலேயே நன்கு பயிற்றப்படும் வீர்களே வசதிகள் குறைபான நிலையிலும் அம்மாவட்டத்தின் வெற்றிக்கான பிரதானமான காரணமாக அமைகிறார்கள். விளையாட்டு வீர்கள் 12-16 வயதுக்காலத்திலேயே உரு வாக்கப்படுகின்றார்கள். எனவே கிளிநொச்சி, முல்லைத்தீவு,வவுனியா பகுதிகளிலும் குறித்த வசதிகளும், வளங்களும் வழங்கப்பட்டு தேர்ச்சி பெறவைப்பதன்மூலம் நல்ல விளையாட்டு வீர்களை உருவாக்க முடியும்.


நான் பெற்றுக் கொண்ட தங்கப்பதக்கத்தை விடவும் என்னால் பயிற்றுவிக்கப்பட்ட அக்கரயான்குளம் ம.வி. மாணவியான எஸ். தாரணி அகில இலங்கைப்பாடசாலைகள் விளையாட்டுப் போட்டியில் பெற்றுக் கொண்ட வெண்கலப்பதக்கமே எனக்கு அதிக மகிழ்ச்சியையும், கௌரவத்தையும் பெற்றுத் தந்ததாக நான் உணர்கின்றேன்.

2003ஆம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் சிறந்த மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு அனுமதியையும், ஒத்துளைப்பையும் எமது வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப. அரியரததினம் வழங்கியுள்ளார். இதன் மூலம் அதிக மாணவர்கள் அகில இலங்கைப் போட்டிகளில் வெற்றிபெற உதவ வேண்டும் என் பதே எனது விருப்பமாகும். இதே போன்று ஜிம், 400 மீற்றர் ஓடு பாதை, பயிற்சி உபகரணங்கள் என்பவற் றுடனான சிறந்த பயிற்சி மைதானத்தையும், மாணவர்கள் தங்கிப்பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பையும் கொண்ட மைதானமொண்றை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அமைத்துத்தர 'யுனிசெப்' நிறுவன உதவியுடன் முயற்சிப்பதாக கிளிநொச்சி வலயத்திட்மிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.ம. பத்மநாதன் உறுதியளித்துள்ளார்.

வசதி குறைந்த திறமையுடைய மாணவர்களுக்குரிய அவசியமான உதவிகளைச் செய்வதற்கு தாம் எப்போதுமே தளராக உள்ளதாகவும் 2003 தமிழீழ தேசிய விளையாட்டு விழாவில் இவர்களுக்கான ஊக்குவிப்புகள் வழங்கப்படும் என தமிழீழ விளையாட்டுத்துறையினர் தெரிவித்துள்ளமை எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

ஈ-சன்


௭ம் ஆண்டு நீங்காத நினைவில்



2ம் லெப் இசையருவி/ரூபி

(ஆறுமுகம் மோகனராணி)

தாயின் மடியில்
16-06-1975

தாயகமண்ணில்
27-12-1995

அன்பின் திருவுருவாய் எம்கண்முன்னே
நிழலாக நின்றவளே - காலனவன் உன்னை
கவர்ந்து கடந்து விட்டானே - எம் இனிய
செல்வமே - உன்னுடைய நினைவலைகள்
எம் உள்ளமதில் தாங்கித் துடியாக
துடிக்கின்றோம். வானத்து ஒளி விளக்காய்
நீ இருக்க வாழ் நாள் முழுவதும்
ஏங்குகின்றோம். மீண்டும் ஒருமுறை வந்திடுவாய்.

ஆறுமுகம்
சுப்பிரமணியம் றோட்,
இடைப்பிட்டி காரைநகர்.

என்றும் உன்
நினைவில்
குடும்பத்தினர்.

(2697)


நிதானமான சினம் விவேகிகளுக்கு அழகு. - ∴பிலமோன்.

# நேர்நோக்கு

## சமாதானத்தின் தீவிர விரோதிகள்...

**நோர்வே** நாட்டுக்கும் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடும் நோர்வே சமாதானக் குழுவுக்கும் எதிராக தென்னிலங்கையில் இப்பொழுது தீவிர பிரச்சாரங்களில் சில சக்திகள் ஈடுபட்டுவருகின்றன. நோர்வேத் தூதுவரை வெளியேற்ற வேண்டும் என ஒருபுறம் சிலர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகையில் அவருக்கெதிராக எடுக்கக்கூடிய சாத்தியமான நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியும் சிந்தித்து வருவதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான முயற்சிகளின் தொடர்ச்சியான இந்த நடவடிக்கை சிறிலங்காவுக்கே பாதிப்பாக அமையும் எனத் தெரிந்து கொண்டும் அதன் தலைவர்களாக உள்ளவர்களே ஈடுபடுவது சிறிலங்காவிற்கே சாபக்கேடாக அமைந்த ஒரு விடயமாகும்.

தொடரான இராணுவத் தோல்வியைத் தழுவிக் கொண்டிருந்த வேளையில் நோர்வேயைச் சமாதான முயற்சிகளில் ஈடுபடுமாறு அழைத்தது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கய முன்னணி அரசாங்கமே. ஆனால் இச்சமாதானப் பேச்சுக்கள் சமாதானத் தூதுவராகச் செயற்பட்ட எரிக் சூல் கெய்ம் அவர்களைச் இச் சமாதான முயற்சிகளிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும் என வலியுறுத்தி அவரை ஓரம்கட்டும் நடவடிக்கையில் சனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க ஈடுபட்டார்.

அதாவது சமாதான முயற்சிகளில் சந்திரிகா அரசாங்கம் கொண்டிருந்த அணுகுமுறை தொடர்பாகத் தனது கருத்தை எரிக் சூல்கெய்ம் அவர்கள் வெளியிட்ட போது, அவரை நடுநிலையாளர் - தாம் அழைத்த இந்த முயற்சியில் ஈடுபட்டார் என்றும் பாராது ஓரம் கட்டும் நடவடிக்கையில் சனாதிபதி ஈடுபட்டார்.

அதேவேளை நோர்வே சமாதான முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்ததும் அந்நாட்டின் மீதான காழ்ப் புணர்ச்சியை சிங்கள இனவாதிகளும் இனவாத ஊடகங்களும் வெளிப்படுத்தத் தொடங்கின. நோர்வேத் தூதரகத்தின் மீது குண்டுத்தாக்குதலையும் நடத்தின. அத்துடன் நோர்வேயின் சிறப்புத் தூதுவரை தனிப்பட்ட ரீதியில் கூட மிக மோசமாக விமர்சித்தன.

இருந்தபோதிலும் நோர்வே அரசாங்கமும் சரி சிறப்புத் தூதுவரும் சரி இச்சமாதான முயற்சிகளில் தம்மாலான தீவிர பங்களிப்பை வழங்கியே வருகின்றனர்.

இதனால் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுவரும் முன்னேற்றம் கண்டு பொறுக்கமுடியாத இனவாதிகள் கிடைத்த சிறு துரும்பைக் கொண்டு இப்போது நோர்வேத் தூதுவருக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை அதி உயர் பதவி வகிக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமருக்கும், வெளி விவகார அமைச்சருக்கும் நோர்வே தூதுவர் தொடர்பாக புகார்க் கடிதம் எழுதியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவின் இனவாதிகளையும் நேர்மையற்ற - அதிகார வெறிபிடித்த அரசியல்வாதிகளையும் பொறுத்து இனப்பிரச்சினை நீடித்துச் செல்வதே அவர்களிற்கு தேவையானதாக உள்ளது. இப்பிரச்சினையை சுமுகமாக தீர்த்து வைக்க முயல்வது சிறிலங்காவின் இறைமையை மீறும் செயலாகவேபடுகின்றது. அதே வேளை இம்முயற்சிகளுக்கு எதிராக எவராவது செயற்படுவார்கள் எனத் தெரிந்தால் அவர்கள் எவராயிருந்தாலும் நண்பர்களாக்கும் முயற்சியிலும் இறங்கத் தயங்குவதில்லை.

1980களில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட இந்தியாவைச் சிறிலங்காவிலுள்ள இனவாதிகளும் எதிர்கட்சி அரசியல்வாதிகளும் விரோதியாகவே பார்த்தனர். விமர்சித்தும் வந்தனர். ஆளும் கட்சியினர் கூட மனம் விரும்பி அவர்களின் சமாதான முயற்சிகளை வரவேற்கவில்லை. அப்பொழுது ஏற்பட்ட ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலனுக்கு சாதகமில்லாத போதும், அந்த முயற்சிகள் மூலம் இப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு கிட்டுமாயின் அதனை ஏற்றுக்கொள்ளவும் அந்த முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கவும் தமிழர் தரப்பு தயாராக இருந்ததுடன் ஒத்துழைப்பும் வழங்கி வந்தனர். அதேவேளை அந்த ஒப்பந்தத்தை தீவிரமாக எதிர்த்துச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் போராட்டம் நடத்தினர். இந்திய இராணுவம் வெளியேறும் வரை தமது ஆயுத வன்முறை தொடரும என ஜே.வி.பி.யினர் அறிவித்து பெரும் வனமுறைகளில் ஈடுபட்டனர். இந்திய அரசாங்கத்துக்கு எதிராக மட்டுமல்ல இந்தியப் பொருட்களை இறக்குமதி செய்வதோ, விற்பதோ குற்றம் எனவும் ஜே.வி.பி.யினர் வற்புறுத்தி வந்தனர். இதனால் மைசூர் பருப்பை, செம்பருப்பாக பெயர் மாற்றம் செய்யவேண்டிய நிலை கூட அன்றைய அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. அதாவது இந்தியா என்றாலே தீவிர வெறுப்பை ஜே.வி.பி. காட்டியது.

ஆனால் இப்பொழுது சமாதான முயற்சிகளிலிருந்து இந்தியா விலகி இருக்கையில் அதனை நட்புச் சக்தியாக்கி அன்றைய சமாதான முயற்சிகளுக்கு எதிரான சக்தியாக்கும் பகீரத முயற்சிகளில் பொதுசன ஐக்கிய முன்னணியினரும் ஜே.வி.பி.யினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

அதாவது தமது அரசியல் லாபத்திற்காக நாட்டை தீயிட்டுக் கொழுத்தவும் தயாராக உள்ள இவர்களின் சுயரூபத்தை உலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியமாகும் இவர்கள் என்றுமே சமாதானத்துக்கு எதிரான சக்திகள் என்பது இனங்காணப்பட்டு விட்ட விடயமாகும்.

**வேலவன்**

---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுசன ஐக்கிய முன்னணிக்கு இப்போது துனிச்சல் கிடையாது. ஊழல், மோசடி, உட்கட்சிப் புசல்கள், தலைமைத்துவ மோதல்கள் என்று கட்சி நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ள நிலையில் தேர்தல் என்பது அதற்கு படுதோல்வியைக் கொண்டுவரும் என்பதில் ஐயமில்லை.

தனது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் இராணுவத்தையும் கடற்படையினரையும் மற்றும் அவரது விசுவாசிகளாக இயக்கி வரும் ஈ.பி.டி.பி. போன்ற தமிழ்குழுக்களையும் பயன்படுத்திக் குழப்பங்களை உண்டுபண்ணி விடுதலைப்புலிகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி அவர்களை மீண்டும் யுத்தத்தை தொடங்கவைக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு தூண்டும் முயற்சிகளை விடுதலைப் புலிகள் முறியடித்து வருவதால் அந்த வகையிலும் தனது அபிலாசைகளை நிறைவேற்ற முடியாதவராகவே சந்திரிகா குழம்பியுள்ளார்.

சர்வேதேச சமூகம் அமைதி முயற்சிக்கு இப்படிப் பரந்த அளவில் ஆழமான ஆதரவை வழங்கும் என்றோ, விடுதலைப்புலிகளுடன் அவர்களைத் தடைசெய்த நாடுகளே வன்னிக்கு சென்று கைகுலுக்கி மனம்விட்டு பேசுமென்றோ, தங்கள் நாடுகளுக்கு அவர்களை வரவேற்குமென்றோ அவர் கனவில் கூட நினைத் திருக்க மாட்டார் இப்போது சர்வதேச அழுத்தம் தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பதை அவர் இப்போது குழப்பத்துடன் உணர்ந்து கொண்டுள்ளார்

தனது இறுதி அஸ்திரமாகவே இப்போது இந்தியாவை இப்பிரச்சினைக்குள் சிக்கவைக்கும் மூலோபாயத்தைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார். ஆனால் இந்தியாவும் இன்றைய நிலையில் இலங்கைப்பிரச்சினையில் மிகவும் ராஜதந்திரமாகவே நடந்து கொள்ளும் என்றே தெரிகிறது.

ஒருகாலத்தில் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் தந்திர வலைக்குள் வீழ்ந்தது போன்று சந்திரிகாவின் சதிக்குள்ளும் சிக்கிக் கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாது.

ஆகக் குறைய ஒட்டுமொத்தமாக தேசிய, சர்வதேசிய சூழலில் சந்திரிக்காவுக்கு ரணிலுடன் பினக்குப்பாடுகளுடனும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டே உள்ளது. இது தவிர்க்க முடியாத ஒரு அவசியமாகும். அடுத்த ஆண்டு முற்பகுதியிப் ரணில் - சந்திரிகா சந்திப்பில் எந்த வகையில் ஒரு இணக்கப்பாடு ஏற்படும் என்று கூறமுடியாவிட்டாலும். ஏதோ ஒரு வகையில் இணக்கப்பாடொன்றை எட்ட வேண்டும் என்ற அவசியத்தை இருதரப்பாலும் நிராகரிக்கவும் முடியாது.


**எமது ஈழமண்ணின் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள பல நோ. கூ. சங்கங்களின்**

தலைவர் முதல் முகாமையாளர், களஞ்சியப் பொறுப்பாளர், கிளை முகாமையாளர், உதவியாளர்கொள்முதல் பொறுப்பாளர், உதவியாளர் ஆகியவர்கள் முகங்கோணாமல், தட்டிக் கழிக்காமல், சாக்குப் போக்குச் சொல்லாமல் அன்பு கலந்த இதய சுத்தியோடு முழுமனதுடன் தரும் ஆதரவுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டவர்கள்.

**லாலா சோப்** எமது தயாரிப்பான **சன்சயின் சோப்** உற்பத்திக்கு இவர்கள் காட்டும் கரிசனையும், ஆதரவும், ஊக்கமும் எமக்கு என்றென்றும் தேவை. தொடர்ந்து எமக்கு ஆதரவளித்தால்தான் கைத்தொழில் வளத்தைப் பெருக்கி பலருக்கு நாம் வேலை வாய்ப்புக்களை வழங்க முடியும். அதன் மூலமே எமது உற்பத்திகளும் ஈழமண் ணில்

நல்ல வளம் பெறும்

என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

ஈழ வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் மக்களுக்கும் எமது இதய நன்றிகள்.

(சி-7588)

**லாலா சோப் தொழிற்சாலை அச்சுவேலி.**



**கூட்டுறவுப் பணியாளர்தராதரப்பத்திர (சாதாரண) தரப் பயிற்சிநெறி 2003 - ஜனவா்,ஜீன் விண்ணப்பம் கோரல்**

கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பயிற்சிக் கல்லூரியால் மேற்படி பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் வெளிவாரி பயிற்சியாளா்களிடமிருந்து கீழ்வரும் தகமைக்கமையக் கோரப்படுகின்றது.

01, கல்வித்தகமை:- க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையில் தமிழ், கணிதம், உட்பட நான்கு பாடங்களில் திறமைச்சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆறு பாடங்களில் சித்திபெற்றவா்,

அல்லது:- க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஏதேனும்3,பாடங்களில் சித்தி பெற்றவா்,

02. பயிற்சிக்காலம்:- ஜனவரி - ஜூன் 06, மாதம்
03. பயிற்சிக்கட்டணம்:- மாதம் 100/-
04. விண்ணப்பமுடிவுத் திகதி:- 2003.01.10.

மேற்படி விண்ணப்பப் படிவங்களை கிளி/ மாவட்ட கூட்டுறவுச் சபையில் பெற்று திகதிமுடிவுக்கு முன்னதாக செயலாளா், மாவட்ட கூட்டுறவுச் சபை, பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீா்கள்.

க. சிவகுமார், செயலாளர்
மாவட்ட கூ.சபை.கிளி

(சி-7592)



**லாலாவின்** வர்த்தக விளம்பர இலவசப் பத்திரிகை சேவை

அன்பார்ந்த மக்களே!

**ஆற்றல் மிக்க அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க அறிஞர்களின் ஆலோசனைப்படி இந்த சேவையை நாம் நடத்த முன்வந்துள்ளோம்!**

**எமது ஈழ மண்ணில் முதன் முறையாக 8 பக்கங்கள் கொண்ட மாதம் இருமுறை வெளிவரும் இலவசப் பத்திரிகையாக இதனைப் பிரசுரிக்க எண்ணியுள்ளோம் என்பதை எமது சோப் பாவனையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகிறேன்.**

(சி-7589)

உரிமையாளர்
**லாலா சோப் தொழிற்சாலை**
அச்சுவேலி




| | |
|---|---|
| ஒளிப்பதிவு – | கிருபா |
| ஒளிப்பதிவு உதவி – | நிலவன், புரட்சிநிலவன், தவநீதன், டயஸ், திலகன் |
| படத்தொகுப்பு– | க. சிவா |
| இசை – | இசைப்பிரியன் |
| தயாரிப்பு நிர்வாகம் – | சங்கர், பகலவன் |
| தயாரிப்பு – | திரைப்பட உருவாக்கற்பிரிவு, நிதர்சனம் |
| பாடல்– | வீரா, முல்லைக்கமல், நாவண்ணன் |
| பாடியோர் – | குமாரசாமி, சாந்தன், நிரோஜன், யுவராஜ் |
| பாடல் ஒலிப்பதிவு – | மலையவன் |
| ஒலிப்பதிவு – | அருமை, பாண்டியன், இலக்கோன் |

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்
ந.கேசவராஜன்

டிசம்பர் 31 தமிழீழத்தின் அனைத்து பகுதிகளிலும் வெளிவருகின்றது.

பதிப்புலகின் புதுப்பொலிவில்

# அந்திவானம் பதிப்பகம்

சிறந்த உங்கள் சேவைக்காக,

## நேரச்சு பதிப்புகள்

வேணாவில், புதுக்குடியிருப்பிலும்

யாழ் சாலை, கிளிநொச்சியிலும்

அழகு மிளிரும் அச்சுப்பதிப்புகளின் சிகரமாக இயங்கிவரும் ஒப்பற்ற பதிப்பகம்,

தனது பின்வரும் சேவைகளை உங்களுக்குத் தரக்காத்திருக்கின்றது!

நேரச்சு
(OFF SET)
துணியச்சு
திரையச்சு
(Screen Printing)
அச்சக வேலைகள்
முத்திரை
(Ruber Stamp)

கணினி வேலைகள்
நிழற்படி(photostat)
மென்றாட்காப்பிடுகை
(laminating)
கல்லச்சு(Roneo)
தட்டச்சு
பாடசாலை
உபகரணங்கள்

ஒரே இடத்தில், முதல்த் தரத்தில், குறித்த தவணையில், குறைந்த விலைகளில், கண்கவர் வண்ணங்களில், உடனுக்குடன் தேவைகளைப் பூர்த்தி செய்திட, தரம் நாடுவோர் தவறாது நாட வேண்டிய தன்னிகரற்ற பதிப்பகம்!

## அந்திவானம் பதிப்பகம்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.